
கல்கி
KALKI
3.5.2004
ரூ.6.00
பீட்ஸாவைத் தூக்கிச் சாப்பிடும் வெற்றி!
மினி கல்கி
இணைப்பு:
எல்லாமே எண்ணம்தான்!



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப்படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.



மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

முதிய பருவத்தில் மறதி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.



உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, Arumbakkam, Chennai - 600 106.
(Near Panchali Amman Temple) Tel. Off: 044 - 2475 5700, 2475 6700,
2475 7777 2475 5799,
e-mail:svhome@vsnl.net

பிட்ஸா ரூட்...!

பிட்ஸா அறிமுகமானபோது யாரும் நினைக்கவில்லை... இட்லி, தோசையை எதிர்த்து இந்த இத்தாலிய டிஷ் ஜெயிக்கும் என்று எவரும் நம்பவில்லை. இன்று தெருவுக்கு மூன்று அயல்நாட்டு பிட்ஸா 'மூலைகள்' தவிர, சுதேசி பிட்ஸா மையங்கள்!

இத்தாலிய பிட்ஸாவுக்குக் கிடைத்த அங்கீகாரத்தைத் தூக்கிச் சாப்பிட்டிருக்கிறது சோனியா காந்திக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம். கட்சியின் வெற்றியை, மிகச் சுலபமாகத் தலைவியின் வெற்றியாக்க உதவியிருக்கிறது கம்யூனிஸ்டுகளின் நிபந்தனை போடாத ஆதரவு.

பிரதமரை வாழ்த்தும் வேளையில், சுவதேசோ புவனத்ரயம் (மூவுலகங்களும் எனது தாயகம்) என ஆதிசங்கரர் சொன்னதை நினைவு கூர்வோம்.


அட்டை வண்ணப்படம்: **மீடியா ராமு**



இரண்டு, மூணு விஷயம்!

லொள் மொழி!

நாய், பூனை போன்ற செல்லங்களை ஆசையாக வளர்த்தால் மட்டும் போதுமா? அவை என்ன நினைக்கிறதோ,



அதை எஜமானன் தெரிந்து கொள்ள வேண்டாமா? ஜப்பானில் அதற்கும் ஒரு கருவியைக் கண்டுபிடித்து விட்டார்கள். பெயர் 'பௌலிங்வல்'.

நாயின் கழுத்தில் பொருத்தப்பட்டிருக்கும் வயர்லெஸ் மைக்ரோ ஃபோன் ஒன்று, நாயின் குரைப்பையும், முனகலையும் ஏற்றுக் கொண்டு, வாய்ஸ் ப்ரிண்டாக மாற்றி, மொழி பெயர்த்து, ஹேண்ட் ஸெட் ஒன்றின் திரையில் காட்டும்.

"எனக்குப் பிடிக்கலை", "என் பிஸ்கெட்டைத் திங்காதே", "எனக்கு வேணும்", "இன்னும் விளையாடலாம்" இப்படி இருநூறு விதமான வாக்கியங்களில் நாயின் உணர்ச்சிகளை 'பளிச்' என்று சொல்லி விடுமாம்.

- ஆர். லலிதா

தும்முவதற்கும் தடை!

'பொது இடங்களில் துப்பக் கூடாது' என்று நகரங்களில் தடை இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். பொது இடங்களில் தும்முவதற்கும் தடை விதித்து, கேரள அரசு உத்தரவு போட்டுள்ளது.

பொது இடங்களில் மக்கள் துப்புவதாலும், தும்முவதாலும் பல ஆரோக்கியப் பிரச்னைகள் ஏற்படுகின்றன. காச நோய், வைரஸ் காய்ச்சல், நிமோனியா போன்ற நோய்கள், தும்மல் போடுவதால் பரவும் வாய்ப்பு உள்ளது. எனவே மாநிலத்தின் முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் பகுதிக்ளில் உள்ள பொது இடங்களில் துப்புவதற்கும், தும்முவதற்கும் தடை விதித்து நோட்டீஸ் போர்டுகள் வைக்கவும், வீடியோ, மைக்செட்டுகள் மூலம் இது பற்றி பொது மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், ஏற்பாடு செய்யும்படியும் உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

- எஸ்.எஸ்.மணி,
திருவனந்தபுரம்



கோதாவரி சந்தனம்!

எங்கள் மூதாதையர் ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு முன் காஞ்சிபுரம் அருகிலுள்ள தூப்புலிலிருந்து திருநெல்வேலிக்கு அருகிலுள்ள கீழச்செவல் முதலிய கிராமங்களுக்கு குடி பெயர்ந்தனர். நாங்கள் இன்றும் தூப்பிலார்

என்றே அறியப்படுகிறோம்.

வேங்கடாசலபதியை குலதெய்வமாகக் கொண்ட நாங்கள் இட்டுக் கொள்ளும் கோபி, மகாராஷ்டிராவில் நாசிக் அருகே உள்ள பஞ்ச வடியிலிருந்து வருகிறது. அங்கே கோதாவரி நதிக்கரையில் சில இடங்களில் மட்டும் கிடைக்கும் வண்டல் மண்தான் இது. ஆனால் கோபி சந்தனம் இட்டுக் கொள்வதற்காக குழைக்கும் போது, மெல்லிய நறுமணம் எழுகிறது.

- எஸ். சுப்பிரமணியம்,
சென்னை - 41

சக்ஸஸ் பாய்!

முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கு அரிய பெருமை உண்டு. இவர் ஆறு தொகுதிகளி லிருந்து பார்லிமெண்ட்டுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்! 1952 மற்றும் 1967ல் பல்ராம்பூர்



* படம் : ஸ்ரீஹரி

தொகுதியிலிருந்தும், 1971ல் குவாலியர் தொகுதி யிலிருந்தும், 1977 மற்றும் 1980ல் புதுடெல்லி தொகுதியிலிருந்தும் 1991ல் 'விதிஷா' தொகுதி யிலிருந்தும், 1996ல் 'காந்தி நகர்' தொகுதியி லிருந்தும், 1991, 1996, 1998ல் லக்னோ தொகுதி யிலிருந்தும் வென்றிருக்கிறார். இப்போது 'லக்னோவில் நான்காவது முறையாக வென்றி ருக்கிறார். வேறு எந்த அரசியல்வாதியும் இவ் வளவு தொகுதிகளில் வென்றதில்லை.!

- சம்பத் குமாரி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

“ஏச்சுப்புட்டீங்களே - ஐயா
ஏச்சுப்புட்டீங்களே!
கத்துக்குட்டி வேணாமின்னு
குட்டிக்கதை சொன்னேன் - நான்
கேட்டுத் தலையாட்டிப்புட்டு
வோட்டுப் போடையில் வேட்டு
வைச்சு
ஏச்சுப்புட்டீங்களே - ஐயா
ஏச்சுப்புட்டீங்களே!”

போயஸ் தோட்டத்தை நெருங்கும் போதே, உள்ளேயிருந்து பாட்டு உரக்க ஒலித்துக் கொண்டிருந்தது! “என்னங்க இது, வாஜ்பாய் பற்றிதான் முந்தைய தேர்தலில் பாட்டுப் போட்டீங்கன்னு பார்த்தா...”

“இப்ப வாக்காளர் பேரிலே பாட்டுப் போடறேன், என்னய்யா தப்பு? ஏமாத்திப் புட்டாங்களே!”

“எல்லாருமா? உங்க பேச்சைக் கேட்க வந்தவங்க, உங்களுக்குத்தான் வோட்டு போட்டிருப்பாங்க... ஆனா உங்களுக்கு கூட்டம் குறைவாகத்தான் வந்ததுங்கிறதை கவனிக்காமப் போயிட்டீங்க...”

“கவனிக்காம என்ன? நல்லா கவனிச்சேன். அப்பவே அதை பகிரங்கப்படுத்திக்கிட்டு இருக்க முடியுமா?”

“இத்தனைக்கும் உங்களுக்கு வோட்டுப் போடாதவங்களை வாக்காளர் பட்டியல்லேர்ந்து நீக்க ரொம்ப முயற்சி நடந்திருக்கு...”

“அதையாவது ஒழுங்கா செய்தாளுங்களா! எல்லாம் அரைகுறை காரியம்!”

“அதுக்குத்தாங்க அரசு ஊழியர்களைப் பகைச்சுக்கக் கூடாதுன்றது. உங்களுக்குக் கெட்ட பேர் வாங்கித் தர மாதிரி காரியம் பண்ணி, உங்களைக் கவுத்துடுவாங்க...”

“விட்டுருவோமோ? டெஸ்மாவை எதுக்கு நீடிச்சிருக்கேன்னு நினைக்கிறே...?”

“டெஸ்மா உள்பட பல தவறுங்க நடந்து போச்சுங்க; சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னாடி திருத்திக்கிட்டா...”

“முதல்ல உன்னைத் திருத்தணும்...” என்ற ஜெ. உள்ளே திரும்பிப் பார்த்து, “சசி!” என்று உரக்க அழைத்தார்.

‘என்ன ஆபத்து வரப் போகிறதோ’ என்று பயந்து, அவசரமாக நடையைக் கட்டினேன். ஃபிளைட் பிடித்து, ஹைதராபாத் சென்று, சந்திரபாபு நாயுடுவிடம், “கம்ப்யூட்டர் என்ன சொல்லுது?” என்று கேட்டேன்.

“வறட்சி, விளைச்சல் இல்லை, வேலை இல்லை, வறுமை, தற்கொலைன்னு பட்டியல் போகுது” என்றார் சோகமாக.

“ஆக, ஐ.டி. மீது தப்பில்லை. அதைப் புரிஞ்சுக்கிட்டு, சரியான நடவடிக்கை எடுக்காததுதான் தப்பாப் போச்சு...”

“கண்ணிவெடியில என் கார் சிக்கி என் உயிருக்கு ஆபத்து வந்தப்பவே தாமதம் பண்ணாம தேர்தல் நடந்திருந்தா... எல்லாம் இந்த கிருஷ்ணமூர்த்தியால் வந்த வினை!”

செய்திகள், திரிப்பது

“எல்லாம் நன்மைக்கே! குண்டு வெடிச்ச கையோட தேர்தல் நடந்து, தெலுங்கு தேசம் தோற்றுப் போயிருந்தால், இன்னும் கேவலமால்ல போயிருக்கும்?” என்று அவரைச் சிறிதளவு சமாதானப்படுத்திவிட்டு, அவருடைய லாப்-டாப்பிலேயே இல. கணேசனுக்கு ஒரு ஈ-மெயில் அனுப்பினேன்.

“அம்மாவோடு கூட்டணி அமைக்காமல் பி.ஜே.பி. தனியே போட்டியிட்டு, எட்டு தொகுதிகளில் நின்றிருந்தால், இரண்டு மூன்றிலாவது ஜெயித்திருக்கலாமே, இப்போ உள்ளதும் போச்சே...”

பதில் உடனே வந்தது. “அகில இந்திய ரீதியிலேயே வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டது. சாண் போனால் என்ன?

முழும் போனால் என்ன?"

மெஸ்ஸேஜ் : மனம் தளராமல் நீந்தி, கரை ஏற முயற்சி செய்யவும்.

பெங்களூர் வந்து சேர்ந்தால், குமார கிருபா சாலையில் எஸ்.எம். கிருஷ்ணா வாக்கிங் போய்க் கொண்டிருந் தார். "முழுப் பொறுப்பு" "முழுப் பொறுப்பு" என்று அவர் வாய் முணு முணுத்துக் கொண்டிருந்தது.

"தோல்வியை ஒப்புக் கொண்டு முழுப் பொறுப்பு ஏற்றது கண்ணியமாகத் தான் இருந்தது. ஆனாலும் தேவே கௌடாவுடன் சேர்ந்து காங்கிரஸ் ஆட்சி அமைக்க முயற்சி செய்வதாகக் கேள்விப் படுவது ரசிக்கும்படி இல்லையே..!"

"ஏன், மத்தியிலும் கூட்டணி ஆட்சிதானே...?"

"அங்கே ஆரம்பத்திலிருந்தே அப் படித்தான் பேச்சு. கர்நாட காவில் அப்படி இல்லியே! சிறந்த முதல்வர் பட்டத் தைப் பலமுறை பெற்ற நீங்க, குப்புற விழுந்தா

செம்பியன்

லும் மீசையில் மண் ஒட்ட லைங்கிற கதையா நடந்துக்கிறது சரியாகுமா? மாற்றுக் கட்சியை ஆள விடுங்க. என்ன தப்பு நடந்ததுன்னு யோசிக்கப் பாருங்க. மக்கள் மதிப்பை திரும்பப் பெற முயற்சி எடுங்க..."

"சோனியா விருப்பம் அறிந்து செயல்படுவோம்..."

"காங்கிரஸ்காரங்களுக்குத் தெரிஞ்சது இந்த ஒரே பல்லவிதான்" என்று கூறி விட்டு டில்லி வந்து சேர்ந்தேன்.

வாஜ்பேயியைப் பார்த்துப் பேசிவிட்டு வெங்கையா நாயுடுவும் ஃபெர்னாண்டஸும் சேர்ந்த மாதிரி வெளியே வந்து கொண்டிருந்தனர்.

"நீங்க திருப்பதிக்குப் போய் மொட்டை போட்டாலும் போட்டீங்க. ஜனங்க பி.ஜே.பி.க்கே மொட்டை போட்டுட்டாங்களே" என்றேன்.

"மக்கள் தீர்ப்புக்குத் தலை வணங்கு கிறேன்" என்று வெங்கையா நாயுடு தலை தாழ்த்த, மொட்டை பளபளத்தது!

ஃபெர்னாண்டஸ்ஸைப் பார்த்து, "ஜார்ஜ் ஸார்! அமெரிக்க வீரர்கள் ஈராக்கில் கைதிகளைக் கொடூரமாக நடத்தியதை விடக் கேவலம் ஒன்று உண்டு என்றால், அது என்ன, சொல் லுங்க பார்ப்போம்" என்றேன்.

"நீ எதைச் சொல்ல வரேன்னு புரியுது. பாகிஸ்தான் ராணுவத்துடன் அசகாய சூரத்தனமாக போரிட்டதுபோல நாடகமாடி, வீடியோ எடுத்து, விருது கள் பெற்ற அசிங்கத்தைத் தானே..?"


"நீங்கதானே பாதுகாப்பு



அமைச்சரா இருந்தீங்க..."

"அமெரிக்க ராணுவ அமைச்சர் ரம்ஸ்ஃபீல்டை ராஜினாமா பண்ணச் சொல்லு. அப்புறம் நானும் தார்மிகப் பொறுப்பு ஏற்கிறேன்!" என்றார் ஜார்ஜ்.

"இந்த மாதிரி மனப்பான்மைதான் தே.ஜ.கூ. மண்ணைக் கவ்வவே காரணம். உங்களையெல்லாம் திருத்தவே முடி யாது" என்று கூறிவிட்டு, அவர் கோபத்தி லிருந்து தப்பிக்க தமிழகம் பறந்தேன்.



புக் பேங்க்

களின் மேல் ஏற்றிச் சொல்லிப் பாடும்போது, விட்டு விலகாமல் அதில் ஈடுபடும் மனம், பக்தியைவிட, அன்பையும், காதலையும், கருணையையும் அனுபவித்துக் கனிந்து விடுகிறது. மனம் கனிந்தால் பக்குவம் தானாய் வாய்க்கிறது. ஆழ்வார்கள் அப்படிக் கனிந்து பாடி வைத்த பிரபந்தங்களில் மூழ்கி எடுத்த முத்துகளின் சரம்.

அருந்ததி நிலையம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை-17 விலை ரூ.80

தஞ்சாவூரு ராணி-கோ. சேதுராமன்

ஆயுதங்கள் சாதிக்காததை அன்பு சாதிக்கும் என்பது ஆயிரங்காலத்து உண்மை. நாயக்க மன்னர்களின் உதவிக்கென்று வந்து, தஞ்சை மக்களை வசப்படுத்திய சரபோஜி மன்னரின் வம்சத்துக் கதை. தமிழும் தஞ்சையும் ஒன்றாய்த் தழைத்த கதை.

சாந்தி பதிப்பகம், 27, அண்ணா சாலை, சென்னை-600 002. விலை ரூ.60

தெய்வீகக் குரல் - ஏ.கே. கோபாலன் பப்ளிஷர்

அத்யயனம், யோகம், தியானம், பூஜை எல்லாமே ஈஸ்வரானுபவத்தைத் தருபவை. என்றாலும் இவற்றுக்குக் கடுமையான பயிற்சி தேவை. கிடைக்கிற அனுபவமும் பண்ணுகிறவருக்கு மட்டுமே கிடைக்கும். ஆனால் சுலபமாகவே அந்த அனுபவத்தைப் பெற ஏற்பட்டது சங்கீதம். பாடுகிறவர் மட்டுமில்லாது கேட்பவருக்கும் தெய்வீக அனுபவம் கிடைக்கிற அற்புதம் இது. ப்ராசீன ஸம்ப்ரதாய கீர்த்தனைகளை இயற்றி, ஸ்வரப்படுத்தி, சங்கீத உலகுக்கு வழிகாட்டிய ஸாகித்ய கர்த்தாக்கள் அனேகம். அந்தக் கீர்த்தனைகளைத் தொகுத்து சங்கீதம் கற்றவருக்கும், கற்கப் போகிறவர்களுக்கும் என்றே ஏற்பட்ட பொக்கிஷம் இந்நூல்.

ஏ.கே. கோபாலன் பப்ளிஷர், 9/2, சேதுப்பிள்ளை தெரு, நேரு நகர், சாலிகிராமம், சென்னை - 600 093. விலை ரூ.450

- விஷ்வக்

முதலாளி - ரா.வேங்கடசாமி

ஆண்டவன்தான் உலகத்துக்கு வாழ்வளிக்கும் முதலாளி. அவர் தம் சார்பாக அவ்வப் பொழுது ஒரு சிலரை பூமிக்கு அனுப்பி வைப்பதுண்டு. அழுத்தந்திருத்தமாய் திரைத் துறையில் முத்திரைகளைப் பதித்து, பலருக்கு வாழ்வும் வளமும் அளித்த மாடர்ன் தியேட்டர்ஸ் முதலாளியின் வாழ்க்கைக் கதை.

வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-17 விலை ரூ.120

காற்றின் மொழி-ஜி. விஜயபத்மா

நூற்றாண்டுக் காலமாக சுகத்திற்கு மட்டுமே என்று அடக்கி வைக்கப்பட்ட பெண்மை, இன்று அறிவும் திறனும் பெற்றும், சில இடங்களில் முடங்கித்தான் கிடக்கிறது. அந்த முடக்கமும், ஒடுக்கமும் நீங்கி, பெண்மை, சுதந்திர தாகமும் வேகமும் கொள்ள உதவும் பெண்ணியக் கட்டுரைகளின் தொகுப்பு.

விஜி பப்ளிகேஷன், சி-20, ஏ.ஜி.எஸ். காலனி 2வது குறுக்குத் தெரு, திருவான்மியூர், சென்னை. விலை ரூ.60

திவ்யப் பிரபந்தத் திரட்டு - தொகுப்பு பூ. ஜெயராமன்

மனித அனுபவங்களை, பாதிப்பவைகளை, தாம் கொண்டாடும் தெய்வங்


மாடுலர் கிச்சன்னா
விலை எக்கச்சக்கம்னு
யார் சொன்னது ?
ரூ. 12,350/- முதல்
வசதிக்கு ஏற்ற விலையிலே,
தேவைக்கேற்றவாறு
கிச்சன் அமைப்புகளை
செய்து கொள்ளலாம்.
• எமது நிபுணர்கள் உங்கள் இல்லத்திற்கு வந்து, இலவசமாக உங்களது சமையலறைக்கு ஏற்றவாறு அமைப்புகளை சிபாரிசு செய்வார்கள்.
• ஒரே சமயத்தில் மொத்தப் பணத்தையும் செலவழிக்காமல், பகுதி பகுதியாகவும் அமைப்புகளை செய்துக் கொள்ளலாம்.
• பழைய கிச்சன்களையும் புதுப்பித்து தருகிறோம்.
• எமது ஷோரூம்களில் பலவித கிச்சன்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் தரத்தையும், நேர்த்தியான அமைப்பையும் நேரில் கண்டு அறியலாம்.
நீங்கள் தமிழ்நாட்டில் எங்கிருந்தாலும் :
• இலவச ஆலோசனை • இலவச டெலிவரி
• இலவச Installation
• Water and Scratch-resistant European raw materials
• Corrosion-resistant German Hardware
• Manufactured with German Machines in Chennai
• Prompt and efficient after-sales service
For details Call our Modular Kitchen Division
044-5204 0047
JFA
SINCE 1985
ஜெயபாரதம் பர்னிச்சர் & அப்லயன்ஸஸ் ப்ரைவேட் லிமிடெட்
• இராயப்பேட்டை : 18, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, (லைலட் தியேட்டர் எதிரில்) சென்னை - 600 014. ✆ : 28131384, 28132403 e-mail : jfa@vsnl.com
• அடையார் : (மலர் மருத்துவமனை அருகில்) பழைய எண் 47, 1வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையார், சென்னை - 600 020. ✆ : 24405120, 5211 7857
• அசோக் நகர் : (ஜவஹர் வித்தியாலயா எதிரில்) புதிய எண் 73, 4வது அவென்யூ, அசோக் நகர், சென்னை - 600 083. ✆ : 23713493, 5203 3202
• அண்ணா நகர் : (அண்ணா நகர் கிளப் அருகில்) W-105, 2வது அவென்யூ, அண்ணா நகர், சென்னை - 600 040. ✆ : 26223377, 5210 3996
We also undertake all types of interior woodwork
JFA - 302

நாயுடு நாக் அவுட்!



• சந்திரபாபு நாயுடு

சந்திரபாபு நாயுடுவின் படு தோல்விக்கு என்ன காரணம்? அலசுகிறார் மூத்த பத்திரிகையாளரான பி.எஸ்.ஆர்.கிருஷ்ணா.

“இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, கம்ப்யூட்டர், ஈ–கவர்னன்ஸ் என்று ஒரு பக்கம் ஒரே ஹை டெக்கில் போன நாயுடு, இன்னொரு பக்கம் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவில்லை என்பதுதான் இதற்கு முக்கியக் காரணம். ‘மேம்பாலங்கள், சாலைகள், இவையெல்லாம் நகர்ப்புற மக்களுக்கு சௌகரியமாக இருந்தாலும், கிராமப்புற மக்களுக்கு என்ன பயன்?’ என்ற கேள்விக்கு, நாயுடுவால் சரியான பதில் தரமுடியவில்லை.

கடந்த நாலு வருடங்களாக ஆந்திராவில் மழை இல்லை. வறட்சியின் பிடியில் மாநிலத்தின் பல பகுதிகள் சிக்கித் தவித்தன. தண்ணீர்ப் பஞ்சம். மழை இல்லையென்றால், நாயுடு என்ன பண்ண முடியும்? ஆனால் அதையெல்லாம் யோசித்துப் பார்க்கிற மனோ நிலை மக்களுக்கு இல்லை. மின்சாரத் தட்டுப்பாடு, மக்கள் சந்தித்த இன்னொரு பிரச்னை. இதில், மின் கட்டண உயர்வு வேறு. கேட்க வேண்டுமா? மூன்றாவது காரணம், ஜாதி ரீதியிலான வோட்டுப் பிளவு. ஆந்திராவில் பிரதான ஜாதிகள் கம்மா, ரெட்டி இரண்டும் தான். கம்மா ஜாதியினரின் ஆதரவு நாயுடுவுக்கும், ரெட்டி ஜாதியினரின் ஆதரவு காங்கிரசுக்கும் உள்ள பாரம்பரிய வோட்டு வங்கி. இதர ஜாதிகளான யாதவர்கள், கப்பு மற்றும் தலித்களின் ஆதரவு நாயுடுவுக்குக் கிடைக்காமல், காங்கிரஸின் பக்கம் போய்விட்டது. தேர்தல் முடிவுகளை இசை மாற்றி விட்டது.



‘மாநிலத்தில் நிலவிய வறட்சியைச் சமாளிக்க நாயுடு சரியான நட



• மனைவியுடன் ராஜசேகர ரெட்டி...

வடிக்கை எடுக்கத் தவறி விட்டார்' என்று காங்கிரஸ் கட்சி பிரசாரம் செய்தது. தெலுங்கு தேசக்கட்சிக்கு எதிராக மக்களை கோபமடையச் செய்தது இப்பிரசாரம். காங்கிரஸ் தலைவர் விரிவான பாதயாத்திரை மேற்கொண்டது இதற்கு முக்கியக் காரணம்.

தெலுங்கானாவை தனி மாநிலமாகப் பிரித்துத் தரவேண்டும் என்ற கோரிக்கையுடன் களமிறங்கிய தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சியுடனும் கூட்டணி அமைத்துக் கொண்டு, கூடவே கம்யூனிஸ்ட் கட்சிகளையும் இணைத்துக் கொண்டது காங்கிரஸ் கூட்டணி. இது வெற்றிக்குப் பெரிதும் உதவியிருக்கிறது.

'துவாக்ரா' என்ற மகளிர் திட்டத்தின் மூலமாக, தெலுங்கு தேசத்துக்கு பெண்கள் மத்தியில் நல்ல பெயர் இருந்தது. நாயுடுவின் பிரசாரக் கூட்டங்களுக்கும் பெண்கள் திரளாக வந்ததைக் காண முடிந்தது.

ஆனால் கூட்டம் வோட்டாக மாறவில்லை.

நக்ஸலைட்டுகள், இந்த முறை பாரம்பரிய பாணியில் தேர்தலைப் புறக்கணிக்க அழைப்பு விடுக்கவில்லை. இதனால், ஆளுங்கட்சி மீதான மக்கள் அதிருப்தி, காங்கிரஸ் ஆதரவு வோட்டாக மாறி, வாக்குப் பெட்டிக்குள் விழுந்து விட்டது.

கடைசியாக, அனுதாப அலையில், தேர்தலைச் சந்தித்தால் ஜெயிக்கலாம் என்று நாயுடு போட்ட கணக்கு தப்பாகி விட்டது.

தேர்தலில் கட்சியின் பழைய நபர்களைப் புறக்கணித்து, புதியவர்களுக்கு சீட் கொடுத்தது தவறு என்று இப்போது புரிந்து கொண்டிருப்பார்."

"புதிய முதலமைச்சரான ராஜசேகர ரெட்டி எப்படிப்பட்டவர்?"


"நல்ல மனிதர். படித்தவர். பண்பானவர். ஆனால் ரொம்ப உணர்ச்சிகரமான மனிதர். பத்தாண்டுகளுக்கு முன் விழுந்த காங்கிரஸைத் தட்டி எழுப்பி, உற்சாக மூட்டி, ஆட்சியில் அமர்த்தியிருப்பது அவரது அபார சாதனை."

"ஆந்திர ஆட்சி மாற்றத்தினால், கிருஷ்ணா நதி நீர் சென்னைக்குக் கிடைப்பது சிக்கலாகுமா?"

"முதலமைச்சர் நாயுடுவா? ரெட்டியா? என்பதல்ல பிரச்னை. கிருஷ்ணாவில் சென்னைக்குத் தருமளவுக்கு தண்ணீர் இருக்கிறதா என்பதுதான் பிரச்னை!"

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படம்: **கௌதம்ராம்**



தோல்வி ஏன்?

இந்தப் படுதோல்வியிலிருந்து மீள அ.இ.அ.தி.மு.க. என்ன செய்யப் போகிறது? க. சுப்பு சொல்கிறார் —

"எங்கள் மீது அதிருப்திக்கு என்ன காரணம்? உலகம் முழுவதும் நடைபெறும் பொருளாதார சீர்திருத்தத்தைத்தான், மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வந்தது. உதாரணமாகச் சொல்வதென்றால், அரசு ஊழியர் செலவினங்களைக் குறைக்க எடுத்த நடவடிக்கைகள், மற்றும் பொது விநியோகத் திட்டத்தில் உள்ள குளறுபடிகளை நீக்குதல். நீண்ட கால நோக்கத்தில் பார்க்கும் போது இது போன்ற நடவடிக்கைகள் மக்களுக்கு நன்மையைப் பயக்கும். ஆனால் எதிரணியினர் இந்தப் பிரச்னைகளை உணர்ச்சிபூர்வமாகப் பயன்படுத்தி எங்களுக்கு எதிராக மக்களைத் திருப்பி விட்டார்கள்.

அடுத்தபடியாக, கட்டாய மதமாற்றச் சட்டம். சிறுபான்மை மக்களை எங்களிடமிருந்து இந்தச் சட்டம் விலக்கி வைத்து விட்டது. "கட்டாயமாக மதம் மாற்றினால்தான் தண்டனை" என்ற சட்டத்தின் நோக்கத்தை மறைத்து, எதிரணி செய்த மலிவான பிரசாரத்தால், சிறுபான்மை மக்கள் எங்களைப் புறக்கணித்திருக்கிறார்கள். அடுத்து மதுபானக் கடைகளை அரசே ஏற்றதும், மணல் குவாரிகளை அரசே எடுத்துக் கொண்டதும், சமுதாயத்தின் செல்வாக்குள்ள பிரிவினரைப் பாதித்து விடவே, அவர்களும் எங்களுக்கு எதிராகத் திரண்டு விட்டார்கள்.

கந்து வட்டியால் ஏழைகள்தான் பாதிக்கப்பட்டார்கள். அதைத் தடுத்து நடவடிக்கை எடுத்ததில், பணபலம் கொண்டவர்கள் ஆத்திரப்பட்டு விட்டார்கள். ஆடு, கோழி பலியிடக் கூடாது என்ற சட்டமும், (அது வாபஸ் வாங்கப்பட்டாலும்) எங்களுக்கு எதிராக கிராமப்புற மக்களை திசைதிருப்பி விட்டது. புரட்சித் தலைவி கொண்டு வந்த ஒவ்வொரு சீர்திருத்தமும், சட்டங்களும், மக்களின் ஒட்டுமொத்த நன்மையை மட்டுமே மனதில் கொண்டு செய்யப்பட்டவைதான். ஆனால் பலமான எதிரணி செய்த தவறான பிரசாரம் எடுபட்டு விட்டது.

எது எப்படி இருந்தாலும், புரட்சித் தலைவி எடுத்த நடவடிக்கைகள் மக்களின் நன்மைக்காகவே, என்று இனி தீவிரமாகப் பிரசாரம் செய்து மக்களுக்குப் புரியவைப்போம்."

சந்திப்பு : ப்ரியன்








தாமரையில் நீர்த்துளி!

"ஷ்யூர். வீ வில் டு அவர் பெஸ்ட். தாங்க்யூ."

இதைக் கூறியது யார்? ஜாக்பாட் நிகழ்ச்சியில் குஷ்பூ. "உங்க நிகழ்ச்சியிலே நிறைய ஆங்கில வார்த்தைகள் வருது. அதைக் குறைக்க முயற்சி செய்யுங்களேன்" என்று நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒருவர் முன்வைத்த வேண்டுகோளுக்கு, குஷ்பூ அளித்த பதில்தான் அது.


சன் டி.வி.யில் வைகோ சம்பந்தப்பட்ட செய்திகளை இருட்டடிப்புச் செய்கிறார்கள் என்ற புகார் உண்டு. ஆனால் யாரும் எதிர்பார்த்திராத வகையில், ஜெயா டி.வி.யில் தேர்தலுக்கு முந்தைய நாட்களில் வைகோவின் பேச்சுகளை நிறைய நேரம் ஒளிபரப்பினார்கள். குண்டு கல்யாணமோ, ராதாரவியோ வைகோ மேக்கப்பில் வந்துவிடவில்லை. நிஜமான வைகோதான். "கள்ள வோட்டு போட்ட ஒரே காரணத்தினால்தான் தி.மு.க. இதுவரை சென்னையில் வெற்றி பெற்றிருக்கிறது" என்பதில் தொடங்கி, "கலைஞர் குடும்பத்துச் சொத்துக்கள் என்னென்ன தெரியுமா?" என்ற நீண்ட பட்டியல் வரை, வைகோ விளாசித் தள்ளினார். கிட்டத்தட்ட எல்லா அரசியல் வாதிகளுமே பச்சோந்திகள்தான் என்றாலும், அன்று வைகோ நவரசங்களுடன் முழக்கமிட்ட பேச்சை ஜெயா ஒளிபரப்பியது, சாமர்த்தியம்.



யாருடைய 'கை' ஓங்குகிறது என்பது தொடக்கத்திலேயே தெரிந்துவிட, ரபி பெர்னாடின் முகத்தில் சோகம். சொன்னதையே இருமுறை சொல்லிக் கொண்டிருந்தார். தவிர, பலமுறை தவறாகக் கூறித் திருத்திக் கொண்டார் (முதன் முதலில் அவர் கூறியது '35 இடங்களில் அ.தி.மு.க கூட்டணி தமிழகத்தில் முன்னணியில் இருக்கிறது). அனுபவமிக்க ஒருவர் இப்படி ரியாக்ட் செய்தது வியப்பு. எதிர்பார்த்தபடியே 'பா.ஜ.க ஏன் தேசிய அளவில் தோல்வி கண்டது' என்பதை விவாதித்த ஜெயா டி.வி., தமிழக நிலைமை குறித்து விவாதத்தில் கண்டுகொள்ளாமல் விட்டார்கள்.

'மக்கள் யார் பக்கம்' (விஜய்) கோபி, தெளிவாகவும், சிரித்த முகத்துடனும் நிகழ்ச்சியை நடத்தியது குறிப்பிடத்தக்கது. 'இதற்காகத்தானே காத்துக் கொண்டிருந்தேன்' என்பது போல், முகமெல்லாம் புன்னகையுடன் திருநாவுக்கரசர் தேர்தல் முடிவுகளைப் பற்றிக் கருத்துக் கூறினார். "எங்க கட்சி இருக்கே, அது யாரு இருக்காங்கன்றதைப் பத்திக் கவலைப்படாது. யாராவது போறாங்கன்னாலும் பெரிசா வருத்தப்படாது" என்பதிலிருந்து தொடங்கி, ஜெயலலிதாவின் யதேச்சாதிகாரப் போக்குதான் இந்தத் தோல்விக்குக் காரணம் என்பது வரை, அவர் கூறியதைப் பார்த்தால், அவர் 'தாமரை'யில் இனி தண்ணீர்த் துளியாகத்தான் இருப்பார் என்று தோன்றியது.

— ஆதர்ஷ்



ஒளிர்ந்தது பிரசாரம்; ஒளிந்தது வெற்றி!

கோடி கோடியாக மக்கள் வரிப்பணத்தைச் செலவிட்டு, பா.ஜ.க. தனக்கு விளம்பரம் தேடிக் கொண்டது. இதனால் மக்கள் ஏமாந்துவிடவில்லை. 'வேலையில்லாத் திண்டாட்டம் தீராத வரை, கிராமப்புற விவசாய மக்களின் துயர் தீராத வரை, இந்தியா ஒளிர்கிறது என்று கூறி, எங்களை ஏமாற்ற முடியாது' என பதிலளித்து விட்டார்கள்.

மதசமத்துவத்துக்கு இந்த ஆட்சியில் இடைவிடாத அச்சுறுத்தல் இருக்கும்போது, 'பாகிஸ்தானுடன் நட்புறவு பலப்படுகிறது' என்ற பிரசாரம் மக்களிடம் எடுபடவில்லை.

விவசாயிகள், கிராமங்களின் நலன் புறக்கணிப்பு; ராமர் கோயில் விவகாரத்தில் ஓயாத நெருடல்கள், சர்ச்சை, சில மாநிலங்களில் இதனால் வன்முறை; ஹிந்து அடிப்படைவாத அமைப்புகளுடன் சல்லாபம்; தேர்தல் பிரசாரத்தில் சினிமா நடிக நடிகையரை வளைத்துப் போடும் மலின யுக்தி....

- இவை அனைத்தையும் நிராகரித்து மக்கள் வோட்டுப் போட்டிருப்பதாகத்தான் நாம் கொள்ள வேண்டியிருக்கிறது.

தமிழகத்திலோ, ஜெயலலிதாவின் மக்கள் விரோத ஆட்சிக்குச் சாட்டையடியாக பதில் கிடைத்திருக்கிறது!

விலைவாசி உயர்வு (பஸ் கட்டணம், பால் கட்டணம் முதல் சிமெண்ட் விலை வரை); மத்தியதர வர்க்கத்தின் ரேஷன் கார்டு பறிப்பு; எதிர்க்கட்சியினர் மீது பழிவாங்கல்




கல்கி



2004 மே 23
தாரண வைகாசி 10
மலர் : 62
இதழ் : 43

மிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




நடவடிக்கை, பத்திரிகைகள் மீது அர்த்தமற்ற வழக்குகள்; இலவச மின்சாரம் ரத்து; காவிரிப் பிரச்னையில் மெத்தனம்; அரசு மதுக்கடைகள் திறப்பு; குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க, தவறான திட்டங்களையே மேற்கொள்ளும் பிடிவாதம்; பொடா துஷ்பிரயோகம்; டெஸ்மா அவசரச் சட்டம்; அரசு ஊழியர்கள் பந்தாடல்... என ஜெ.ஆட்சியை மக்கள் நிராகரிப்பதற்கான காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழகத்தின் நாற்பது தொகுதிகளில் ஒன்றைக்கூட தேசிய ஜனநாயகக் கூட்டணி பெற முடியவில்லை என்பது, மக்களுடைய முழுமையான நிராகரிப்பின் அடையாளம்.

''இது மத்திய அரசுக்கான தேர்தல், எனவே இதன் முடிவு மாநில அரசு மீதான விமர்சனம் அல்ல'' என்று வாதிட முடியாது. நாற்பது தொகுதிகளுள், முப்பத்து மூன்றில் அ.தி.மு.க. வேட்பாளர்களே நிறுத்தப்பட்டனர். அதிலும் இரு வரைத் தவிர, மற்றவர்கள் எல்லோரும் புதுமுகங்கள். ஆகவே ஜெயலலிதாவின் பிரதிநிதிகளாகத்தான் வாக்காளர்கள் இவர்களைப் பார்த்திருக்கிறார்கள். இவர்களின் தோல்வி, ஜெயலலிதாவின் தோல்விதான். தமிழகத்தில் ஒரு பா.ஜ.க. வேட்பாளர்கூட வெற்றி பெறவில்லை என்பது, அக்கட்சியை மட்டுமின்றி, அது அமைத்த கூட்டணியையும் மக்கள் நிராகரித்ததை உணர்த்துகிறது. தொகுதிக்கு நல்லது செய்து, ஓரளவு பெயர் வாங்கிய பொன். ராதாகிருஷ்ணன் (நாகர்கோயில்) தோற்கடிக்கப்படுவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்...? அவர் சார்ந்துள்ள பா.ஜ.கவையும், அக்கட்சி கூட்டணி அமைத்துள்ள அ.தி.மு.கவையும், மக்கள் நிராகரிக்கின்றனர் என்பது தெளிவாகிறது. 'ஒளிர்கிறது' பிரசாரமோ, குட்டிக் கதைகளோ, சூப்பர் ஸ்டார் தலையீடோ தமிழ்நாட்டில் எடுபடவில்லை!

தோற்ற கூட்டணியைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள், நொண்டிக் காரணங்களைச் சொல்லிக் கொண்டிராமல், தங்கள் போக்கைத் திருத்திக் கொள்வது நல்லது. நிராகரிக்கப்பட்ட கோபத்தில், மேலும் பல மக்கள் விரோத நடவடிக்கைகள் எடுக்கும் துரதிருஷ்ட முடிவுக்குத் தமிழக முதல்வர் சென்றுவிடக் கூடாது.

காங்கிரஸின் தலைமைப் (அயல்நாட்டவர்) பிரச்னை, உட்கட்சிப் பூசல்,



மாநிலங்களில் பலம் வாய்ந்த கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதில் தடுமாற்றம், கடைசி நேரத்தில் தோண்டியெடுக்கப்பட்ட போஃபர்ஸ் விவகாரம், ...இவை அனைத்தையும் மீறி அக்கட்சிக்கு மக்களின் பலமான, தீர்மானமான ஆதரவு கிடைத்திருக்கிறது. சோனியா மட்டும் இன்னும் சற்று முன்னதாகவும், சிறப்பாகவும் திட்டமிட்டு இயங்கியிருப்பாரேயானால், தனிப்பெரும்பான்மை கூட பெற்றிருக்கலாம்.

தற்போது காங்கிரஸ் மிக அதிக இடங்கள் பெற்ற தனிக்கட்சி என்ற முறையில், பிற கட்சிகளின் உதவியோடு ஒரு புதிய அரசை நிறுவ இருக்கிறது. பாரதிய ஜனதா கட்சியின் நற்பணிகளை இப் புதிய அரசு தொடரும் என்றும், பா.ஜ.க. இழைத்த தவறுகளை அது தவிர்க்கும் என்றும் நம்புவோம்.

கூட்டணி அமைப்பைக் காப்பதிலும், பலமாக வைத்திருப்பதிலும் காங்கிரஸ் கவனம் செலுத்த வேண்டும்.

அனைத்துக் கொள்கை முடிவுகளிலும் கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனையும் சம்மதமும் பெற்று இயங்கி, நல்லாட்சி வழங்க வேண்டும். கூட்டணி அங்கத்தினர்கள் அனைவரும் ஏற்கக் கூடிய குறைந்தபட்ச செயல்திட்டம் உருவாக வேண்டும். தி.மு.க. போன்ற பலமும் அனுபவமும் வாய்ந்த கூட்டணிக் கட்சியினரும் சிறப்பாக ஒத்துழைக்க வேண்டும்.


சட்டசபைத் தேர்தல் வேறு, நாடாளுமன்றத்துக்கான தேர்தல் வேறு என்று மக்கள் புரிந்து கொண்டு, சிறப்பான முறையில் வாக்களித்துள்ளார்கள். மிகச் சிறந்த முதல்வர் என பலமுறை தேர்வு செய்யப்பட்ட எஸ்.எம்.கிருஷ்ணா தலைமையில், காங்கிரஸ் கர்நாடகத்தில் அடிவாங்கியிருப்பது, இதற்கு சாட்சி. கிருஷ்ணாவின் ஆற்றல் பெங்களூர், மைசூர் போன்ற பெருநகரங்களைக் கடந்து கிராமங்களை எட்டாததே இதற்குக் காரணம்.

இந்திய ஜனநாயகம் முதிர்ச்சி அடைந்து வருகிறது; இந்திய வாக்காளர்கள் வளர்ச்சி அடைந்து வருகிறார்கள். இந்திய அரசியல்வாதிகள் விரைவிலேயே தங்களைத் திருத்திக் கொள்வது நல்லது. ○





வருவாரா!



மிக நேர்த்தியான, சிற்ப வேலைப்பாடுகளுடன் பிரும்மாண்டமான கோயிலை உருவாக்குகிற சிற்பியின் திறன் உயர்ந்தது என்றால், பல நூறாண்டுகள் கழித்து, அந்தக் கலை வடிவங்கள் சிதையாமல், வனப்பு குறையாமல், மெருகேற்றி அதே விதமாய் புதுப்பிக்கும் சிற்பியின் திறன் இன்னும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். அதை நிரூபிக்க தற்போது நடந்து கொண்டிருக்கிறது, 'இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியா திருவல்லிக்கேணி' பார்த்தஸாரதி சுவாமி திருக்கோயிலின் புனருத்தாரணப் பணி. அதே வடிவம் மாறாத சிற்பங்கள், இலேசாகப் பழுதுபட்டவற்றுக்கு வெறும் தொட்டுப் பூச்சூட்டல்கள் (Touchup), விமானத்தின் உள்ளேயும் வெளியேயும் பழுதுபட்ட மரங்களுக்கு மாற்றாக தேக்கு, இலவ மரங்கள், சுவர்களும் தூண்களும் மூலிகை கொண்டு அக்கால முறைப்படி சுத்தம் செய்யப்பட்டு, ஸாரதி எழுந்தருளும் மண்டபத்தில் தரிசனத்தை மறைத்த சுவர்கள் அகற்றப்பட்டு, ஸேவை சாதிக்கவும், திருமஞ்சனம் காணவும் விசாலமாக்கப்பட்டு... தயாராகிறார் ஸாரதி!

நூறாண்டுகளுக்கு மேல் பழைமையான திருத்தேரும் அதே சிற்பங்களோடு, அதே சாஸ்திரீய வடிவில் 25 லட்சம் செலவில் தயாராகி வருகிறது.

வருகிற வைகாசி 11ம் நாள் புண்ய தினத்தில் புனருத் தாரணப் பணி பூர்த்தியாகி, சம்ப்ரோக்ஷணம் நடைபெறப் போகிறது. 'பரதன் தம்பி சத்துருக்கனனும் இலக்குமனோடு மைதிலியும்' ஸேவை சாதிப்பதைக் காணவும், சிற்பிகளின் திறனைச் சொல்லவும், கலியன் வரவேண்டும். வருவாரா!

- வி.

"யாரைப் பற்றியும் கவலையில்லை!"

—ரஜினி

உலகிலேயே கௌரவம் மிக்கதும், அதிகப் பரிசுத்தொகை கொண்டதுமான நோபல் பரிசு பற்றிய அதிகாரபூர்வமான தளம் www.nobel.se. திருடு போன நம் தாகூரின் நோபல் பரிசு பற்றிய தகவல்களை, பதக்கத்தை இத்தளத்தில்தான் இனி காண முடியும். உயிரோடு இருப்பவர்களுக்குத் தான் நோபல் பரிசு வழங்க வேண்டும் என்ற விதிமுறையினால், அமைதிக்காக நம் மகாத்மாவுக்கும், இலக்கியத்திற்காக லியோ டால்ஸ்டாய்க்கும் பரிசு கிடைக்கவில்லையாம். இது வரை யார் யாருக்கு - எந்தெந்தத் துறையில் பரிசு வழங்கப்பட்டுள்ளது - என நூறாண்டுத் தகவல்கள் கொட்டிக்கிடக்கின்றன. இதுவரை நோபல் பரிசு பெற்ற கண்டுபிடிப்புகள் - குழந்தைகளுக்கும் விளங்க வைக்கும் வகையில் 'கேம்ஸ்'ம் இருப்பது இத்தளத்தின் சிறப்பம்சம்.

(வைரமுத்து சார்... வெப்சைட் அட்ரஸ் குறிச்சுக்கோங்க... உங்களுக்குத் தேவைப்படும்)

நம்ம சூப்பர் ஸ்டார் பற்றி அவரது ரசிகர்கள் என்ன சொல்கிறார்கள் என, rajinifans.com-ல் நோட்டம் விட்டோம். ரஜினியின் மறக்க முடியாத தோழி - ஸ்ரீப்ரியா, பிடித்த இந்திய நடிகர் - கமல், நடிகை - ஹிந்தி ரேகா, பிடித்த ரோல் - ரொமான்டிக், பிடித்த மொழி - ஆங்கிலம், பிடித்த நாவல் - பொன்னியின் செல்வன், அம்மா வந்தாள், பிடித்த அரசியல்வாதி - சிங்கப்பூரின் லீ - குவான் - யூ, பிடித்த பேச்சாளர் - வாட்டாள் நாகராஜ், பிடித்த இசையமைப்பாளர் - இளையராஜா, பாடலாசிரியர் கண்ணதாசன் என நீளும் பட்டியலில் - தமிழினத்தின் ஒரே தலைவர் என கலைஞர் பற்றியும், "நான் எனக்காக வாழ்கிறேன், நான் யாரைப் பற்றியும் கவலைப்படமாட்டேன், ஆனால் எல்லோருக்கும் மரியாதை கொடுப்பேன்" என ரஜினி பற்றியும் உள்ளது.



(என்ன தலைவா... உங்க வலைத் தளமும், உங்க 'வாய்ஸ்' மாதிரி - முரண்பாடா இருக்கே?!)

ஜோக்:

''குழந்தைக்கு உங்க மனைவியை சாப்பாடு கொடுக்கவிடாம, ஏன் வேலைக்காரியை ஊட்டச் சொல்றீங்க?''

''என் மனைவிக்கு 'ஊட்ட'சத்து இல்லைனு டாக்டர் சொல்லியிருக்காரு!''

ஜாலி எஸ்.எம்.எஸ்

சிம்ரன், ஜோதிகா, த்ரிஷா, கரிஷ்மா, கரீனா, ஐஸ், சிநேகா... எல்லாரும் என் நம்பர் கேட்டு உன்னை தொல்லை செய்வாங்க... கொடுத்துடாதே நண்பா?



வட்டமேஜை

குதூகலம் தந்த முத்து!

✉ 'அவர்' என்று தான் வேலு கதாபாத்திரத்தை கந்தர்வன் அழைக்கிறார். எட்டு வயதுச் சிறுவன், "அப்பத்தா! வேலு வந்திருக்கான்" என்கிற போது உயிர் போகிற மாதிரி இருக்கிறது. தீண்டாமைக் கொடுமையை இப்படி 'நச்' என்று வேறு யாரால் சொல்ல முடியும்? கந்தர்வன், கந்தர்வன் தான்.

"ரெண்டு தடவை அட்டாக் வந்து தப்பிச்சிருக்கேன். இன்னும் நான் அதிக நாள் வாழணும் தோழர்" என்று தன் ஆசையை வெளிப்படுத்திய கந்தர்வனை காலன் கொண்டு சென்றது எப்படி?

மயிலாடுதுறை, இரா. இராஜேந்திரன்

✉ மறைந்த படைப்பாளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவர்களின் சிறந்த கதைகள் அருமை. சுதாமூர்த்தியின் அனுபவ வெளிப்பாடுகள் சிறப்பாக உள்ளன. ஓவியக் கண்காட்சி குறிப்புக்களும், 'துண்டு'க்கான ஓவியமும் நிறைவு.

மதுரை, நந்தினி மாசிலாமணி

✉ ஜெய் பாஸ்கரனின், 'உணர்திறன்' கவிதை யதார்த்தமாக இருந்தது.

வயலூர், பா. குணா

✉ சிறந்த குறும்படங்கள் பற்றி அவ்வப்போது இதழ்களில் படிப்பதோடு சரி. சென்னை போன்ற பெரு நகரங்களில் கூட சில அரங்குகளில் காட்டப்பட்டு, பின்னர் பெட்டிகளில் முடங்கிப் போய்க் கொண்டிருந்தது. வாழ்வளிக்கும் 'பொதிகை'க்கு நன்றி சொல்லலாம்.

நெல்லை, கண்மணி

✉ கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல் வெங்கய்யா நாயுடு கார்ட்டூன் பளீர். குறிப்பாக டி.ராஜேந்தரின் சர்க்கஸ் கோமாளி வேஷம் ஜோர்.

திருவாரூர், எஸ். பாலச்சந்தர்

✉ மினி கல்கியில் 'அக்குபங்சர் அ முதல்...' கட்டுரை படித்தேன். அதை கட்டுரை என்பதை விட, வரலாறு என்று தான் சொல்ல வேண்டும். அக்கு பங்சர் சிகிச்சை பற்றி விரிவாகவும், தெளிவாகவும் எழுதியிருந்தீர்கள். வர்மக்கலை தான் அக்கு பங்சர் சிகிச்சை முறையாக, நமது போக முனிவரால் சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது வியப்பூட்டும் புதிய செய்தி.

மொரட்டுப்பாளையம், இரா.வி.சௌந்தர்யா விசாலினி

✉ 'பிரதமர் யார் என்பதை விடவும், கொள்கை என்ன என்பதே ஜனநாயகத்தில் மிக முக்கியம்' என்ற தலையங்க வரிகள் 'நச்'சென்று இருந்தது! நல்லதொரு மதச்சார்பற்ற தலைவர், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதமராக வேண்டுமென்ற 'கல்கி'யாரின் விருப்பம், ஒட்டுமொத்த இந்திய மக்களின் எதிர்பார்ப்பையே எதிரொலித்தது!

வேலூர் - 6, வே.ந.கதிர்வேல்

✉ 'வலம்புரி முத்து' சத்தியப்ரியனின் புதிய தொடர் ஆரம்பமே கலகலப்பூட்டி, எங்களை குதூகலம் அடையச் செய்துவிட்டது.

மதுரை - 16, பி. ராஜசேகரன்


'வந்தே மாதரம்' பாடல் மூலம் வந்து குவிந்த புகழைப் போலவே, ஏ.ஆர். ரகுமானுக்கு இன்னொரு பாடல் அமையப் போகிறது என்கிறார்கள் இசை ரசிகர்கள். 'ஜனகணமன... ஜனங்களை நினை.' என்று எழுச்சிகரமாகத் தொடங்கும் அந்தப் பாடல், 'ஆய்த எழுத்து' படத்தில் இடம் பெற்றிருக்கிறது. மைக்கேல் வசந்த் என்ற கல்லூரி மாணவனாக வரும் சூர்யா, செல்வநாயகம் என்ற அரசியல்வாதியாகத் தோன்றும் பாரதிராஜாவுக்கு எதிராக, மாணவர்களை ஆயிரக்கணக்கில் திரட்டிச்சென்று, ஆர்ப்பாட்டம் நடத்துவது போன்ற பின்னணியில், இந்தப் பாடலை படம் பிடித்திருக்கிறாராம் மணிரத்னம். இந்தப் பாடல் முழுமைக்கும், எழுச்சியோடு திரண்டு வரும் மாணவர் கூட்டத்தை, டாப் ஆங்கிள்



களில் சுழற்றிச் சுழற்றிக் காட்டுவதற்காக, அகேலா கிரேனை வானில் இஷ்டத்திற்கு அலையவிட்டிருக்கிறார் ஒளிப்பதிவாளர் ரவி கே. சந்திரன்.

இந்த எழுச்சிப் பாடல் தவிர, மாதவன் - மீரா ஜாஸ்மின், சூர்யா-இஷாதியோல், சித்தார்த் - த்ரிஷா ஜோடிகளுக்கு தனித்தனியே டூயட். அவற்றில் 'யாக்கை திரி, காதல் சுடர்' பாடலுக்கு, இணைய தளங்களில் இப்போதே அதிக வாக்குகள். பாடல்கள் எத்தனை பிரமாதம் என்றாலும், ஆய்த எழுத்தின் தலையெழுத்தை எழுதப் போகிறவர்கள் ரசிகர்கள். அநேகமாய் நல்லபடியாக எழுதுவார்கள் என்று நம்பலாம். காரணம், திரைக்கதை எங்கும் ஆக்‌ஷன், அடிதடி.

– ஸ்ரீ



நடக்கும் என்பார்; நடக்கும்!

அக்னிசர்மா பக்கம்

மே 19 முதல் 25 வரை

மேஷம் :

உங்க ராசியில் புதன், ராகு, குரு கிரகங்களின் வெற்றிக் கூட்டணிக்கு பலம் கூடிட்டதால, துணிவு, தன்னம்பிக்கை, தெய்வபலம் எல்லாம் கூடிடும். உத்யோகத்தில் எல்லாமே அனுகூலம்தான். இயந்திரம், இண்டஸ்ட்ரீஸ், கெமிக்கல், மருத்துவம் துறைகள் வளர்ச்சி காணும். ஒற்றுமையால குடும்பத்தில குதூகலம் அதிகரிக்கும். சந்தோஷமான சின்ன டூர் ஒண்ணு போய் வருவீங்க.

ரிஷபம் :

எந்தக் கூட்டணி பக்கம் சாயறதுன்னு சுயேச்சைகள் குழம்புகிற மாதிரி, சிறு குழப்பங்கள், பிரச்னைகள் வந்து போகும். எந்த வேலையானாலும் யோசிச்சு முடிவெடுங்க. உத்தியோகத்தில் மாறுதல் காத்துக்கிட்டிருக்கு. ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ் தொழில்கள் முன்னேறும். புதிய வீடு வாங்கவோ, கட்டவோ, நேரம் கூடி வரும்.

மிதுனம் :

பதவி கிடைக்கலைன்னாலும், டெபாசிட் திரும்பக் கிடைச்ச வேட்பாளர் மாதிரி உங்க மன சஞ்சலம், குழப்பம் எல்லாம் விலகி நிம்மதி கிடைக்கும். இதுக்கு மேல நீங்க போடற திட்டங்கள் வெற்றியடைய வாய்ப்பு இருக்கு. கொஞ்சம் செலவுகள் கூடும். ஆனாலும் சமாளிச்சுடுவீங்க. கலைத்துறை, பத்திரிகைத் துறை, சட்டம், காவல், இராணுவம் துறைகள்ல உள்ளவங்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நிறைவேறும். பெண்களுக்கு நகை, துணி மணின்னு சேரும்.

கடகம் :

கிரகங்களோட கூட்டணியில அதிரடி மாற்றங்கள் ஏற்படறதால, எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படும். சின்னச் சின்ன பிரச்னைகள், வந்து போகும். சுபச் செலவு வந்து சந்தோஷப்படுத்தும். உத்தியோகத்தில் அனுகூலமான திருப்பம் உண்டாகும். காண்ட்ராக்ட், உலோகம், கமிஷன் துறைகள்ல லாபம் காத்துக்கிட்டிருக்கு. பூர்வீகச் சொத்து விவகாரங்கள் தீர்ந்து, குடும்பத்தில் ஆனந்தம் கூடும். பெண்களுக்கு எல்லா வகையிலும் ஆதரவு கூடும்.

சிம்மம் :

தெற்கில் தொய்ந்து போயிருந்த தேசியக் கட்சி நிமிர்ந்து எழுந்து பார்க்கிறது மாதிரி, இதுவரை இருந்த தடை, எதிர்ப்பு, எல்லாம் மறைஞ்சு, தெளிவான மனநிலை கிடைக்கும். எதிரிங்க அட்ரஸ் இல்லாமப் போயிடுவாங்க. உத்தியோகத்தில, கூட இருக்கிறவங்க ஒத்துழைப்பு கிடைக்கும். வெளியூர் / வெளிநாடு போக வேண்டி வரலாம். தயாரா இருங்க. குடும்பத்தில மனஸ்தாபம் மறைஞ்சு, சகோதர வழியில் சுமுகமான உறவு பலப்படும். பெண்களுக்கு நிம்மதியான மனநிலை ஏற்படும்.

கன்னி :

உங்க ராசியில் கிரகங்கள் ஒட்டுமொத்த ஆதரவையும் உங்க பக்கமே தர்றதால, நீங்க திட்டம் போட்டு வட்டம் போட்டதெல்லாம், கட்டம் கட்டமா வெற்றியாயிடும். தேவைக்கேற்ற பண வசதி கிடைக்கும். உத்தியோகத்தில உங்களுக்கு ஜாக்பாட் காத்திருக்கு. பாராட்டும், பதவி உயர்வும் கை நீட்டக் காத்திருக்கு. எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரிகல்ஸ், கம்ப்யூட்டர் ஆகிய தொழில்கள் அனுகூலம் பெறும். குடும்பத்தில எல்லா வகையிலும் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிலவும். பெண்களுக்கு, உறவினர் வருகை உற்சாகம் தரும்.

துலாம் :

நானே தரேன் பதவின்னு வெற்றிக் கூட்டணி கூப்பிட்டுக் கொடுத்த தனிக்

கட்சி மாதிரி, எதிர்பாராத வரவும், புதிய அறிமுகங்களும் உற்சாகப் படுத்தும். உத்தியோகத்தில் நீண்ட காலமா கிடைக்காமலிருந்ததெல்லாம் கிடைச்சு திக்குமுக்காட வைக்கும். கமிஷன், அழகு சாதனங்கள், தோல் பொருள் கள், எண்ணெய் வகை வியாபாரங்கள் லாபத்தின் உச்சிக்குப் போகும். குடும் பத்தில சுப மங்கள காரியங்கள் கூடி வந்து சந்தோஷம் கூடும். பெண்கள் உற்சாகமாக, உல்லாசமாக சந் தோஷத்தில மிதப்பாங்க.

விருச்சிகம் :

வாக்காளர் பட்டியல்ல பேர் மாறிப் போய் கடைசியில கிடைச்ச மாதிரி, குழப் பத்தின் முடிவிலதான் தெளிவு கிடைக் கும். உத்தியோகத்தில் எதிர்ப்புகள் மெல்ல மறையும். இரும்பு, இயந்திரம், கெமிக்கல்ஸ் துறைகள் லாபம் கூடும். குடும்பத்திலிருந்த மனஸ்தாபம் நீங்கி தெளிவு கிடைக்கும். சுப மங்கள காரியங்கள் நிறைவேறும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை உற்சாகத்தை அள்ளிக் கொடுக்கும்.

தனுசு :

பெரும்பான்மை கிடைச்ச வெற்றிக் கூட்டணி அமைச்சிருக்கு உங்க ராசி கிரகங்கள். உற்சாக மனநிலை, எடுத்த காரியங்களில் வெற்றி, ஆரோக்கிய மேன்மைன்னு உங்க காட்டுல மழை. பண நடமாட்டமும், புது அறிமுகங்களும் கூடி டும். உத்தியோகத்தில் இதுவரை இருந்த குழப்பங்கள் மறைஞ்சு, பதவி உயர்வும், மாறுதலும் கிடைக்கும். குடும்பத்தில் குழப்பங்கள் மறைஞ்சு, அமைதி ஏற்படும். திருமணமாகாதவர்களுக்கு சுபயோகம் கூடி வந்துடும். பெண்களுக்கு புதிய பொருள்கள் கிடைச்சு, உல்லாச உற்சாக மனநிலை ஏற்படும்.

மகரம் :

எந்தப் பக்கம் போனாலும் லாபம்தான் உங்க கட்சிக்கு. எதிர்ப்புகள் எல்லாம் டெபாசிட் இழந்து அடங்கிப் போயிடும். வார ஆரம்பத்தில் கொஞ்சம் தடைகள் வந்து, பிறகு காணாமப் போயிடும். உத்தி யோகத்தில ஏற்படற திருப்பம் அனுகூலம் தரும். திட்டமிட்ட காரியங்கள் நிறைவேறும். கமிஷன், உலோகம், தோல்



பொருள்கள் வியாபாரம் லாபத்தில் மிதக்கும். கோர்ட், வழக்கு எல்லாம் தீர்ந்து போய், குடும்பத்தில அமைதி கிடைக்கும். பெண்களுக்கு எதிர்பாராத பண வரவு, உறவினர் வருகைன்னு வந்து உற்சாகப் படுத்தும்.

கும்பம் :

தலைவர்கள் தேடி வர்ற தனிக்கட்சித் தலைவர்போல எல்லா வகையிலும் நன்மை கள் கிடைக்கும். வி.ஐ.பி.கள் உதவிக்கு வந்து உங்க திட்டங்களை நிறைவேற்றித் தருவாங்க. அதிர்ஷ்ட தேவதை உங்க உத்தியோக விஷயங்கள்ல கூடவே வந்து எடுபிடிவேலை செய்யக் காத்திருக்கா. மருத்துவம், கெமிக்கல்ஸ், பொன் வெள்ளி ஆபரணங்கள் - தொழில்கள் அளவோடு லாபம் தரும். சுப மங்கள யோகம் கூடி வந்து குடும்பத்தில மகிழ்ச்சி கூடும். பெண்கள் நினைச்சபடியே எல்லாம் நிறைவேறும்.

மீனம் :

டெபாசிட்டாவது தேறுமான்னு தவிச்சு, கடைசியில ஜெயிச்சு வந்த வேட் பாளர் மாதிரி, கொஞ்சம் அலைச்சல், குழப்பம் எல்லாம் வந்து கடைசியில நன்மைகள் கிடைக்கும். உத்தியோகத் திலயும் அளந்து பேசுவது நல்லது. கலைத் துறையில இருக்கறவங்க கடல் கடந்து போக வாய்ப்பு கிடைக்கப்போகுது. குடும் பத்தில இருந்த விரோதம், மனஸ்தாபம் எல்லாம் மறைஞ்சு, நிம்மதி கிடைக்கும். பிரிஞ்சவங்க ஒண்ணு சேருவாங்க.



நம்ம 'தல' படம் முதல் ஸ்டில்லும் வந்தாச்சு. முதல் 'டயலாக்கும்' வந்தாச்சு. (இறைவா! நண்பர்களிடமிருந்து காப்பாற்று. எதிரிகளை பார்த்துக் கொள்கிறேன்)... இதே மாதிரி மத்த 'தலைங்க - அவங்க தலை எழுத்த நினைச்சு 'ஃபீல்' பண்ணி 'போஸ்' கொடுத்தா எப்படி இருக்கும்?

இறைவா!



↑ யாராவது - அரசியல்வாதிகளிட மிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்! அயோத்தியை நான் பார்த்துக் கொள்கிறேன்!



↑ இறைவா - கெரியிடமிருந்து என்னைக் காப்பாற்று. ஈராக் வொரியை நான் பார்த்துக் கொள்கிறேன்

இறைவா! கோடையிடமிருந்து காப்பாற்று! வாடையை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்! ↓





இறைவா! பெரியார்வாதிகளிடமிருந்து என்னைக் காப்பாற்று! 'பெரியவரை' நான் போய் பார்த்துக் கொள்கிறேன்!

வி.எச்.பியிடமிருந்து என்னைக் காப்பாற்று! சோனியாவை நான் பார்த்துக் கொள்கிறேன்!



காப்பாற்று!

முகில்



இறைவா! 'கில்லி'டமிருந்து என்னைக் காப்பாற்று! கோல்களை நான் பார்த்துக் கொள்கிறேன்!

இப்படி 'ரஜினி' ஏதாவது செய்ய நினைத்து, 1 புள்ளி வைத்தாலும், மீடியா அதை 9 புள்ளி கோலமாக்கி விடுவது கண்டு, வெறுப்பாகி இப்படியும் அறிக்கை விடலாம்.

"இறைவா! மீடியாவிடமிருந்து என்னைக் காப்பாற்று- இல்லை - ஓடிப்போய் விடுவேன்!"

கிடைக்குமா?

ப.கா.மணிமொழியன்



போஸ்ட் கார்டு கதை

சுந்தர்ராமன் வீட்டைக் கட்டி ஒரு போர்ஷனில் குடிவந்தார். மற்றொரு போர்ஷனுக்கு முன் 'வீடு வாடகைக்குக் கிடைக்கும்' என்று அழகாக போர்டு எழுதி வாங்கி வந்து மாட்டி மூன்று மாதங்களாயின. குடி தண்ணீர் வசதிக் குறைவு காரணமாக யாரும் வந்து வீடு கேட்கவேயில்லை.

அன்று... வேகமாகச் சென்ற ஸ்கூட்டர்காரர் அந்த போர்டைப் பார்த்துவிட்டு ஸ்கூட்டரை 'சடக்'என்று நிறுத்திவிட்டு தயக்கத்துடன் காலிங்பெல்லை அழுத்தினார். வெளியே எட்டிப் பார்த்த சுந்தர் ராமனிடம் "நீங்கதான் வீட்டு ஓனரா?" என்று கேட்க, "வாங்க!" என்று வரவேற்றார் சு.ராமன்.

"வீடு வாடகைக்குக் கிடைக்கும்ன்னு இருந்த இந்த போர்டைப் பார்த்துட்டுத்தான் வந்தேன்."

"வாங்க! உள்ளே வந்து வீட்டைப் பாருங்க!"

ஸ்கூட்டர்காரர் முகத்தைத் துடைத்தபடி சொன்னார், "வீடு வேண்டாம்! இந்த மாதிரி எனக்கும் ஒரு போர்டு வேணும். அதான் எங்கே... எவ்வளவுக்கு இந்த போர்டை எழுதி வாங்கினீங் கன்னு கேட்கத்தான்..."


CHIKKANAM FURNITURE
சிக்கனம் பர்னிச்சர்
எளிமையானது, எழிலானது, தரமானது, விலையில் மிகவும் மலிவானது.
CRAFTING FINE FURNITURE
JFA
SINCE 1937
JFA
நிறுவனத்தின் ஒரு பிரிவு
ரூ. 2,750/- முதல்*
ரூ. 12,350/- முதல்*
ரூ. 11,750/- முதல்*
ரூ. 7,150/- முதல்*
ரூ. 7,950/- முதல்*
ரூ. 6,250/- முதல்*
ரூ. 4,500/- முதல்*
ரூ. 5,750/- முதல்*
சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் இலவச டெலிவரி
சிக்கனம் பர்னிச்சர்
• இராயப்பேட்டை : (Flyover அருகில்) ✆ : 2811 1870
• நங்கநல்லூர் : ஷோரூம் ஜூன் 4ம் தேதி துவக்கம் ✆ : 98410 26877
• அடையார் : (மலர் மருத்துவமனை அருகில்) ✆ : 5211 7875
• அசோக் நகர் : (ஜவஹர் வித்தியாலயா எதிரில்) ✆ : 5204 6073
• அண்ணா நகர் : (அண்ணா நகர் கிளப் அருகில்) ✆ : 5210 3680
• அம்பத்தூர் : (அம்பத்தூர் OT பஸ் நிலையம் அருகில்) ✆ : 5208 6731
• பெரம்பூர் : (ஜமாலியா) பெரம்பூர் நெடுஞ்சாலை ✆ : 2662 0552
**Conditions apply
சுலபத்தவணை முறையிலும் கிடைக்கும் - 0% வட்டி**
CHKM - 304
* Prices indicated may not correspond to the products shown.

என் மகள் அக்ஷதாவுக்கு அப்போது பதினைந்து வயது இருக்கும். அவள் வயதுடைய மற்ற பெண்களை விட, சற்று வேறுபட்டிருந்தாள். இயற்கையாகவே அவள் கொஞ்சம் உணர்ச்சி வசப்படும் சுபாவம் உள்ளவள். பெங்களூரில் உள்ள ரமண மகரிஷி அனாதை இல்லத்தில், அவளாகவே போய், அங்குள்ள பார்வையற்ற குழந்தைகளுக்குப் படித்துக் காண்பித்து வந்தாள். தேர்வுகளின்போது அவர்கள் சொல்லும் பதில்களை எழுதவும் உதவி வந்தாள். பிறகு, 'பார்வையற்றவர்களின் கண்கள் வழியே நான் உலகையே பார்த்தேன்' என்று ஒரு கட்டுரைகூட எழுதினாள். மேரி என்ற மாணவி அங்கிருந்த அனாதை இல்லத்தில் இருந்த ப்ரீ-யுனிவர்சிடி தேர்வு எழுதவிருந்தாள். அப்போது அக்ஷதா அவளை லால்பாக் பூங்காவுக்கு, ஒரு மாறுதலாக இருக்கட்டும் என்று அழைத்துச் சென்றாள்.

"மேரி, இங்கே பலவித வண்ணங்களில் சிவப்பு ரோஜாக்கள் இருக்கின்றன, தெரியுமோ?" மல்லிகையையும், ஒரு ரோஜாவையும் பறித்து எடுத்துக் கொண்டு மேரியிடம் போனாள்.

"மேரி, இந்த இரண்டு மலர்களையும் முகர்ந்து பார். அவற்றின் மணம் வெவ்வேறாக இருக்கும். நீ முதலில் முகர்ந்தது ரோஜா. அதன் நிறம் சிவப்பு. இரண்டாவது மல்லிகை. அது வெள்ளையாக இருக்கும். மேரி, வெள்ளை எப்படி இருக்கும், சிவப்பு எப்படி இருக்கும் என்று விளக்குவது சிரமம். இந்த உலகத்தில் பல வர்ணங்கள் இருக்கின்றன. அவற்றைக் கண்ணால் பார்த்து மட்டுமே தெரிந்து கொள்ள முடியும். தொட்டுத் தெரிந்து கொள்ள முடியாது!" என்றாள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அக்ஷதா என்னிடம் வந்து "அம்மா, பார்வையற்றவர்களுடன் பேசும்போது, வர்ணங்களைப் பற்றியே பேசாதே. அவர்கள் பரிதவித்துப் போகிறார்கள். மேரியிடம் நான் விளக்குவதற்குள் தடுமாறிப் போய் விட்டேன்" என்றாள்.

அவளுடைய கோபத்தைக் கண்டு எனக்கு வியப்பாகி விட்டது. ஆனால் நானோ, பழைய கேள்வித்தாள்களைச் சேகரிப்பதில் மும்முரமாக இருந்தேன். அதனால் உடனே பதில் சொல்லவில்லை. அவள் முகத்தை மட்டும் பார்த்தேன். அதில் சோகத்தின் சாயல்

"உன் கடமை அல்லவா?"

என்றாள் அக்ஷதா.

மேரிக்கு வியப்பாக இருந்தது: "அக்ஷதா, சிவப்பு என்கிறாயே? அப்படி என்றால் என்ன?"

சிவப்பு என்பதை எப்படி விளக்குவது என்று அக்ஷதாவுக்குத் தெரியவில்லை. ஒரு படிந்திருந்த மாதிரி இருந்தது. அல்லது என் கற்பனை தானோ என்னவோ!

"அம்மா, உனக்குத்தான் ஆனந்த் சர்மாவைத் தெரியுமே? அவன் நம் வீட்டுக்குக் கூட வந்திருக்கிறான். புத்திசாலி. தேர்வில் அவன் நன்றாக எழுதுவான் என்று எனக்கு நம்பிக்கை

இருக்கிறது. அவனுக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது. அவனுக்கு மேற்கொண்டு படிக்க வேண்டுமாம்!" என்றாள்.

எனக்குப் பழைய கேள்வித்தாள்கள் கிடைத்தனவே தவிர, பாடத் திட்டம் கிடைக்கவில்லை. நான் தேடிக்கொண்டிருந்தேன். அக்ஷதா என்னை நேராகப் பார்த்து, "அம்மா, தில்லி செயின்ட் ஸ்டீபன்ஸில் அவன் படிக்க விரும்புகிறான். அவனுக்கு யாருமே இல்லை. அவன் ஏழை. அது அவனுக்குக் கட்டுப்படியாகாத நகரம். அவன் என்ன செய்வான்? அவனுக்கு யார் ஆதரவு தருவார்கள்? எனக்கு ஒரே கவலையாக இருக்கிறது" என்றாள்.

எனக்கோ தேர்வுக் குழுக் கூட்டத்துக்கு நேரமாகிக் கொண்டிருந்தது. "நீ ஏன் அவனுக்கு ஆதரவு தரக் கூடாது?" என்றேன் ஒரு பேச்சுக்கு.

"அம்மா தில்லியில் தங்கிப் படிக்கிற ஒரு பையனுக்கு உதவுகிற அளவுக்கு என்னிடம் பணமே கிடையாதே?"

"நான் 'சிலபஸ்'ஸைத் தேடிக்



சுதா மூர்த்தி

தேன்...தேன்... மறந்தேன்

‘விரும்புகிறேன்’, ஃபைவ் ஸ்டார்’ இரண்டுமே நல்ல படங்கள்தான். ஆனால் கமர்ஷியலாக பரபரப்புப் பெறவில்லை. ஆனால் என்னுடைய ‘கறுப்பன்’ கதையைக் கேட்டு விட்டு, மாதவன் உடனே கால்ஷீட் தந்து விட்டார். “இந்த முறை ஜெயிப்பீங்க” என்று கை குலுக்கினார். அந்த மனம் திறந்த வாழ்த்தில் என்னை மறந்தேன்” என்கிறார் சுசி. கணேசன்.



கொண்டிருந்தேன். தலையை உயர்த்தி, “உன் பிறந்த நாள் பார்ட்டியை நடத்தாமல், அந்தப் பணத்தை அவனுக்குக் கொடேன்?” என்றேன்.

எங்கள் வீட்டில் இரண்டு குழந்தைகளுக்குமே தினசரிச் செலவுக்கு பாக்கெட் மணி கொடுக்கும் வழக்கம் இல்லை. அவர்களுக்கு ஏதாவது வாங்க வேண்டும் என்றால், அதை மட்டும் வாங்கிக் கொடுத்து விடுவேன். பெரிய பிறந்த நாள் பார்ட்டி எல்லாம் கொண்டாடுகிற வழக்கமும் கிடையாது. அக்ஷதாவின் பிறந்த நாள் பார்ட்டியன்று வீட்டுக்கு அவளுடைய தோழிகள் சிலரை மட்டும் அழைத்து விட்டு, அருகில் உள்ள ‘சாந்தி சாகர்’ உணவு விடுதியிலிருந்து தின்பண்டங்களை வரவழைத்துக் கொடுத்து விடுவாள், அவ்வளவுதான்.

“அம்மா மெத்தப் படித்த, ஊர் ஊராகப் பயணம் செய்திருக்கிற, பணத்தாசையே இல்லாத உன்னாலேயே ஏழைகளுக்கு உதவ முடியவில்லை என்றால், வேறு யாராவது அதைச் செய்வார்கள் என்று ஒரு போதும் எதிர்பார்க்காதே! துரதிருஷ்டமான சூழ்நிலையில் உள்ள அவர்களுக்கு உதவுவது, உன் கடமை அல்லவா? வாழ்க்கையில் நீ என்ன எதிர்பார்க்கிறாய்? பகட்டும், புகழுமா? உன் அப்பா ஒரு மருத்துவர். உன் தாத்தா ஓர் ஆசிரியர். நல்ல குடும்பத்திலிருந்து வந்த பெண் நீ. உன்னால் உதவ முடியவில்லை என்றால், வேறு யாராவது உதவுவார்கள் என்று எதிர்பார்க்காதே!”

அவள் வார்த்தைகள் என் தேடலுக்குத் தடை விதித்தன. பிரமிப்பில் அப்படியே திரும்பி, என் மகளைப் பார்த்தேன். பார்வையற்ற ஓர் ஏழை மாணவனுக்காக வாதாடும் உணர்ச்சி வசப்பட்ட ஒரு பெண்ணைத்தான் நான் பார்த்தேன். ஒரு வேளை, சமுதாயத்துக்கு நான் செய்ய வேண்டிய கடமையை நினைவுபடுத்துகிறாளோ? நாடும் சமூகமும் எனக்கு எவ்வளவோ கொடுத்தும், நான் எந்த வகையில் அதைத் திருப்பிக் கொடுத்திருக்கிறேன்? ஒரு நிமிடத்துக்கு அப்படியே உறைந்து போய் நின்று விட்டேன். அப்புறம்தான் என் கையில் பாடத் திட்டம் கிடைத்ததை உணர்ந்து, வேகமாகப் புறப்படத் தயாரானேன்.

அக்ஷதா கோபத்துடனும், வருத்தத்துடனும் அங்கிருந்து போனாள். நானும் குழம்பிய மனசுடன் கல்லூரிக்குப் புறப்பட்டேன்.

அங்கே போனபோது, கூட்டம் வழக்கம் போல் தாமதமாகத்தான் துவங்கும் என்று தெரிந்தது. நான் தனியாக இருந்தேன். தனிமைக்கும் அமைதிக்கும் நிறைய வேறுபாடு உண்டு. தனிமை ‘போர்’. ஆனால் அமைதி தேவையான ஒன்று. அமைதியின் போது உங்களை மறுபரிசீலனை செய்து கொள்ள முடியும்.

அன்று பிற்பகல் நடந்ததை எல்லாம் அசை போட்டேன். அக்ஷதாவின் வார்த்தைகள் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன...

(தொடரும்)





புஞ்சாவின் அஞ்சாநெஞ்சு!

'மச்சி' படத்தின் நாயகி சுபா புஞ்சாவிடம், "உங்க பெயருக்குப் பின்னால் ஒட்டிக் கொண்டிருக்கும் 'புஞ்சா' அப்பா பெயரா?'' என்று கேட்டோம்.

"ஏமாந்தீங்களா! அது நான் சார்ந்திருக்கும் சமூகத்தின் பெயர்'' என்று கண்களைப் பெருமையாக உருட்டியபடி சொன்னார். சரி போகட்டும். "தமிழ் ரசிகர்களின் இதயங்களைக் கொள்ளையடிப்போம் என்ற நம்பிக்கை உண்டா'' என்று அசட்டுத்தனமாக கேட்கப்போய், எங்கள் புஞ்சா சமூகத்தின் மூதாதையர்கள், கடற் கொள்ளையில் தூள்கிளப்பியவர்கள் என்று தாத்தா சொல்லக் கேட்டிருக்கிறேன். ரசிகர்களின் மனத்தைக் கொள்ளையடித்தல் எம்மாத்திரம்'' என்று சொன்னவர், "எனக்கு மரைன் இன்ஜினியரிங் படிக்க ஆசை. அதற்கு முன் சினிமாவில் ஒரு கலக்குக் கலக்குவேன்'' என்றார். நமக்கோ வயிறு கலங்கியது.

- ஸ்ரீ



அவர்களுடைய முதல் மகன் ராமு பெரியவர்கள் சொல்லை மீறி காதல் கல்யாணம் செய்து கொண்டதால் தலை முழுகி விட்டார்கள்.

ஏன்?



இரண்டாவது மகன் பிரபுவும் காதல் கல்யாணம் செய்து கொண்டதால் கை கழுவி விட்டார்கள்.

மூன்றாவது மகன் பாலாவும் காதல் கல்யாணம் செய்து கொண்டு வந்து நின்றதும் "எப்படியாவது போ" என்று தண்ணீர் தெளித்து விட்டார்கள்.

காரணம் என்ன? - கே. சி. நாராயணன்

46ம் பக்கம் பார்க்க



தத்தும் பள்ளி... முத்தும் பள்ளி!



கல்யாணச் செலவுப் பட்டியல் போடும்போது, மஞ்சள், குங்குமம் என்று மங்களகரமாக ஆரம்பிப்பதுதானே முறை? ஆனால் பட்டுக்கோட்டை, பூவத்தூர் கிராம மக்களோ, 'கல்வி வளர்ச்சி நிதி ஆயிரம் ரூபாய்' என்றுதான் ஆரம்பிக்கிறார்கள். கல்வியறிவு விழிப்புணர்வில் பூவத்தூர் மக்கள் காட்டும் ஆர்வம் வியக்க வைக்கிறது.

சுமார் நாலாயிரம் பேர் வசிக்கும் இந்தக் கிராமத்தில், பத்தாண்டுகளுக்கு முன் நடுநிலைப்பள்ளி ஒன்றும், இரண்டு துவக் கப்பள்ளிகளும் மட்டுமே இருந்தன. அப்போது அவர்களுக்கு, உயர்நிலைப் பள்ளிப் படிப்பு என்பது வெறும் கனவாகவே இருந்தது. தற்போது, வண்ணமயமான நிஜமாக்கியுள்ளது பூவத்தூரில் உருவான கல்வி வளர்ச்சிக் குழு ஒன்று. கிராம மக்கள் அனைவரும் இணைந்து, திட்டம் தீட்டி, நிதி திரட்டி, கச்சிதமாகக் கட்டி முடித்துள்ளனர்.


முதலில் பள்ளிக்கூடம் கட்ட இடம் வேண்டுமே... நாலு ஏக்கர் நிலம். சற்றுக் குறைவான சந்தை மதிப்பில், ஒரு லட்ச ரூபாய் கிரயம். அப்போதிருந்த தஞ்சை மாவட்ட ஆட்சியர் பெயரில் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு என, நிலம் பதிவு செய்யப்பட்டது.

நிலம் வாங்கிப் போட்டாயிற்று. கட்டடம்? அறுவடைக் களங்களிலிருந்து, சிட்டுக் குருவிகள் கொண்டு வந்து சேர்ந்த சிறு நெற்குவியல் போல, வகுப்பறைக் கட்டடங்கள் மெள்ளக் காலூன்றின. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துளசி அய்யா வாண்டையார், தஞ்சை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினரும், தமிழக அமைச்சருமான ஆர்.வைத்தியலிங்கம் போன்றோர் தந்த நிதி உதவியால், பள்ளிக் கட்டடம் 'கிடுகிடு' என வளர்ந்தது.

கிராமத்தைச் சுற்றிலும் ஓங்கி வளர்ந்திருந்த பொது மரங்களை கிராம மக்களே வெட்டி எடுத்தனர். லூர்துசாமி என்ற உள்ளூர்த் தச்சரின் கீழ், இருபது தச்சர்கள் மிகக் குறைந்த கூலி பெற்று, 'மளமள' என்ற வேலை பார்க்க, கதவு, ஜன்னல், நாற்காலி, மேஜை, பெஞ்ச், பீரோ என அத்தனையும்







• கல்வி வளர்ச்சிக் குழு...

வடிவமைக்கப்பட்டன.

கூட்டடம் கம்பீரமாக நிற்கிறது. சரி. கல்வியின் தரம்? அதிலும் முன்னிலை பெற்று வருகிறது பூவத்தூர் அரசு உயர் நிலைப்பள்ளி.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு. உயர் நிலைப்பள்ளி துவங்கியபோது, வந்து சேர்ந்த மாணவர்கள் இருபது பேர். இப்போது இருநூற்று அறுபது பேர் படிக்கிறார்கள். பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில், தொடர்ந்து மூன்றாண்டுகளாக நூறு சதம் தேர்ச்சி.

கல்வி மட்டுமல்ல. ஒழுக்கம், சுத்தம் போன்ற விஷயங்களிலும் கண்டிப்புக் காட்டுகிறார்கள். மாலை நேரத்தில் பள்ளி வளாகத்தின் உள்ளேயே ஓரமாய் அமர்ந்து. மாணவர்களுக்கு ஐந்து ரூபாய் கூலியில் முடி திருத்தம் செய்கிறார்கள் உள்ளூர் நாவிதர்கள்.

வருடந்தோறும் கல்வித் திருவிழாவும் உண்டு. பள்ளி ஆசிரியர்களுக்குப் பரிசு தந்து கௌரவித்தல், வழக்காடு மன்றம், கலை நிகழ்ச்சிகள், மாணவ மணிகளுக்குப் பரிசு, என கிராமமே களை கட்டிவிடுகிறது.

"பொதுத் தேர்வுகளில் நல்ல மார்க் வாங்கறது மட்டும் எங்கள் நோக்கம் அல்ல. நல்ல அறிவுள்ள மக்களா உருவாகி, சமூகத்துக்குப் பிரயோஜனமா இருக்கணும். எங்க ஊர்க் குழந்தைங்க, ஐ.ஏ.எஸ். அதிகாரியா வரணும்ங்கிறது எங்க லட்சியம்'' எனக் கூறுகிறார், கல்வி வளர்ச்சிக் குழு தலைவர் இரா. மெய்க்கப்பன் காளிங்கராயர்.

கட்டுரை, படங்கள் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



உலக வர்த்தக மையத்தை அந்தத் தீவிரவாதிகள் தாக்கிய பிறகு, முதல் முறையாக அமெரிக்கப் பாமரனின் அகராதியில் 'நாம் - அவர்கள்' என்ற சொற்கள் வடிவம் பெற்றிருக்க வேண்டும். ஆச்சரியமாக அந்தச் சம்பவம் இங்கு வாழும் இந்தியர்களுக்கு ஒரு தெளிவைக் கொடுத்ததாக நான் நினைக்கிறேன்.

மற்ற அமெரிக்கப் பிரஜைகளைப் போலவே அவர்கள் அதிர்ந்தபோது, தாங்கள் அன்னியர்கள் அல்ல, அமெரிக்கர்கள் என்று உணர்ந்து கொண்டதாகப்படுகிறது.

"அந்த அனுபவத்திற்குப் பிறகு இந்தியாவுக்குத் திரும்பி விடலாம் என்ற எண்ணம் வரவில்லையா?"

"இல்லவே இல்லை. எங்களைப்போல் பல ஆயிரம் பேர் அன்று பயத்தை அனுபவித்தார்கள். மரணமும், ஓலமும், பீதியும் எங்களை ஒன்றுபடுத்திவிட்டது. நான் ஓர் அந்நியன் என்கிற எண்ணமே எனக்கு ஏற்படவில்லை. நாட்டின் பாதுகாப்புக்காக எந்தச் சிரமத்தையும் நாங்கள் ஏற்கச் சித்தமாக இருக்கிறோம்'' என்றார்கள் உணர்ச்சி வசப்பட்டு. சரிந்து விழும் கோபுரங்களில் மாட்டிக் கொண்டவர்களைக் காப்பாற்றச் சென்ற நூற்றுக்கணக்கான பேர், இடிபாடுகளில் இறந்து ஹீரோக்களான கதைகள் ஏராளம்.

நியூயார்க்கின் உயிர்த் துடிப்பு

சுதந்திரப் போரின் வெற்றிக்கு பிரான்ஸ் அளித்த பரிசாக வந்தது சுதந்திரச் சிலை. 151 அடி உயரம் கொண்ட சுதந்திரச் சிலை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரெடரிக் அகஸ்த் பார்தோல்டி என்ற சிற்பியால் வடிவமைக்கப்பட்டது. (அதைச் செய்ய பத்து ஆண்டுகள் பிடித்ததாம்.) 1886ல் நியூயார்க்குக்குக் கொண்டுவரப்பட்டு, துறைமுகத்துக்கு அருகே இருக்கும் ஒரு சிறிய தீவில் வைக்கப்பட்டது. அதன் உள்ளே படிக்கட்டுகள் உள்ளன. முன்பு மேல் தளம் வரை பார்வையாளர்கள் செல்ல அனுமதியிருந்தது. இப்போது அனுமதிப்பதில்லை. அதை நெருக்கமாகப் பார்க்க, மூன்று தளங்கள் கொண்ட மின்சாரப்படகுகளில் செல்ல வேண்டும். அதற்குத் தான் அத்தனை கெடுபிடி! அருகில் பார்த்தபோது அதன் ஆகிருதி பிரமிப்பை அளித்தது. சிலையின் உருவம் அழகில்லை என்றாலும், கையில் கலங்கரை விளக்கை ஏந்திய



சுதந்திர மண்ணின் மரண பயம்!



படி நிற்கும் அந்தப் பிரும்மாண்ட பெண் சிலை, சுதந்திர வேட்கை இருக்கும் எவருக்கும் எழுச்சியூட்டும் சின்னம் என்பதில் சந்தேகமில்லை. அது தோற்றுவித்த நம்பிக்கையே பல நாட்டவரை அங்கு ஈர்த்தது. பல்வேறு அகதிகள் அமெரிக்கக் கரைக்கு வந்து புதிய வாழ்வு கண்டார்கள்.

இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது இங்கு வந்து சேர்ந்த பாகிஸ்தானியர்களும், இந்தியர்களும் ஏராளம். சிலைக்கு அருகில் எல்லிஸ் தீவு என்று ஒரு தீவு. அது தான் 1892லிருந்து 1954 வரை குடியேறிகளின் நிலையமாக இருந்தது. அந்தக் கால கட்டத்தில், அமெரிக்கக் கரைக்கு 120 லட்சம் பேர் வந்து சேர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்போது அங்கு ஓர் அழகிய அருங்காட்சியகம், எல்லா விவரங்களையும் கலையழகோடு சொல்கிறது. அன்று ஆரம்பித்த குடியேற்றம் இன்னும் நிற்கவில்லை. 9/11க்குப் பிறகும் குடியேறிகளின் கலகலப்பும் உற்சாகமும் குறையவில்லை என்பதுதான் விசேஷம். 9/11ன் போது 5000பேரைக் காவு கொண்ட இடிபாடுகளில் வேலை செய்து கொண்டிருந்த நெருப்பணைக்கும் ஊழியரை, யாரோ கேட்டார்கள், "இனி நியூயார்க்கின் உயிர்த் துடிப்பு சோர்ந்துவிடுமா?" என்று. "சோர்வா? என்ன சொல்கிறீர்கள்? இது நியூயார்க் ஆக்கும்!" என்றார் அவர். அவர் சொன்னது அப்பட்ட உண்மை என்று நியூயார்க் நிரூபித்துக் காட்டியது. உடனடியாக (ஒரே வாரத்திற்குள் ரயில் நிலையங்களும் எல்லா அலுவலகங்களும், பழுதுபட்டவை தவிர்த்து, வழக்கம் போல் இயங்க ஆரம்பித்ததாக மாதங்கி சொன்னாள்) உயிர்த்தெழுந்திருப்பதில் தெரிகிறது.

தி எம்பையர் ஸ்டேட் பில்டிங்

தி எம்பையர் ஸ்டேட் பில்டிங்கைக் கட்டினவர்களுக்கு, நிறைய 'தில்' இருந்திருக்க வேண்டும். 1930ல் அமெரிக்காவின் மிக மந்தமான பொருளாதாரத் தேக்கத்தின் போது, 41 மில்லியன் டாலர் செலவில் தனியாரால் கட்டப்பட்டது. 1454 அடி உயரம் கொண்ட அந்தக் கட்டடம், 1931லிருந்து 1977 வரை உலகிலேயே மிக உயரமான கட்டடமாகக் கருதப்பட்டது. தொழில் நுட்பம் வளராத அந்தக் காலக் கட்டத்தின் கட்டடக்கலை, அற்புதம் என்பதோடு, திட்டமிட்டதைவிட குறைவாகச் செலவழித்து, குறித்த நேரத்தைவிடச்

வாஸந்தி



தேன்...தேன்... கோபித்தேன்!

"'இந்த வருஷத்து நம்பர் ஒன் நடிகை தெலுங்கிலும் நீதான். தமிழிலும் நீதான்' என்று என் தோழிகள் சொன்னபோது, "ஏய்... கிண்டலா?" என்று கோபித்தேன். ஆனால் அவர்கள் வாக்கு பலித்துவிட்டது. 'கில்லி' வெற்றியைத் தொடர்ந்து, 'ஆய்த எழுத்து'ம் ஹிட் ஆயிடும். 'திருப்பாச்சி' படத்திலும் விஜய் உடன் ஜோடி சேர்கிறேன். அப்படின்னா நான்தானே டாப் ஹீரோயின்?" என்று சந்தோஷித்தார் த்ரிஷா! - அனு

சடுதியாக 410 நாட்களில் (ஒரு வாரத்தில் மூன்று தளங்கள்) கட்டி முடிக்கப்பட்டது என்பது, நம்ப முடியாத அதிசயம். இந்திய மத்திய அரசில் பொறியியலாளராகப் பணியாற்றிய என் கணவர், இது சமகால இந்திய வரலாற்றில் கற்பனை கூடச் செய்ய முடியாதது என்றார்.

நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வெகு அருகில், நடக்கும் தொலைவில் எம்பையர் ஸ்டேட் கட்டடம் இருந்தது. இரவு நேரத்தில் அங்கு மேலேறிச் சென்றால், நியூயார்க்கை மேலிருந்து பார்க்க மிக அழகாக இருக்கும் என்று அருகில் தங்கும் டூரிஸ்டுகள், இரவுப் பார்வைக்காக வருவது வழக்கம். நான் பகல் நேரத்திலேயே எப்பவும் பார்த்திருந்ததால், இந்த முறை இரவில் பார்க்கலாம் என்று சென்றோம். டிக்கெட் வாங்க மிக நீண்ட க்யூ வரிசை தெருவிலெல்லாம் வழிந்து நின்றிருந்தது - இரவு எட்டு மணிக்கு. (பதினொரு மணிவரை அனுமதி உண்டு) டிக்கெட் வாங்கிய பிறகு அங்கு இருந்த கைடுகள், மேகம் மூடியிருப்பதால் அரை மைல் தொலைவுக்கே visibility இருப்பதாகவும், அந்த டிக்கெட் பிறகும் செல்லும் என்பதால், முடிந்தவர்கள் பிறகு தெளிவான ஆகாயம் உள்ள ஒரு நாள் வரலாம் என்றும் சொன்னார்கள். ஹோட்டல் பக்கத்தில் இருந்ததால், மறு நாள் வரலாம் என்று நாங்கள் திரும்பிவிட்டோம். ஆனால் அதற்கு அடுத்த இரண்டு நாட்களும், இரவில் வானம் இருண்டு மழைத் தூற்றலுமாகிவிட்டது.

வேறு வழியில்லாமல் நியூயார்க்கிலிருந்து வாஷிங்டன் கிளம்ப வேண்டிய அன்று காலை எம்பையர் ஸ்டேட் கட்டடத்தை, பாதுகாப்புச் சோதனையை முடித்துக் கொண்டு ஏறிப் பார்த்தோம். நியூயார்க் என்ற அற்புத நகரத்தை, மேலிருந்து பார்த்தபோது, மனிதனின் ஆக்கபூர்வ சக்தி தெய்வாம்சம் கொண்டது என்பது உறுதிப்பட்டது.

(தொடரும்)

பாட்டறிவேன்... படிப்பறிவேன்..!

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்ற நாவுக்கரசரின் தேவாரம் காற்றில் மிதந்து வருகிறது. கோயிலுக்குள் நுழைந்தால், சுருதிப் பெட்டியின் ரீங்காரப் பின்னணியில் பாடிக் கொண்டிருந்தார் ஓர் இளம் பெண். பெயர் அங்கயற்கண்ணி. இறைவும் பக்தியும் இனிமையாகக் கலந்து இறைமை வளர்த்த இவருக்கு, வயது இருபத்து ஒன்று. திருச்சி, மாவட்ட அரசு இசைப் பயிற்சிப் பள்ளியின் மாணவி. ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர். நல்ல குரல் வளமும், தமிழ் ஆர்வமும் உள்ள அங்கயற்கண்ணியை, ஓதுவார் பணியில் அமர்த்தினால் சிறப்பாக இருக்குமே என்று, தேவார வகுப்பு ஆசிரியர் சரவண மாணிக்கத்துக்குத் தோன்றவே, நவீன பெண் நந்தனாராக ஓதுவாராகிவிட்டார் அங்கயற் கண்ணி.

திருச்சி, உறையூர் பஞ்சவர்ண சுவாமி கோயில், சத்திரம் பேருந்து நிலையம் காமாட்சியம்மன் கோயில், நாகநாத சுவாமி கோயில் போன்றவற்றில் தேவாரப்பாடல்கள் இசைத்து வருகிறார், அங்கயற்கண்ணி. பக்தர் ஒருவரின் சன்மான உதவியுடன் இந்தத் திருப்பணி செய்து வருகிறார்.

"இந்து சமய அற நிலைய ஆட்சித் துறையின் அரசுப் பணியாக, இது எனக்குக் கிடைக்கவில்லை. இருந்தாலும், முழுத் திருப்தி தருகிறது. என் தங்கை நளினியும் தேவார வகுப்பில் படித்து வருகிறாள். எங்களைப் போன்ற பெண்களை, முறைப்படி ஓதுவார் பணியில் அரசு அமர்த்தும் என்று நம்புகிறேன்" என்கிறார் அங்கயற்கண்ணி.

அங்கயற்கண்ணியின் தந்தை, தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்றில் கூலித் தொழிலாளி.

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு




அழகை அழகாய் காட்டுமே
பெண்ணின் கனவுகள்
நிஜமாகும் வேளையில்
இதயங்கள் இணைந்திடும் வேளையில்
ஆரெம்கேவி உங்கள் அழகை
அழகாய் காட்டுமே.
ஆரெம்கேவி முகூர்த்தப் பட்டுகள்.
பாரம்பரியத்தை பிரதிபலிக்கும்
நவீன படைப்புகள்.




RmKV
முகூர்த்தப் பட்டுகள்
பனகல் பார்க் | சென்னை | போன் 044-28144445
வடக்கு ரத வீதி | திருநெல்வேலி | போன் 0462-2333105
www.rmkv.com



''அந்த வேட்பாளர்தான் தோத்துட்டாரே. அப்புறம் ஏன் நன்றி அறிவிப்பு, அது இதுனு சந்தோஷமா இருக்காரு?''

''அதுவா... முதல்முறையா டெபாஸிட் திரும்பக் கிடைச்சுருச்சாம்!''


வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி!



''ஆம்பளைங்களுக்குச் சாதகமான டீ.வி.யா, எப்படி?

''புடைவை, நகை விளம்பரங்கள் வரும்போதெல்லாம் டீ.வி. தானே ஆஃப் ஆயிடும்!''

- எம். அசோக்ராஜா



''நம்ம தலைவர் கூட்டத்துக்கு ஆளே வர்றதில்லைன்னு எதிர்க் கட்சிக்காரங்க பொய்ப் பிரசாரம் செய்யறாங்களே! இந்த போட்டோவில் இருக்கிற கும்பலைப் பார். இதுலேருந்து என்ன தெரியுது?''

'''கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ்' எவ்வளவு முன்னேறியிருக்குன்னு தெரியுது!''

- சம்பத் குமாரி



"வேட்பாளர் வோட்டுக் கேட்க தினம் லேட்டா வந்தாரே ஏன்?"

"போலீஸ் ஸ்டேஷன்ல தினம் கையெழுத்துப் போட வேண்டி இருக்கே!"



"லேடீஸ் ஹாஸ்டலுக்கு வோட்டுக் கேட்க வேட்பாளர் போயிருக்கக் கூடாது!"

"ஏன்?"

"ஈவ் டீஸிங் கேசுல மாட்டிக்கிட்டார்!"

- அம்பை தேவா



"என்ன சார் வேணும்...?"

"பஜ்ஜி ரெண்டு, டீ ஒண்ணு, பி.காம் அக்கவுண்டன்ஸி கொஸ்ட்டின் பேப்பர் ஒண்ணு...!"

- விருதை ராஜா

இன்னும் முழுசாய் விடிந்திருக்கவில்லை. சியாமளா ஏழுக்கோ, ஏழரைக்கோ எழுந்த பிறகுதான் காபி. அதுவரை எப்படி நேரத்தைக் கொல்வது?

லைட்டைப் போட்டுவிட்டு, ஹாலுக்கு வந்தபோது, மேஜைக்குக் கீழே பழைய பத்திரிகைகளை அடுக்கிய வரிசையில், ஒரு புத்தம் புதிய டைரியைப் பார்த்தான்.

ஆர்வத்தோடு எடுத்துப் பிரித்தபோது, முதல் பக்கத்தில், 'ஆர்.சியாமளா' என்று கையெழுத்துப்போல் பெயரெழுதியிருந்தது. அதன் கீழேயே, 'என் அனுமதியின்றி இந்த டைரியைப் படிக்கிறவர்களுக்கு மன்னிப்பே கிடையாது!'

அட, என் அப்பாவிப் பெண்டாட்டிக்கு டைரி எழுதும் பழக்கம் இருக்கிறதா? அவனுக்குள் தாங்கமுடியாத குறுகுறுப்பு படர்ந்தது. அப்படி என்னதான் எழுதியிருக்கிறாள், எனக்குத் தெரியாமல்?

உள்ளறையை ஒருமுறை

அவன் அந்த டைரியை மூடி, மேஜைமேல் வைத்துவிட்டான். சத்தமில்லாமல் திரும்பி வந்து, சோஃபாவில் சரிந்தாற்போல் அமர்ந்து கொண்டான்.

கல்லூரி நாள்களில் அவன் டைரி எழுதியதுண்டு. தினந்தோறும் ஒரு பக்கம் என்றெல்லாம் கணக்கு வைத்துக் கொள்ளாமல், தோன்றிய நேரத்தில், பக்கம் பக்கமாய் எழுதித் தீர்த்த விஷயங்கள் - பெரும்பாலும் செலவுக் கணக்கு, பார்த்த சினிமா, கிரிக்கெட் மேட்ச், கவர்ந்திழுத்த பெண்கள், அவர்களின் நாகரிக உடை அலங்காரங்கள், அலங்கோலங்கள், இன்னபிற.




இழுக்கு

சங்கடமாய்த் திரும்பிப் பார்த்துக் கொண்டான் அவன். கணவன் - மனைவிக்குள் எந்த ரகசியமும் கூடாது என்று சொல்வார்கள். அதன்படி பார்த்தால், நான் இந்த டைரியைப் படிப்பதில் எந்தத் தப்பும் இல்லை. ஆனால், அதைத் தீர்மானிக்க வேண்டியது நான் மட்டும்தானா?

இந்த எண்ணம் தோன்றியதும்,

அந்தக் குப்பைகளெல்லாம் இப்போது எங்கே கிடக்கிறதோ, தெரியாது. ஆனால், அவற்றில் எதையும் சியாமளாவிடம் காண்பிக்க அவன் தயங்கமாட்டான் - நிச்சயமாய்.

அப்படியானால் சியாமளா ஏன் தயங்கவேண்டும்? வீட்டில் நாங்கள் இருவர்தான் இருக்கிறோம் என்ற நிலையில். 'யாரும் படிக்கக் கூடாது!' என்று ஒரு குறிப்பு எழுதி வைத்தால், மறைமுகமாக, அவனைச் சொல்வதாகத்



என் அனுமதியின்றி இந்த டைரியைப் படிக்கிறவர்களுக்கு மன்னிப்பே கிடையாது!

என்.சொக்கன்

தானே அர்த்தமாகிறது? அப்படி என்ன விஷயத்தை மறைக்கிறாள்?

அவன் மீண்டும் மேஜையருகே நடந்து சென்று, அந்த டைரியை எடுத்துக் கொண்டு வந்து அமர்ந்தான். அதன் முதல் பக்கத்திலிருந்த பறவை ஓவியத்தைக் கொஞ்சம் ரசித்தான். பிரிப்பதற்கு மனம் வரவில்லை.

சியாமளா ரொம்ப நல்ல பெண். வெகுளி, அவனிடம் எதையும் மறைக்கத் தெரியாது. உண்மையில், அக்கம்பக்கத்து வம்பு வழக்குகளில் துவங்கி, தொலைக் காட்சித் தொடர்களின் அன்றாட நிகழ்வுகள்வரை, எல்லாவற்றையும் ஒன்று விடாமல் அவனிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறவள்தான் அவன் அவனுக்குத்தான் பெரும்பாலும் அவள் சொல்பவற்றைக் கேட்க நேரமிருப்பதில்லை.

ஒருவேளை, சியாமளா திருப்தியாய் இல்லையோ? வாரத்தில் ஆறு நாள்கள் சில சமயம் ஏழு நாள்களும் கூட அலுவலகத்திலேயே கழிக்கிற கணவனின் நேசம், அவளுக்குப் போதவில்லையோ? என்னை உள்ளங்கையில் தாங்கிக் கொண்டாடுகிற ஒரு கணவனை ஏன் கொடுக்கவில்லை, என்று ஆண்டவனிடம் டைரி எழுதி சண்டை போடுகிறாளோ?

இந்த எண்ணம் தோன்றியதும், கையிலிருந்த டைரி மிகவும் கனப்பதாய்த் தோன்றியது.

யோசிக்க யோசிக்க, அவனுக்குக்

குழப்பமாகவே இருந்தது. அவன் நினைப் பதுபோல், அந்த டைரியில் இருப்பது சியாமளாவின் அன்றாடப் பிரச்னைகள் ஏதுமா, அல்லது ஆறாத காயங்கள் எதைப் பற்றியாவது கொட்டித் தீர்த் திருக்கிறாளா?

இப்படி நினைத்ததும், அவனுக்குள் திக்கென்றது. சியாமளாவுக்கு பூர்வ கதை உண்டா? என்னிடம் மறைக்கிற அளவுக்கு அந்தக் கதையில் அப்படி என்ன பெரிய ரகசியம்?

அவர்களின் முதலிரவிலேயே, அவள் தனது பழைய காதல் ஒன்றைப் பற்றிச் சொல்லியிருக்கிறாள் - அவளது அத்தைப் பையன் ஒருவன். அவனுக்கும், இவளுக்கும்தான் கல்யாணம் செய்யப் போவதாக, சிறுவயதிலிருந்தே ஒரு விளையாட்டுப் பேச்சைத் தொடர்ந்து கேட்டதால், அதன் சாத்தியங்களைப் பற்றித் தெரியாமலேயே, அவனைத் தன் துணைவனாக வரித்துக் கொண்டிருக்கிறாள் - இத்தனைக்கும். இவள் அவனிடம் நாலு வார்த்தை சேர்ந்தாற் போல் பேசியதுகூட இல்லை! (இதைச் சொன்னபோது, சியாமளா வெட்கமாய்ச் சிரித்தது, இன்னும் அவனுக்குப் பளிச் என்று நினைவிருக்கிறது!)

பின்னர் அவன் அமெரிக்காவில் படித்து, அங்கேயே வேலைக்குச் சேர்ந்து, பச்சை அட்டை வாங்கி, உடன் பணியாற்றும் ஒருத்தியை மணந்து கொண்டு - இவள் அவனைக் கடைசியாய்ப் பார்த்து, பத்து வருடங்களுக்கு மேல் ஆகி விட்டது.

"அவன் மூஞ்சிகூட எனக்கு நினைவில்லைங்க. சுத்தமா மறந்துடுச்சு!'' குரலிலோ, முகத்திலோ கொஞ்சமும் சோகமில்லாமல் சியாமளா சொல்ல, அவன் குறும்பாய்ச் சிரித்து, ''அவன் பேராவது நினைவிருக்கா?'' என்று அவளைக் கிண்டலடித்தான்.

அந்த கேலியைப் புரிந்துகொள்ளாமல், "அவன் பேரு, ராஜு சுந்தரம். வீட்ல சுந்தா-ன்னு கூப்பிடுவாங்க!'' என்றாள் அவள்.

அதுதான் சியாமளா, ஒரு குழந்தை போல்தான்.

ஆனால், அந்த சியாமளாவுடன், இந்த டைரியைக் கொஞ்சமும் பொருத்திப் பார்க்க முடியவில்லை அவனால். மற்றவர்கள், குறிப்பாக அவன் படிக்கக் கூடாது என்று நினைக்குமளவுக்கு, அப்படி என்னதான் அவளுக்குள்?

அந்த டைரியினுள் அப்படி என்னதான் இருக்க முடியும்? அன்றாட செலவுக் கணக்கு? இராமஜெயம்? பப்பாளி ரசம் வைப்பது எப்படி? முப்பது நாள்களில் ஆங்கிலப் பாடங்கள்? அல்லது, என் கணவனிடம் அவளுக்குப் பிடிக்காத விஷயங்கள்? அல்லது எனக்குத் தெரியாமல் அவள் சேமித்திருக்கும் சிறுவாட்டுத் தொகை விபரங்கள்? அல்லது, சியாமளாவின் பழைய காதல் கடிதம் ஏதாவது? இப்படிப்பட்ட அதீதக் கற்பனைகளையெல்லாம் அவன் வெறுத்தான்.

என்றாலும், இந்தச் சந்தர்ப்பத்தில் வேறெதும் நினைக்கத் தோன்ற வில்லை.

ஆனால், சியாமளா எழுதியிருக்கிற விஷயம் எதுவானாலும் தனக்கு அது பெரிய அதிர்ச்சி எதையும் உண்டாக்கப் போவதில்லை என்று அவன் உறுதியாய் நினைத்தான்.



சியாமளாவின்மீது அவன் கொண்டிருக்கும் நேசத்தையோ, புரிதலையோ, அவற்றால் நிச்சயம் குறைத்து விட முடியாது.

அப்படியானால் தான் இப்போது அதை அறியத் துடிப்பது ஏன்? அதுதான் அவனுக்குப் புரியவில்லை.

அந்த டைரியில் எழுதப்பட்டிருக்கும் செய்திகளைக் காட்டிலும், தனக்கும், சியாமளாவுக்கும் இடையே, இப்படியொரு ரகசியம் தோன்றி மறைக்கிறதே என்னும் எண்ணம்தான், அவனுக்குத் தாங்கமுடியாத வலி உண்டாக்கியது.

சியாமளா அவனை உலுக்கி எழுப்பியபோது, அறை ஜன்னல்களின் திரை விலகி, வெளிச்சம் தரையெங்கும் பரவியிருந்தது.

அவன் சிரமத்துடன் எழுந்து அமர்கையில், சியாமளா புன்னகையுடன் கேட்டாள். "என்னது? மாப்பிள்ளைக்குப் பஞ்சு மெத்தை பிடிக்காம, சோஃபாவிலே தூக்கம்?"

கையிலிருந்த டைரியை மறைக்க வேண்டுமா என்று யோசித்தபடி, அதை மேஜைமேல் வைத்தான் அவன், "அதிகாலையில், ஏதோ கனாக் கண்டு முழிச்சுகிட்டேன் சியாமளா. அப்புறம் எதுக்கு இங்கே வந்தேன்னே எனக்கு நினைவில்லை!"

"சரி, எழுந்திருச்சு வாங்க. காஃபி தர்றேன்!" என்றபடி அந்த டைரியை எடுத்து, ஓரமாய்ப் போட்டாள் சியாமளா. அப்போது அவளது முகத்தில் சிறு அதிர்ச்சியோ, சலனமோகூட இல்லை - தினந்தோறும் காலை எழுந்ததும் போர்வைகளை மடித்து, தலையணைகளை நேராக்குவதுபோல்தான், அவளது அந்தச் செய்கை இருந்தது - அத்தனை நேரமாய் அவன் அந்த டைரிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தில், நூற்றில் ஒரு பகுதியைக்கூட சியாமளா அதற்கு வழங்கவில்லை - சொல்லப் போனால், ஒருவித அலட்சியத்துடன்தான் அவள் அந்த டைரியைத் தூரமாய் வீசினாள்.

சியாமளா சமையலறைக்குள் சென்ற பிறகும், சில விநாடிகளுக்கு அவன் அந்த டைரியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் வீசிய வேகத்தில், அதன் முதல் பக்கம் திறந்து, மற்ற பக்கங்கள் காற்றில் அலைபாய்ந்தன. ஆனால் ஏனோ, அவற்றில் என்ன இருக்கிறது என்று வாசிக்கும் ஆர்வம், இப்போது அவனுக்கில்லை.

தரையெங்கும் படர்ந்திருந்த வெயில் வளையங்களை மிதித்தபடி, அவன் குளியலறைக்குச் சென்றான். கிச்சனில் வேலையாயிருந்த சியாமளா, ஏதோ ஒரு பாட்டை மெலிதான குரலில் பாடுவது ரம்மியமாய்க் கேட்டுக் கொண்டிருந்தது.

இன்று மாலை, அவளை ஒரு நல்ல இசைக் கச்சேரிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

தேன்...தேன்... திளைத்தேன்

" 'ஐக்கு பாய்' என்னுடைய லட்சியப்படம். அதில் நீங்கள் என்னுடைய காஷ்மீரக் காதலியாக நடிக்கணும். நீண்ட கால்ஷீட் தேவைப்படும். முடியுமா?" என்று ரஜினிஜி கேட்டபோது, "ஷ்யூர் - ஷ்யூர்" என்பதைத் தவிர வேறு எதுவும் பேச முடியவில்லை. அப்படி ஒரு மகிழ்ச்சியில் திளைத்தேன்" என்று டி.வி. பேட்டி ஒன்றில் மனம் திறந்திருக்கிறார் ராணி முகர்ஜி.







அருள்

தான் உண்டு; தன் பைக் உண்டென்றிருக்கிற ஹீரோவின் வழியில், அநியாயம் பண்ணுகிற அரசியல்வாதி புகுந்தால் கேட்கவா வேண்டும்? துவம்சம் செய்கிறார் வீறு கொண்டு.

இயக்குனர் ஹரியின் 'தமிழ்', 'சாமி' கதைகளையே கொஞ்சம் திருப்பிப் போட்டு, தோசையை மசால் தோசையாக்கியிருக்கிறார் அருளில். ஆனால் இந்தப் படத்தில் நகை செய்யும் குடும்பம் பற்றிய பின்புலம் புதுசு.

எம்.எல்.ஏ. பசுபதியின் ஆங்கார கோபத்துக்கு உள்ளாகும் விக்ரமை, அவர் பழிவாங்க வர, நடுரோட்டில்

அவரையும் அவரது ஆட்களையும் நையப்புடைக்கிறார் விக்ரம். சிதறும் இரத்தம் தியேட்டரையும் தாண்டி நம் சட்டையிலும் தெறிக்கிறது.

ஆளுங்கட்சித் தலைவரின் தம்பியான எம்.எல்.ஏவை இப்படிக் கொன்று விட்டு, இரண்டு மூன்று நாட்களிலேயே ஹீரோ ஜாமீனில் வந்து விடுவது, சினிமாவில் மட்டுமே சாத்தியம். சண்டைக்காட்சியில் விக்ரமின் சுறுசுறு வியக்க வைக்கிறது.

"கால் ஊனம்ங்க" என்று விக்ரமிடம் நாடகமாடி விட்டு, அவரைப் பார்க்கும் போதெல்லாம் பயந்து காலை மடக்கிக் கொண்டு ஜோதிகா அலைவதும், "நாங்க சைவப் பிள்ளை" என்று சொல்லிவிட்டு, யாருக்கும் தெரியாமல் சிக்கன் பிரியாணியை ஜோதிகாவும் அவரது தங்கையும் காலி பண்ணுவதும் சுவாரஸ்யம்!

'சாமி' படத்தைப் போலவே, இந்தப் படத்திலும் வேற்று மொழி வில்லன். ஒட்டவேயில்லை. கிளைமாக்ஸில் போலீஸ் வேனிலிருந்து இறங்கி (அதிகாரி உதவியுடன்) ஆளுங்கட்சித் தலைவரைப் போட்டுத் தள்ளிவிட்டு, அதே வேனுக்குள் திரும்ப வருவது, ஓல்டு ஸ்டைல் என்றாலும் விறுவிறுப்பான காட்சி.

"அநியாயம் பண்ணினா ஆண்டவனுக்குப் பிடிக்காது, அசிங்கமா பேசினா அருளுக்குப் பிடிக்காது" - இப்படியொரு வசனத்தை மையமாக வைத்துக் கொண்டு, டிராபிக் போலீஸிலிருந்து கட்சித் தலைவர் வரை பேசும் அச்சேற்றப்படமுடியாத வார்த்தைகள்... ச்சீய்! சென்சார், வார்த்தைகளை அழித்தாலும் உதட்டசைவு காது கூச வைக்கிறது.

தமக்கென்று தனி காமெடிப் பாணியை வைத்திருக்கும் வடிவேலு, இந்தப் படத்திலும் கலக்குகிறார்.

இசை ஹாரிஸ் ஜெயராஜ். 'சாமி'யில் ஹிட் பாடல்களைத் தந்தவர்.

ஏற்கெனவே அரசியல்வாதிகள் மீது ஏகக் கடுப்பில் இருக்கும் மக்கள், இந்தப் படத்தை வசூல் படமாக்க அதிக வாய்ப்பிருக்கிறது.

— மிஸ்டர் வீ

கவிஞர் கண்ண தாசனின் இச்சு இச்சு மூட்டும் தமாஷை, தாங்கிக் கொள்ள முடியாமல், சட்டென்று கோபம் வந்து, கவிஞரைக் கெட்ட வார்த்தை சொல்லி எம்.எஸ். விஸ்வநாதன் திட்டினாலும், கவிஞர் கோபப்பட்டு, பதிலுக்குக் கடுமையாக எம்.எஸ்.வியை ஏதாவது திட்டப் போகிறார் என்று பார்த்தால், சற்றும் எதிர்பாராத விஷயம் அங்கே நடக்கும்.

எவ்வளவு வேகமாய் கோபப்பட்டாரோ, அதே வேகத்தில் கோபம்



'மேஜர் சந்திரகாந்த்' படத்தில் ஜெயலலிதா - நாகேஷ்

பாட்டும் மெட்டும்!

காணாமல்போய், சட்டென்று ஸ்நேகமாக, எம்.எஸ்.வி, "எனக்கு ரொம்பக் கூச்சமா இருக்குது அண்ணே! நீங்க என்னடான்னா..." என்று குழைவான குரலில் பேசுவார். இரண்டு பேரும் ராசியாகி விடுவார்கள். "சரி...சரி... வேலையைக் கவனிப்போமா?" என்று எம்.எஸ்.வி ஹார்மோனியத்தில் விரல்களைப் பதிப்பார்.

கண்ணதாசன் பாட்டெழுதுகிறபோது, 'பொறி' கிடைத்து, அதிலிருந்து வந்த பாட்டுகள் நிறைய உண்டு.

ஒரு முறை பாலசந்தர், கண்ணதாசன், எம்.எஸ்.வி. மூன்று பேரும் உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு பேர், ஒருவரைக் காதலிக்கிற சிச்சுவேஷனை பாலசந்தர் விளக்கிக் கொண்டிருந்தார். பேச்சோடு பேச்சாக அவர், ஒருத்தி, இன்னொருத்தியைப் பார்த்து 'பைத்தியக்

நாகேஷ்

காரி!' என்று சொல்வதாகச் சொல்லவும், பொறி தட்டியது கவிஞருக்கு. பாட்டு பிறந்தது அந்தக் கணமே! அந்தப் பாட்டுதான் 'அடிப் போடி பைத்தியக் காரி!'

அந்தப் பாட்டில் மிக அற்புதமான ஒரு வரி வரும். எப்படித்தான் கவிஞர் கண்ணதாசனுக்கு இவ்வளவு நுணுக்க மாகக் கற்பனை தோன்றுகிறதோ என்று பிரமிக்க வைக்கும் வரிகள் அவை.

'கண்ணின் அருகில் இமை இருந்தும், கண்கள் இமையைப் பார்த்ததில்லை!' இத்தகைய கற்பனைத் திறம் கொண்ட ஒரு கவிஞரை நான் பார்த்ததில்லை.

கண்ணதாசன் பாடல் எழுதுவதற்காக ஏதாவது ஸ்டுடியோ பக்கம் வந்து, அங்கே நான் நடிக்கிற படப்பிடிப்பு ஏதாவது நடந்து கொண்டிருந்தால், உடனே என்னை வரச் சொல்லி தகவல் அனுப்பு வார். நான் பிரேக் நேரத்தில் போய் பார்க்கத் தவறமாட்டேன்.

ஒரு தடவை அவர் என்னை கூப்பிட்டு அனுப்ப, நான் போய் அவரைப் பார்த்தேன். "நாகேஷ்! உன் படம் தான்! 'அனுபவி ராஜா அனுபவி!' அதுல நீ மெட்ராஸ் ரோடுல நடந்து கிட்டே பாடுறதா பாட்டு எழுதணும்!'' என்றார்.

நான், ''கவிஞரே! நான் தாரா புரத்துக்காரன். மெட்ராஸ் வந்ததுலே யிருந்தே எனக்கு ஒரு பெரிய சந்தேகம் உண்டு. எங்க ஊர்ல எல்லாம் கன்னுக் குட்டியை அவிழ்த்து மாடுகிட்டு விடு வாங்க. அது ஓடிப்போய் பசுமாட்டு மடியில முட்டி, முட்டி, பாலைக் குடிக்கும். அப்புறம் கன்னுக் குட்டியை இழுத்துக் கட்டிவிட்டு, கறந்தால், மாடு பால் கறக்கும். ஆனா பாருங்க அண்ணே! இந்த மெட்ராஸ்ல கன்னுக்குட்டியோட தோலுக்குள்ளே வைக்கோலை அடைச்சு வெச்சிடறாங்க. அந்த வைக் கோல் கன்னுக்குட்டியை, மாட்டுகிட்டே கொண்டு போய் ரெண்டு நிமிஷம் காட் டறான். மாடு பால் சுரக்க ஆரம்பிச்சிடுது. இது எப்படின்னு எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு!'' என்றேன்.

'நீ சொல்றது கூட சுவாரசியமாகத் தான் இருக்கு. இதைக் கூட பாட்டுல வைச்சிக்கலாம்'' என்றார்.

வழக்கமாக, கவிஞர் கண்ணதாசன் பாட்டு எழுதுகிறபோது, பஞ்சு அருணா சலமும் கூடவே இருப்பார். அவர் பாட்டு வரிகளைச் சொல்லச் சொல்ல, இவர் எழுதிக் கொள்ளுவார்.

''ம்.... பஞ்சு எழுதிக்க!'' என்று சொல்லிவிட்டு ''மெட்ராஸ் நல்ல மெட்ராஸ்!'' என்று ஆரம்பித்து மடமட வென்று பாடல் வரிகளைச் சொல்லிக் கொண்டே வந்தவர், எனக்கு இனிய ஆச்சரியத்தைக் கொடுத்தார்.

"வைக்கலாலே கன்னுக்குட்டி
மாடு எப்போ போட்டது?
கக்கத்துல தூக்கி வெச்சா
கத்தலையே என்னது?''


என்று அவர் சொன்னபோது, எனக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது.

"என்ன நாகேஷ் நல்லா இருக்கா?'' என்று கவிஞர் கேட்டபோது, 'அண்ணே! எனக்குள்ளே இருக்கிற சந்தோஷத்தை எப்படிச் சொல்லறதுன்னு தெரியலை எனக்கு'' என்று சொல்லி கைகுலுக் கினேன்.

''எதிர்க்கட்சித் தலைவர் உங்க மேலே கேஸ் போட்டிருக்காரு..''
''எதுக்கு?''
''போன வாரம் மீட்டிங்குல நீங்க சொன்ன கதை அவரோடதாம்.''
- வி. கிருஷ்ணகுமார்



இந்தப் பாட்டை கே.பாலசந்தர் படம் எடுத்த விதம் கூட மறக்க முடியாதது. அப்போது நான் மிகவும் பிரபலமான காமெடி நடிகன். இந்தப் பாடலை, பிஸியான சென்னை நகரத் தெருக்களில் தான் படமாக்கியாக வேண்டும். நடு ரோட்டில் எப்படி ஷூட் பண்ணப் போகிறார்கள்? கூட்டம் சேர்ந்து விடுமே! என்றெல்லாம் எனக்குள் நான் குழம்பிக் கொண்டிருந்தேன்.



• கண்ணதாசன் - எம்.எஸ்.வி

கேமராமேன் சுந்தரம் தான் அந்தப் பாடல் காட்சியைப் படம் பிடித்தார். ஒரு ஜீப்பின் பின் பகுதியில் கேமராவைப் பொருத்தி விட்டார்.

டைரக்டர் பாலசந்தர், என்னிடம், "நீ எதைப் பற்றியும் கவலைப்படவேண்டாம். காரில் ஏறிக் கொள். நான் சொல்லுகிற இடத்தில், சொல்லுகிற நேரத்தில் காரிலிருந்து இறங்கிவிடு. உனக்கு முன்னால் ஜீப்பில் கேமரா ரெடியாக இருக்கும். ஒரே ஒரு பாட்டு வரியைப் பாடியபடி நடி. அதை எடுத்தவுடன், மறுபடி காருக்குள் ஏறிக் கொள்'' என்று இன்ஸ்டிரக்ஷன்ஸ் கொடுத்தார்.

பிஸியான பாரீஸ் கார்னருக்குப் போய், காரிலிருந்து இறங்கி, "சிட்டுக்கட்டு கணக்காக, இங்கே வீட்டைக் கட்டி இருக்காக'' என்று பாடி நடிப்பேன். அதைப் படம் பிடித்தவுடன், மறுபடி காருக்குள் ஏறிக் கொண்டு புறப்பட்டு விடுவோம்.

இப்படி சென்னை நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் போய், பல்வேறு பாடல் வரிகளையும் படம் பிடித்தது, மறக்க முடியாத அனுபவம்.

மேஜர் சந்திரகாந்த். இதுவும் பாலசந்தர் இயக்கிய படம்தான். மேடையில் நடிக்கப்பட்டு, பலத்த வரவேற்பைப் பெற்று, பின்னர் சினிமாவானது. கதாநாயகி ஜெயலலிதா, வானொலியில் பாட்டுப் பாடுவது போல ஒரு காட்சி வரும். பழைய காலத்து ரேடியோ. அதன் முன்னால், பாட்டைக் கேட்க அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாரும் கூடி இருப்பார்கள். லோக்கல் மைக்செட் காரரிடமிருந்து ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு மைக்கில் ஹீரோயின் பாடுவார்.

அந்தப் பாடலில் என்ன விசேஷம் என்றால், இடையிடையே வீட்டு சமையல் கட்டில் இருக்கும் பாத்திரங்களைத் தட்டி, டம்ளருக்குள்ளே ஸ்பூனைத்தட்டி, மியூஸிக் போடுவேன் நான். இடையே ஒரு இடத்தில் பாடுகிற ஹீரோயினைப் பாராட்டி கைகொடுத்து விட்டு, அப்படியே கைகளை அசைத்து, வளையல்களின் ஓசையைக் கூட பாட்டில் சேர்த்திருப்பார்கள். அது நல்ல ரசனையோடு எடுக்கப்பட்ட நகைச் சுவைக் காட்சி.

ஒரு நாள் காலையில் எனக்கு ஒரு டெலிபோன் அழைப்பு வந்தது. "நான் உங்கள் ரசிகன்!'' என்றார் போன் பேசியவர்.

"நல்லது! சொல்லுங்க!"

"என் பெயர் சாஸ்திரி. சென்சார் போர்டு அதிகாரி!"

(சிரிப்பு தொடரும்)

கண்ணசைவு

உத்தமசோழன்

காலை எட்டு மணிக்கே அந்த அரசாங்க அலுவலகத்தின் முன்னே கூட்டம் சேர ஆரம்பித்து விட்டது. என்னென்னவோ கோரிக்கை மனுக்களோடு.

ஜனங்கள் நுழைந்த வேகத்தைப் பார்த்ததும், அலுவலர்கள் மிரண்டு போனார்கள்.

"என்னப்பா.. இது...! ராத்திரி பன்னிரண்டு மணிக்கு ஆபீஸ் திறந்திருந்தாலும் மனுவைக் கொண் டாந்து நீட்டுவீங்க போலிருக்கே... இன்னைக்கு எந்த வேலையும் நடக்காது. இன்னைக்கு ஆபீஸ்லே இன்ஸ்பெக்ஷன்பா. பெரிய ஆபீஸர் வர்றாருன்னு ராத்திரியெல்லாம் தூங்காம, சாப்பிடாம, அல்லாடிக்கிட் டிருக்கோம். நீங்கள்லாம் போயிட்டு நாளைக்கு வாங்க...!"

பொது மக்களின் சந்தோஷம், திறந்ததும் மூடிய காவிரியைப் போல் வற்றிப் போனது.

அந்த நேரம் பார்த்து ஜீப்பில் வந்து தாசில்தார் இறங்க, அவரை அலுவலர்கள் கவலையோடு மொய்த்துக் கொண்டார்கள்.

"இன்ஸ்பெக்ஷன் ஆபீஸர் சரியா ஒன்பது மணிக்கே வந்துடறார். எல்லாத்தையும் தயாரா வச்சிருங்க. எதுவும் ஏடாகூடமா ஆகாம இருக் கணும். ஏன்னா, .தீக்குச்சியைக் கிழிக்கிற மாதிரி அந்த மனுஷனுக்கு சரக் சரக்குன்னு கோபம் வருது..."

"நம்ப மாவட்ட அதிகாரியை பாத்துட்டீங்களா சார்...?"

"பாக்காம...? வரப் போற அதிகாரிக்கு என்னென்ன பிடிக்கும்.. .என்னென்ன பிடிக்காதுன்னு, அவரது ஜாதகத்தையே பிட்டுப்பிட்டு வச்சேன். நாம என்னென்ன செஞ்சு வச்சிருக்கோம்னு விவரமா சொன்னேன். அப்பவும் நம்ப மாவட்ட அதிகாரிக்குத் திருப்தியில்லே. 'என்ன செய்வீங்களோ, ஏது செய்வீங்களோ. எந்தப் பிரச்னையும் வராம பாத்துக்கிறது உங்க பொறுப்புதான்.'ன்னு கறாரா சொன்ன தோட கை கழுவிட்டாரு..."

பூ வேலைப்பாடுள்ள சின்னச் சின்ன அழகழகான பீங்கான் தட்டுகளில், தோலுரித்து விதை நீக்கிய ஆரஞ்சு சுளைகள், கொட்டை எடுத்த பலாச்சுளைத் துண்டுகள், வறுத்த முந்திரிப் பருப்பு, தித்திப்பான... தித்திப்பில்லாத பிஸ்கெட் துண்டுகள், செர்ரிப் பழங்கள், பேரீச்சம் பழங்கள் என்று வகை வகையாய்.

'இதுக்கு மேலே என்னதான் செய்ய முடியும்...?' என்று தமது ஏற்பாடுகளை நினைத்து, தாமே திருப்திபட்டுக் கொண் டார் தாசில்தார்.

சரியாக ஒன்பது மணிக்கு இன்ஸ் பெக்ஷன் ஆபீஸர் காரில் வந்திறங்கினார். பின்னாலேயே மாவட்ட அதிகாரி, முகம் முழுக்க வெளுத்துப் போய். (வரும் போது என்னென்ன டோஸ் வாங்கிக் கட்டிக் கொண்டு வந்தாரோ!)

குடுகுடுவென்று வாசலுக்கு ஓடிப் போய் பெரிதாக ஒரு கும்பிடு போட்டார். தாசில் தாரின் உடம்பு 'இத்தனை கோணல் மாண லாகக் கூட வளையுமா என்ன...!' என்று ஜன்னலோரமும், கதவோரமும் பதுங்கி யிருந்த அலுவலர்கள், இந்த பயச் சூழலில் கூட ஆச்சரியப்படத் தவறவில்லை.

காரிலிருந்து இறங்கிய இன்ஸ்பெக்ஷன் ஆபீஸர், தாசில்தாரை ஏற இறங்க ஒரு பார்வை பார்த்தார். அந்தப் பார்வைக்கு அர்த்தம் புரியாமல் சப்தநாடியும் ஒடுங்கிப் போய் நின்றார் தாசில்தார்.

"ஆபீஸ் வாசல்லே... காம்பவுண்ட்

நீளம் வரைக்கும் செதுக்கி, கூட்டி... பிளீச்சிங் பவுடரெல்லாம் போட்டு ரொம்ப நீட்டா இருக்கே.!'

''ஆஹா... எடுத்த எடுப்பிலேயே பாராட்டா...!'' உச்சிகுளிர்ந்து போனது தாசில்தாருக்கு.

"பார்த்தவுடனேயே தெரியுதே... இதெல்லாம் எனக்காக இன்னைக்கு செஞ்சதுன்னு. பிரயோஜனமில்லே. இந்த சுத்தம் தினமும் இருக்கணும். தெரிஞ்சுதா...?"

தாசில்தாரின் முகம் சரேலென்று சுருங்கிப் போனது. ''சரிங்க சார்...!'' என்று தலையாட்டினார்.

அலுவல் அறையில் நுழையும் போதே, இன்ஸ்பெக்ஷன் ஆபீஸருக்குப் பின்னால் சென்ற மாவட்ட அதிகாரி தாசில்தாரைப் பார்த்து, 'எல்லாம் ரெடியா...?' என்று கண்ணாலேயே கேட்டார். 'சகலமும் தயார்.!' என்று வேகமான தலையசைப்பால் சொன்னார் தாசில்தார்.

இன்ஸ்பெக்ஷன் ஆபீஸர் உட்கார்ந்ததும், அவர் பார்க்க வேண்டிய கோப்புகளை மேஜை மீது வரிசையாக எடுத்து வைத்தார்கள்.

அவருக்குப் பக்கத்தில் வெள்ளை வெளேரென்று துணி போர்த்திய டீபாய் மீது, தயாராய் இருந்த பழத்தட்டுகளை வைத்திருந்தார்கள். அவரது பார்வை படும்படி, பளிங்கு மாதிரி இருந்த புத்தம்புது 'ஏரா' கிளாஸில் (இந்த கிளாஸ் வாங்குவதற்கென்றே ஒரு ஆள் திருச்சிக்குப் போய் விட்டு வந்திருந்தான். அது தனிக் கதை.) வடிகட்டிய இளநீர் நிரப்பி மூடி வைக்கப்பட்டிருந்தது.

இதையெல்லாம் பார்த்ததும் 'ஐ.ஓ.' முகம் சுளித்தார்.



பார்வையால் தாசில்தாரை எரித்தார். அந்தப் பார்வைக்கு இங்கே நான் இன்ஸ்பெக்ஷனுக்காக வந்தேனா... இல்லே தீனி திங்க வந்தேனா...?' என்று அர்த்தம்.

சந்தடியில்லாமல் பழத் தட்டுகளை கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு, பாவமாய் நின்று கொண்டார் தாசில்தார்.

ஏதோ ஒரு கோப்பு... பதிவேடு... இரண்டையும் கொண்டு வரச் சொன்னார், இன்ஸ்பெக்ஷன் அதிகாரி. தாசில்தார் உதவியாளரைப் பார்த்து, "சீக்கிரமா எடுத்துக்கிட்டு வாங்க" என்று உத்தரவு போட்டார்.

ஒரு கையால் ஆய்வுக்குறிப்பை புரட்டிக் கொண்டேயிருந்த அதிகாரி, மறு கையால் பக்கத்திலிருந்த பலாச்சுளை துண்டங்களை அவரேயறியாமல் வாயில் போட்டுக் கொண்டேயிருந்தார். (தூரத்தில் தள்ளி வைத்திருந்த பலாச்சுளைத் தட்டு, ஆபீஸரின் கைக்கெட்டும் தூரத்திற்கு எப்போது வந்தது என்பது தாசில்தார் மட்டுமே அறிந்த ரகசியம்)

மாவட்ட அதிகாரி 'ஐ.ஓ.வின்' பலாச்சுளை ருசியைக் கவனித்து விட்டார். அவர் முகத்தில் ஒரு திடீர்ப் பிரகாசம். தாசில்தாரை நோக்கி தம் ஓரப் பார்வையை வீசினார். அவரிடமோ ஒரு மந்தகாசப் புன்னகை. ஒரு ஆள் இன்னும் இரண்டு மூன்று பலாச்சுளைகளை கொட்டை நீக்கி, துண்டாடி இன்ஸ்பெக்ஷன் ஆபீஸர் கவனிக்காத நேரம் பார்த்து, அந்தத் தட்டில் வைத்து விட்டுப் போனார்.

இதுபோல் நான்கைந்து முறை நடந்தது. இன்ஸ்பெக்ஷன் ஆபீஸரின் கை, அவரையும் மீறி பலாச்சுளை இருந்த பக்கமே போய் போய் வந்தது. அப்படி ஒரு அபூர்வ வக்க பலாச்சுளை அது. எங்கெங்கோ தேடி அலைந்து அதைக் கொண்டு வந்திருந்தார் தாசில்தார். வாயில் போட்டால் போதும். தித்திப்பாக... வெண்ணெய் போல் கரைந்து போகும்.

பூகம்பமாய் இருக்கும் என்று எதிர்பார்த்த இன்ஸ்பெக்ஷன் பூந்தென்றலாய் மாறிப் போனது. எல்லாம் அந்தப் பலாச்சுளை செய்த மாயம்தான்.

பத்து நிமிஷத்தில் இன்ஸ்பெக்ஷனை முடித்துக் கொண்ட ஆபீஸர், நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டார். அதற்கு முன்பே அவரது கார் வாசலில் வந்து தயாராக நின்றது.

அந்த நேரம் பார்த்து மாவட்ட அதிகாரி, தாசில்தாரை குறுகுறுவென்று பார்த்தார். அந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம் என்று தாசில்தாருக்குத் தெரியாதா என்ன...!

முகத்தை இலேசாக அசைத்து, கண்ணால் ஜாடை காட்டினார்.

இருந்தாலும், 'நாம் சொன்னதை தாசில்தார் சரியாகப் புரிந்து கொண்டாரோ என்னவோ' என்று மாவட்ட அதிகாரிக்குக் கொஞ்சம் சந்தேகம்.

அவருக்குக் கிடைத்த வினாடி நேர சந்தர்ப்பத்தில், தாசில்தாரிடம் கிசுகிசுத்தார்.

''நான் என்ன கேட்டேன்னு புரிஞ்சுதா...? தலையாட்டுறீங்க...?''


தாசில்தார் அவரை மிதப்பாகப் பார்த்தார்.

"என்ன சார் நீங்க... முப்பது வருஷ சர்வீஸ். இது கூடப் புரியலைன்னா... எப்படி...? ஆபீஸர் கை பலாச்சுளையை

தேன்...தேன்... ரசித்தேன்!

'வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்.' பட வேலைகள் ஒரு புறமிருக்க, 'குமார சம்பவம்' இந்திப் பட ஆயத்தங்களில் மும்முரமாயிருக்கிறார் கமல்ஹாசன்.

''இந்திய அழகுக்குச் சிறந்த உதாரணம் மாதுரி தீக்ஷித்தான். எனக்கு மனைவியாகவும், ஒரு குழந்தைக்குத் தாயாகவும் நடிக்க வேண்டியிருக்கும் என்றதும், எனக்கு நினைவுக்கு வந்தவர் அவர்தான். அவரை இந்தக் காரக்டரில் பொருத்தி கற்பனையில் ரசித்தேன். நான் தொடர்பு கொண்டதும், மாதுரியும் ஒப்புக் கொண்டுவிட்டார்'' என்று படு உற்சாகமாகச் சொல்கிறார் கமல்ஹாசன்.



விட்டு வேறெங்கும் போகலைன்னு தெரிஞ்சப்புறமும் சும்மா இருக்க முடியுமா..? இதே மரத்து பலாப்பழம் இரண்டு பெரிசு பெரிசா கார் டிக்கிக்குள்ளே வச்சாச்சு. இதானே கேட்டீங்க..!"

மாவட்ட அதிகாரிக்கோ சொல்லி மாளாத ஆச்சரியம்.

பலாச்சுளைகளின் அருளாசியோடு எந்தவித 'சேதமுமின்றி' கன ஜோராக இன்ஸ்பெக்ஷன் நடந்து முடிந்த சந்தோஷத்தோடு நேரே வீட்டிற்குப் போனார் தாசில்தார்.

ஏற்கெனவே அவருக்காக அங்கே இரண்டு மூன்று பேர் காத்திருந்தனர்.

"வாங்க... வாங்க..!" என்றபடியே உள்ளே நுழைந்தவர், "ராணி... எல்லோருக்கும் டீ கொண்டா...!" என்று உள்பக்கம் பார்த்துச் சொல்லிவிட்டு, அறையில் உட்கார்ந்து கொண்டார்.

டீ வந்தது, வந்தவர்கள் போவதற்குள் இன்னும் சிலர், வேறு வேலையாக.

உள்ளே திரும்பினார்.

"ராணி... இன்னும் நாலு டீ...!"

"ஒரு நிமிஷம் உள்ளே வந்துட்டுப் போறீங்களா...?"

அடுக்களையிலிருந்து அவரது சகதர்மிணியின் மரியாதையான அழைப்பு.

"முதல்லே... டீயை கொடுத்தனுப்பு. இவங்க வேலையை முடிச்சு அனுப்பிட்டு உள்ளே வர்றேன்..!"

"முதல்லே இங்கே வந்துட்டுப் போங்க..!"

இப்போது வீட்டம்மாவின் குரலில் கண்டிப்பு கூடுதலானது. உள்ளே எழுந்து போனார். அவ்வளவுதான். அவரது சம்சாரம் பொறுமித் தள்ளி விட்டார்.

'வீட்டு நிலவரம் ஏதாவது தெரியுதா உங்களுக்கு...? உள்ளே வந்து பால் இருக்கா என்னென்னு கேட்காம, ஆபீஸ் ரூமிலே உக்கார்ந்தபடியே எல்லோரையும் வச்சுக்கிட்டு டீ அனுப்புன்னு சொல்லிக் கிட்டேயிருந்தா எப்படி? யோசிக்க மாட்டீங்களா...?"

தாசில்தார் முகம் பரிதாப நிலைக்கு மாறிக் கொண்டிருந்தது.

"சரி. யோசிக்கத்தான் இல்லே. 'உள்ளே வாங்கன்னு' கூப்பிட்டா, அதையாவது புரிஞ்சுக்கணுமா வேணாமா...?"

அப்போதுதான் கடைத் தெருவிற்குப் போய்த் திரும்பிய தாசில்தாரின் உதவியாள், அந்தம்மாவிடம் பால் பாக்கெட்டை நீட்டியபடி சொன்னான்.

"அம்மா... நம்ப தாசில்தாரய்யாவுக்கு மேலதிகாரிகளோட கண்ணசைவு... கால் அசைவுக்கெல்லாம் சடார் சடார்னு அர்த்தம் புரிஞ்சிடும். மேலதிகாரிங்க மனசுக்குள்ளே நினைச்சுக்கிட்டிருக்கிறதையெல்லாம் கூட, அவங்க மனசுக்குள்ளே புகுந்து கண்டுபிடிச்சு செஞ்சு முடிக்கிற சித்து வேலையெல்லாம் நிறையத் தெரியும். ஆனா.. சொந்தப் பிள்ளை என்ன கிளாஸ் படிக்கிறான்னுதான் தெரியாது. பாவம், விட்டுடுங்க.. இனிமேலா அவரு மாறப் போறாரு...?"

சம்சாரத்தின் முன் அசடு வழிய நின்று கொண்டிருந்தார் தாசில்தார்.



மாறிவரும் சுற்று

நதி வற்றி விட்டதில்
கரை புரண்டிருக்கிறது வருத்தம்
மழை தவறிப் போனதில்
மனம் பிழிந்திருக்கிறது துயரம்
மக்கள் சுரமற்றுப் போனதில்
தவிதவித்திருக்கிறது நெஞ்சம்
மகமாயி கோயிலில்
மாவிளக்கு தீபம்
அன்று சிரசெடுப்பு
கரகாட்டம், ஒலிபெருக்கி ஓலம்
முற்றும் கடந்து சென்று
'காப்பாற்று தாயே'
என்று கதறுகிற பெண் குரல்
பாலைவனப் பறவை நிழலாக
கற்பூரம் எரிகையிலே
கவ்வுகிற துக்கம்
எல்லாமே மாறுமென்று
ஏறிவரும் மாறு சுற்றில்
ஏங்கராட்டினத்தில் இரு
கைதட்டிச் சிரிக்கிறது
கண்மணிச் செல்வம்.
மீள்கிறது வாழ்க்கை.

- வையவன்

மௌனித்த வேளை...

மென்மையானதல்ல மௌனம் -
ஊடுருவி இதயம் கிழிக்கும்!
ஊமையானதல்ல மௌனம்
பேசாத சொற்களில் உறைந்திருக்கும்
சிதையாத அணுவீர்யம்!

துயர்முச்சின் மௌனம்
புயலின் பல்லவி
பிரளயத்தின் அனுபல்லவி!

காற்றும் ஒளிக்கீற்றும்
கிள்ளிச் சீண்டும்போது
புல்லரித்துப் புன்னகைக்கும்
குளத்துநீர் போல
அழகுதான் மொட்டவிழாத மௌனம்!

கையாளத் தெரிந்தால் மௌனம்
காக்கும் கேடயம் - இல்லையேல்
தாக்கும் ஆயுதம்!

- ஜனநேசன்





முன்பு
தெருக்களின் ஓரங்களில்
குப்பை கிடந்தது.
இன்று
குப்பைகளின் நடுவில்
தெரு செல்கிறது.

'குப்பைகளை எரிக்காதீர்' என அடிக்கடி
கோவை மக்கள் போராடுகிறார்கள்.
நாம் தூக்கி எறிந்த
நாணயம், நேர்மை, பண்பாடு, நீதி
ஆகியவை அதில் கிடக்கின்றன
என்கிற உண்மையும், அவற்றை
மீட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையும்
அவர்களுக்கு இருக்கிறது போலும்!
வெல்லட்டும் அவர்கள் முயற்சி!

அரசியல்வாதிகள் வீட்டுக் குப்பையில்
அவர்கள் அளித்த வாக்குறுதிகள்!
ஆசிரியர் வீட்டுக் குப்பைகளில்
மாணவர்களின் இளமைக் கற்பனைகள்!
மதவாதிகள் வீட்டுக் குப்பைகளில்
அன்பும், சகிப்புத் தன்மையும்!
அரசு ஊழியர் வீட்டுக் குப்பைகளில்
விண்ணப்பதாரர்களின் தகுதியும்
முன்னுரிமையும்!
என்றாவது ஒருநாள் இவை
புதைபொருள் ஆராய்ச்சியாளருக்கு
புகழ் சேர்க்கும்!

- கா.மு. சிதம்பரம்



புகைவண்டியில்
இருக்கை கிடைக்காது
கால்கடுக்க நின்று
நீண்டதூரம்
பயணிக்க நேரும்போதும்

ரேஷன் கியூக்களில்
மணிக்கணக்கில்
மண்ணெண்ணெய்க்காய்
தவமிருக்கும்போதும்

பஞ்சரான சைக்கிளை
வேகாத வெயிலில்
நாலு கிலோமீட்டர்
உருட்டிக் கொண்டு
செல்கின்றபோதும்

எப்படியும்
ஞாபகத்திற்கு வந்துவிடுகிறது

எப்போதோ ஒருமுறை
கண்முன்னே
கர்ப்பிணிப் பெண்ணொருத்தி
தட்டுத்தடுமாறி நின்று தவிக்கையில்
எழுந்திருக்க மனமின்றி
தூங்குவதைப் போல்
பாவனை செய்து
மேற்கொண்ட பஸ் பிரயாணம்!

- ஜெ. முருகன்



• விருது விழாவில்...



மீண்டும் சந்தானம்!

குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகே பாலிதீன் குப்பைகளைச் சேகரித்துக் கொண்டிருந்த இளைஞர் வழி காட்டினார். "பதினாறாவது குறுக்குத் தெருவிலே. இருபதாம் நம்பர் வீடு", நாம் தேடிப்போனது 'கம்யூனிஸ்ட் சந்தானம்' என்று குரோம்பேட்டைவாசிகளால் அழைக் கப்படும், சமூக சேவகர் சந்தானத்தை. கதவு திறந்தே இருந்தது. "அழைப்பு மணியை இயக்கிவிட்டு, கதவு திறக்கிறவரை கூட, என்னைத் தேடி வருகிறவர்கள் காத்திருக்கக் கூடாது. அதனால் இரவு பத்து மணி வரை என் வீட்டுக் கதவு திறந்தேதான் இருக் கும்" என்றபடி வரவேற்றார் சந்தானம்.

இப்படித்தான் கடந்த ஆண்டு மே மாதம், இருபத்து ஏழாம் தேதி காலை, திறந்திருந்த சந்தானம் வீட்டுக்குள் திபு திபுவென புகுந்தனர் ஐந்தாறு குண்டர் கள். ஏதோ உதவி கேட்டு வருகிறார்கள் என்று நினைத்து, "வாங்க உட்காருங்க" என்று சந்தானம் சொல்ல, வந்தவர்களோ, தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற, சந்தானத் தின் மீது அரிவாளு டன் பாய்ந்தார்கள். தலை, கைகால் என்று விழுந்த வெட்டு களோடு, இரத்த வெள்ளத்தில் சந்தானம் சாய, வந்த நோக்கம் நிறைவேறி விட்ட தாக, கொலை வெறிக் கும்பல் ஓடி விட, குரோம்பேட்டை பல்லாவரம் மக்களின் பிராத்தனையால், அபா யக் கட்டத்தைத் தாண் டிய சந்தானம், மூன்று மேஜர் அறுவை சிகிச்சை களுக்கு பிறகு, மீண்டு எழுந்திருக்கிறார். இனி சந்தானம் அமைதியாகி விடுவார் என்றுதான் எல்லோருமே எதிர் பார்த்தார்கள். ஆனால் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய மறு நாளே, மக்கள் பிரச்னைகளுக்காக போராட்டத்தில் குதித்துவிட் டார். குரோம்பேட்டை மேம் பாலம் கட்டும்பணி, இட்ட காலத்தைத் தாண்டி, நான்கு ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதைக் கண்டித்து, சாலை மறியலில் இறங்கினார். போராட்டம் என்பது சந்தானத்தைப் பொறுத்தவரை கடைசி ஆயுதம்.


சந்தானத்தின் தளராத போராட்ட குணத்தைப் பாராட்டும் விதமாக, 2004ஆம் ஆண்டிற்கான சேவா ரத்னா விருதினை எக்ஸ்னோரா அமைப்பு இவருக்கு வழங்கி கௌரவித்திருக்கிறது.

"இந்தச் சமூகம் இல்லாமல் நான் இல்லை. அப்படியிருக்க, இந்தச் சமூகத் தைப் பற்றி நான் எப்படி கவலைப்படா மல் இருக்க முடியும். இறுதிவரை மக்கள் பிரச்னைகளுக்காகப் போராடிக் கொண்டே இருப்பேன்" என்று சொல்லும் சந்தானம் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி ஓய்வு பெற்ற தொழிற்சங்கவாதி.

- ஜெய

ARTHRITIS ❋ மூட்டுவலி / CALCANEAL SPUR ❋ குதிகால்வலி

▼ குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) ▼ கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். ▼ கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். ▼ கழுத்து வலி (Cervical Spondylitis) ▼ நடு முதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) ▼ இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) ▼ குதிகால் இணைப்புகளில் வலி முதலி யவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோ சனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்க விளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வருகிறார்கள்.



மதிப்பிற்குரிய டைரக்டர் திரு. S.P. நாயுடு அவர்களுக்கு,

நான் சுமார் 15 வருடங்களாக மூட்டுவலியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தேன். எத்தனையோ வைத்தியங்கள் பார்த்து விட்டேன். எந்த வைத்தியத்திற்கும் சரியாகவில்லை. மேலும் பக்க விளைவுகளும் ஏற்பட்டது. அதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். இந்த கால் வலி குறைந்து இனிமேல் நடப்பது என்பது கனவுதான் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அப்போது தான் உங்கள் நேச்சர் க்யூர் சென்டர் பற்றி கேள்விப்பட்டேன். உங்கள் சிகிச்சையினால் என்னுடைய கால்வலி குணமாகிவிட்டது. உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை. நன்றி சொல்ல வார்த்தைகள் இல்லை. டாக்டர், நர்ஸ்கள், மேசியர்ஸ் எல்லோரும் மிகவும் அன்பாக சிகிச்சை அளித்தார்கள். ஆஸ்பத்திரி என்ற உணர்வே ஏற்படவில்லை. என் வீட்டிலேயே இருப்பதை போல் உணர்ந்தேன். இவ்வளவு உயர்ந்த நோக்குடன் நடத்தி வரும் உங்கள் நேச்சர் க்யூர் சென்டர் மேன்மேலும் ஆலமரமாய் தழைக்க வேண்டும். உங்கள் டாக்டர், நர்ஸ்கள், மேசியர்ஸ் குடும்பங்கள் சுபிட்சமாய் இருக்க வேண்டும் என்று எங்கள் குலதெய்வம் திருப்பதி ஏழுமலையானை பிரார்த்திக்கிறேன்.

தேதி: 1.5.04

S.Mythili Sridharan,
59/6, 3rd Main Road, K.B.Nagar, Adyar, Ph:52114678

CANCER- புற்றுநோய்: ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு குணமாகும்படியான மூலிகை மருந்து. முற்றிய நிலையில் உள்ள RADIATION, CHEMOTHERAY எடுத்துக் கொள்ளும் புற்று நோயாளிகளுக்கு பக்க விளைவுகளை குறைக்கும்படியான மூலிகை மருந்து அனுப்பி வைக்கப்படும்.

ASTHMA- ஆஸ்துமா: 1. Dyspnea(மூச்சுத் திணறல்) 2.Respiratory Difficulties (மேல்மூச்சு வாங்குதல்) 3. Dry cough (வறட்டு இருமல்) 4. Cough with sputum (சளியுடன் கூடிய இருமல்) 5. Running Nose (மூக்கில் நீர் வழிதல்) 6. Nasal Block (மூக்கடைப்பு)

PARKINSON'S - ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு (மூளையில் பேசல் கேங்கிலியே பகுதியில் உள்ள நியூரான்கள் அதிகம் பாதிப்படையாதவர்களுக்கு) கை நடுக்கம், விறைப்புத் தன்மை, மற்ற வேக குறை பாடுகள் உள்ளவர்களுக்கு பர்கின்சன் ஹெர்பல் லேகியம் மற்றும் கேப்சூல் தருகிறோம். எங்கள் மருத்துவ மனையில் தங்கி விறைப்புத் தன்மை குறைய சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம்.

WEIGHT REDUCTION (உடல் பருமன்) for LADIES & GENTS

DIABETES-சர்க்கரை நோய்: FOR TYPE 2- சிறப்பான இயற்கை மருத்துவம். FOR TYPE 1- இன்சுலினை-ஐ குறைக்கும்படியான மூலிகை மருந்து கொடுக்கிறோம்.

DRY EYE SYNDROME- கண்களில் நீர் வராமை: நேரடி இயற்கை சிகிச்சை: ஏறத்தாழ 15 நாட்களில் கண்களில் இயற்கையில் நீர் வரும்.

FLATULENCE- வாயுத்தொல்லை: சிறப்பான மூலிகை மருந்து தரப்படும்.

எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

எங்கள் மருத்துவமனையில் இருக்கும் வயதான நோயாளிகளை (குறிப்பாக ARTHRITIS & PARKINSON'S) கனிவுடனும் அன்புடனும் பராமரிக்க மருத்துவமனையிலேயே தங்கி பணியாற்ற குடும்ப பாரமற்ற மகளிர் தேவை பயிற்சி அளிக்கப்படும் அனுபவம், திறமை மற்றும் கல்வி தகுதிக்கு ஏற்றவாறு ஊதியம் நிர்ணயிக்கப்படும் கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

அடையார் இயற்கை வைத்திய மையம்
ADYAR NATURE CURE CENTER ™

Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650 (Opp. Gandhi Nagar Bus Terminus)
www.adyarnaturecure.com e-mail: adyarnaturecure@yahoo.com,

குறிப்பு: சாதா. A/c தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டி.வி., போன் வசதியுடன் கிடைக்கும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.

"பிள்ளையார் நோன்புக்கு வளவுக்குள் இருக்கும் பெரியவங்க, பங்காளிங்க கிட்ட இழையெடுத்துக்கறது வழக்கம். இல்ல, சிவன் கோவிலில் பெரியவங்க காலில் விழுந்து இழையெடுத்துக்கணும். வளவில் பெரியண்ணன் அழகப்பன் ஊருக்குப் போயிருக்காஹ. ஆச்சி பலகாரம் செஞ்சு பூசைமட்டும் போட்டாங்க. மத்தவங்கள்ளாம் பெரியப்பாவிடம் இழை எடுக்கப் போயிட்டாங்க. சரி! பெரியவுகன்னா சார் ஞாபகம்தான் வந்தது. விழுந்து வணங்கோணும்னு வந்திருக்கேன்" என்றான் கதிரேசன்.

பழனியப்பன் கண்களில் நீர் கசிந்து விட்டது. சமாளித்துக் கொண்டார்.

"மனசை உழப்பிக்கிடாத. உள்ள வந்து விழுந்து வணங்கு. இழை எடுத்துத் தாரேன் வா."

எதிரில் தாமரை ஒரு வட்டில் நிறைய நோன்புப் பலகாரங்களை எடுத்துக் கொண்டு வந்தாள்.

"இரு தாமரை! கதிரு விழுந்து கும்பிட வந்திருக்கான். அப்புறம் பலகாரம் கொடு."

"ஆச்சி, நீங்களும் நில்லுங்க" என்று விசாலாட்சியையும் நிற்க வைத்து விழுந்து வணங்கினான். கூம்பில் பிடித்து வைத்திருந்த இழை நூல் திரியை,



3

விளக்கில் பற்ற வைத்துக் கொடுக்க வாங்கிக் கொண்ட கதிரேசன், விழுங்கினான்.

அருணாசலம் கிண்டலாகச் சிரித்தபடி வெளியில் வந்தான்.

கதிரேசன் பேசாமல் நின்றான்.

"நீ ஏது இந்தப் பக்கம்?" என்றான் அருணாசலம்.

வாசலில் நுழைந்த கதிரேசனை அப்பா 'வா' என வரவேற்றார். உள்முற்றம் வரை வந்தவனை அண்ணன் 'எதற்கு வந்தாய்?' என்கிறான். தாமரை ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"பிள்ளையார் நோம்புக்கு பெரியவங்க காலில் விழுந்து கும்பிடுவது சம்பிரதாயம். அதான்."

"ஒனக்குத் தெரிஞ்சிருக்கு" என்றார் பழனியப்பன்.

சீற்றத்துடன் அருணாசலம் அப்பச்சியை முறைத்தான். பின்பு சுதாரித்துக் கொண்டான்.

"ஆதாயம் இல்லாம செட்டியார் ஆத்தோட போகமாட்டார்" என்று

வலம்புரி முத்து



சொல்லிவிட்டு, "ஆத்தா! நான் கடைக்குக் கிளம்பறேன்" என வெளியேறினான்.

"வா, வாசத் திண்ணைக்குப் போவோம்" என்று அவனை அழைத்துக் கொண்டு போனார்.

தாமரையும் கையில் பலகாரத் தட்டுடன் வாசலுக்குப் போனாள்.

"குறுந்தொகையிலிருந்து ஒரு செய்யுள்" என்றபடி, வழக்கமாக அந்த வீட்டு வாசல் திண்ணையில் நடைபெறும் இலக்கியப் பரிவர்த்தனையைப் பழனியப்பன் தொடங்கி வைத்தார்.

"சொல்லுங்க" என்றபடி கதிரேசன் அவரருகில் அமர்ந்தான்.

"கரிய கண்களை உடைய ஆண் கருங்குரங்கு இறந்து போய் விட்டது என்று, அதனால் ஏற்பட்ட கைம்மையின் துயர் தாங்காமல், இன்னமும் மரம்

சத்தியப்ரியன்

தாவத் தெரியாத அறியாக் குட்டிகளை தனது உறவினரிடம் சேர்ப்பித்துவிட்டு, உயர்ந்த மலையிலிருந்து கீழே உள்ள மலைச்சாரலில் வீழ்ந்து தன் உயிரைப் போக்கிக் கொள்ளும் நாட்டினை உடைய வனே! இரவில் வராதே! வந்தால் துன்பப் படுவாய் எனக் கூறும் பாடல் ஒன்று"

"கருங்கண் தாகலை பெரும் பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்
சாரல் நாட! நடுநாள்
வாரல்! வாழியோ வருந்துதும் யாமே!"

என்று தாமரை செய்யுளை முடித்தாள்.

"கம்பன் வீட்டுக் கட்டுத் தறி" என்றான் கேலியாக.

"நான் ஒண்ணும் கட்டுத்தறி இல்லை. கம்ப்யூட்டர் ஸயின்ஸில் டிகிரி வாங்கினவ."

"கம்ப்யூட்டர் ஸயின்ஸ் படிச்சவங் களுக்கும், கவிதைக்கும் தொலைவு அதிகம்" விடாமல் கதிரேசன் வம்படித் தான்.

'விடுய்யா! ஆத்தா, செத்த கம்மா இரு! இந்தச் செய்யுள் எப்படி?" எனத் தடுத் தார் பழனியப்பன்.

"முதலில் நம் கண் முன்பு விரிவது அந்தக் காட்சிப்படலம்தான். கணவன் இறந்தால் உடன்கட்டை ஏறவேண்டும் என்ற பிற்போக்குச் சிந்தனையுள்ள நம் நாட்டுப் பெண் பெற்றோரிடமோ, புகுந்த வீட்டினரிடமோ, தன் பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு, மூன்று முறை வலம் வந்து உடன் கட்டை ஏறும் காட்சியைப் போல ஒரு காட்சி" என்றான் கதிரேசன்.

"செய்யுளில் ஒரு காட்சி சொன்னா, வேற ஒரு காட்சியைச் சொல்றீங்களே? ராஜபுத்திரப் பெண்கள் வாழ்க்கைக் காட்சி."

"பலே" என்றார் பழனியப்பன்.

"ரெண்டும் ஒண்ணுதான். சொல்லப் போனா குறுந்தொகைக் காட்சி இன்னும் பாடாவதியாத்தான் இருக்கு. குரங்கு கூட, புருசன் செத்துப் போயிட்டா மலையிலிருந்து விழுந்து செத்துப் போகுது. மனுசங்க செத்தா என்ன, எனப் பெண்களைப் பிற்படுத்தும் விதம் இந்தப்



தேன்...தேன் இளைத்தேன்

பாடலில் அதிகம் உள்ளது."

"காதல் மணாளன் இறந்தால் பிரிவாற் றாமை தாங்காமல் உயிர் துறப்பதில் தவறில்லையே."

"இந்த ஏமாத்து வேலை வேணாம் காதல் இல்லாமல் போயிருந்தா, எங் அப்பச்சி செத்துப் போன உடனே ஆச்சி யும் செத்துப் போயிருக்கணுமே காதலை வெளிப்படுத்த சாகணுங்கறது அவசியமில்லை தாமரை."

"இல்லை கதிரேசன், அவங்க நடுவில் உண்மையான காதல் இருந்திருக்காது."

"எதுக்கு இப்ப பழசெல்லாம்? கதிரு அருணாசலம் சொன்னது மாதிரி, எதுக் வந்த?" என்று பழனியப்பன் பேச்சை மாற்றினார்.

கதிரேசன் இலேசாகச் சிரித்தான் பழனியப்பன் சாரைப் பார்க்க அவனுக் நேரம் கிடைப்பது அபூர்வம். அ மாவின் மறைவுக்குப் பின்பு, அவனுக் மேல் படிப்பு இருக்காது என்பதில் உறுதி யாக இருந்தான். அம்மா இருக்கு பொழுதே, வளவு வீட்டில், சற்றேற குறைய கதிரேசன் ஒரு எடுபிடி போல தான் இயங்கினான். ஆச்சியின் இரண் டாவது மகன் அண்ணாமலை அவ டம் ஒருநாள் கூறினான். "கதிரேசா இவங்க ஏவலுக்குப் பணிவிடை செ வதற்கு பதில், நீ நம்ம கல்லுக்கட் மெடிகல் ஷாப்பை காலை ரெண்டு மணி நேரம், மாலை ரெண்டு மணி நேரமு பார்த்துக்க. தொழில் கத்துக்கலாம்" என சரியான நேரத்தில் கதிரேசனை வ

"**ச**ந்தோஷம் வந்தா சதை போடும்பாங்க. என்ன பண்றது? பத்து கிலோ எடை கூடிடுச்சு. உடனே டயட், எக்சர்சைஸ், ஏரோபிக்ஸ், தியானம்னு ரொம்பக் கடுமையா முயற்சி பண்ணி மறுபடி அழகா இளைச்சுட்டேன். இப்ப மியூஸிக் கத்துக்கறேன். கன்னடப் படங்கள் பண்றேன். தமிழ் சீரியல் வாய்ப்புகளும் வருது. அம்மா எனக்கு மாப்பிள்ளை தேடிக்கிட்டிருக்காங்க. எது நடக்குதோ அது நல்லதா நடக்கும்னு நினைக்கிற டைப் நான். நல்ல தத்துவம் தானே?"

- மீனா

நடத்திச் சென்றவன் அண்ணாமலை.

"கல்லுக்கட்டி கடையையும், செக் காலைக் கடையையும் என் முழு மேற்பார் வையில் கொண்டு வரணும்னு பெரியண் ணன் பிரியப்படுறாங்க. சின்னண்ணனும் அதே தான் நெனைக்கறாரு."

"பைய, பைய, கதிரேசனுக்கு பொறுப்புகள் அதிகமாகுதுன்னா, என்ன அர்த்தம்?" என்றார் பழனியப்பன்.

"என்ன அர்த்தம்?" என்றாள் தாமரை.

"கதிரேசன் தொழில் நல்லா கத்துட்டு வர்றான்னு அர்த்தம். இனிமே அவனுக் குக் காலம் என்பது, தனித்துச் சிந்திக்க முடியா தனிப்பொருளா தெரியப் போவது இல்லைன்னு அர்த்தம். அவனு டைய ஓய்வு நேரம் குறையப் போகு துன்னு அர்த்தம்."

"அப்படின்னா, உங்களைப் பார்க்கவே முடியாதா கதிரேசன்?" என போலியாக வருத்தப்படுபவளைப் போல பாவனை செய்து நிஜமாகவே வருத்தப்பட்டாள் தாமரை.

"செய்யும் தொழிலே தெய்வம்" என்றான் கதிரேசன்.

தாமரை காலியான வட்டி, குவளை களை உள்ளே எடுத்துக் கொண்டு சென் றாள்.

"எதுக்கு வந்த கதிரேசன்?" என்றார் பழனியப்பன் தாழ்வான குரலில்.

"ஐயா" கதிரேசனின் குரல் சுருண் டது.

"பிள்ளையார் நோம்புன்னு எல்லா ரும் பெரியப்பா வீட்டில் இழை எடுத் துக்கிட்டாங்க. நானும் போனேன். ஒவ் வொரு வருஷமும் நான் நோம்பு நேரத்தில் கடையிலேயே இருந்துருவேன். அண்ணாமலை கையெழுத்துப் போட்ட செக்கு தீர்ந்து போச்சுன்னு வீட்டுக்கு வந்தேன். ஆச்சி தான் சொன்னாங்க, எல்லாரும் இழை எடுத்துக்கறாங்க, நீயும் போன்னு சொன்னாங்க. இழை எடுப்பது ஒரு குறியீடுன்னு எனக்குப் பிறகுதான் தெரிஞ்சது" என்றான்.

"ஆமாம்" பழனியப்பனுக்குப் புரிந்தது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்னு சொல்றது பொய்ங்க ஐயா."

தாமரை வெளியில் வந்து "குறுந் தொகை முடிஞ்சு இப்ப திருக்குறளா?" எனக் கேட்டாள்.

"நீயும் வாயேன் தாமரை" என்றார் பழனியப்பன்.

"நீங்க பேசிக்கிட்டே இருங்க, நான் ஆத்தாவுக்குக் கொஞ்சம் ஒத்தாசை செஞ்சுட்டு வந்துடறேன். கதிரேசன், போயிடாதீங்க" என்று உள்ளே போனாள்.

"அப்பா!" எனக் கதிரேசன் பெருமூச்சு விட்டான்.

"எதுக்குப் பெருமூச்சு விட்ட?" என்றார் பழனியப்பன்.

"தாமரையும் உட்கார்ந்திடுவாங் களோன்னு பயந்திட்டேன்."

"ஒரு சின்ன உளவியல் முயற்சி தான். தாமரையை நீ உள்ள போம்மா, நாங்க தனியாய்ப் பேசணும்னா' அவளுக்கு வீண் சந்தேகம் வரும். வீம்பு வரும். அதற்குப் பதில் அவளுக்கும் அழைப்பு விடுத்தால், வேண்டும் என்றால்தான் வருவாள். எப்படி?" சொல்லிவிட்டுப் பழனியப்பன் கண் சிமிட்டினார்.

கதிரேசன் வியந்து போய்ச் சிரித்தான். பழனியப்பனின் இந்தப் பகுத்தாயும் தன்மைதான் அவனை வியக்க வைக்கும்.

"**எ**ன்ன நடந்தது?" என்றார்.

"நானும் இழையெடுக்க அவுங்க பங்காளி வீட்டுக்குப் போனேன். நாகப்பன் என் தாயின் பிறப்பை இழிவாகப் பேசி நகைப்புக்குள்ளாக்கி னான். ஆச்சி அவனைக் கடிந்து கொண்டு, என்னை ஆயிரம் முறை சமாதானம் செஞ்சாங்க. அவனுடன் என்னால் மோத முடியுமா? இவன்

போன்றவர்கள் வாயை யார் அடைப்பது? ஏன் என் பிறப்பு இப்படி ஆனது?"

"கேள்விகள் மட்டும்தான் உன்னிடம் உள்ளதா கதிரேசன்?"

"அலைக்கழிதல் கேள்வியில்தானே கொண்டு விடும்?"

"காலம் சாட்சி கதிரேசன்."

"எதுக்கு? என் காயங்களுக்கா...?"

"இல்லை. உன்னைப் பக்குவப்படுத்த."

கதிரேசன் சிரித்துக் கொண்டு எழுந்தான்.

"உங்களைத் தவிர வேறு யாருக்கும் கதிரேசன், சிதம்பரம் செட்டியாரின் நேரடி வாரிசு இல்லை என்ற விஷயம் தெரிய வேண்டாம்."

"ஆமாம்! ஊரு பெரிய ஊரு. புள்ளிகளும் ஒண்ணுந் தெரியாதவங்க பாரு. போய்யா."

"இல்ல சார்! தெரியுதோ இல்லையோ, காட்டிக்காம இருக்குற வரையில் எனக்கும் சுயபச்சாதாபம் ஏற்படாது இல்லியா? மற்றவர்களுடைய ஐயோ பாவம் எனக்கு வேணாம் சார். உதாரணமா தாமரையை எடுத்துக்குங்களேன்..." என நிறுத்தினான்.

பழனியப்பன் கதிரேசன் கண்களில் தேடினார். அவர் தேடியது அப்பொழுது கிடைக்கவில்லை.

"தாமரைக்கு நான் சிதம்பரம் செட்டியார் பையன்னுதான் தெரியுமே தவிர, எங்க ஆத்தா தெய்வானை ஆச்சி இல்லைன்னு தெரியுமா?"

"தெரியாது."

"தெரிஞ்சிருச்சுன்னு வைங்க, என்னைப் பரிதாபமாப் பார்க்க ஆரம்பிச்சுட மாட்டாங்களா?"

"அவ பரிதாபப்படுறது உன்னை என்ன செய்யப் போகுது?" என்றார் பழனியப்பன்.

கதிரேசன் ஒரு நிமிடம் மௌனமானான். அந்த மௌனம் பழனியப்பனுக்குப் பொருள் கூறியது. அவர் படித்த பழந்தமிழ் அகப்பாடல்களில் விளங்கிக் கொள்ள முடியாத பொருள்.

(தொடரும்)



மார்க் வாங்கலாம் வாங்க 19

கான்கிரீட் காடுகள் நிறைந்த அந்த நகரத்தின் தெருக்களை கதிரவன் ஒரு போதும் முத்தமிட்டதில்லை. ஒரு நாள் ஓ..ரென்று வானில் பெரும் தீப் பிழம்பு. சில நிமிடங்களில் நகரம் வெடித்துச் சிதறியது. கான்கிரீட் காடுகள் காணாமல் போயின. எங்கும் மரண ஓலம்! தீ! புகை! பொழுது விடிந்தது; அழிவின் ஆக்ரோஷம் தப்பித்துக் கொண்டவர்

தோல்வி தோற்றுப் போகும்!

களுக்குப் புரிந்தது; ஏன் பிழைத்தோம் என்று அவர்கள் வேதனைப்பட்டனர்!

புகைப்படக்காரர்கள் போட்டி போட்டுக் கொண்டு, அவலக் காட்சிகளைச் சுட்டுத் தள்ளினர். செய்தியாளர்கள் தேன் குடித்த நரிகளானார்கள். புகைப்படக்காரர் ஒருவரின் கண்களில், கற்குவியல் ஒன்றின் மீது உட்கார்ந்து கொண்டிருக்கும் மூதாட்டி ஒருவர் தென்பட்டார். அரிய காட்சியல்லவா! அப்படியே புகைப்படம் எடுக்க அவளை நோக்கி ஓடினார்.

புகைப்படம் பிடித்தார். மூதாட்டி அசையவில்லை. உயிர் இருக்கிறதா என்று புகைப்படக்காரருக்குச் சந்தேகம் வர, அவள் முகத்தைத் தொட்டுத் திருப்பினார். முகம் திரும்பியது, கண்களில் உயிர் இருப்பது தெரிந்தது. மூதாட்டி எழுந்து நின்று 'என்ன?' என்பது போல் பார்த்தார். புகைப்படக்காரர் ஆச்சரியத்துடன் கேட்டார், ''பேரழிவு நடந்திருக்கிறது; உங்கள் உற்றார், உறவினர்களெல்லாம் என்ன ஆனார்கள்?''

மூதாட்டி சொன்னாள்: ஐயா, எனது கணவர், இரண்டு மகன்கள், மருமகள்கள், பேரக் குழந்தை எல்லாம் நேற்றைய குண்டு மழையில் மடிந்து போனார்கள். மிஞ்சியது நான் மட்டுமே!

புகைப்படக்காரர் கேட்டார்: உங்கள்

பேராசிரியர் ப. இராம்கோபால்

முகத்தில் வேதனையின் சாயலே இல்லையே, உங்களுக்கு துக்கமாக இல்லையா!

அம்மையார் அழகாகப் பதில் சொன்னார்: எதற்கு துக்கப்பட வேண்டும்? என்னால் சூரியனை இப்போது முழுமையாகப் பார்க்க முடிகிறதே!

இது இரண்டாம் உலகப் போரில் நாகசாகியில் அணுகுண்டு விழுந்தபோது நடந்த உண்மைச் சம்பவம்.

இன்னொரு உண்மை நிகழ்ச்சி.

அந்த விஞ்ஞானி பல கண்டுபிடிப்புகளை நமக்குத் தந்தவர். ஒரு நாள் அவருடைய சோதனைச் சாலை தீப்பிடித்து எரிந்து போயிற்று. விஞ்ஞானி சோதனைச் சாலையின் முன்பு நின்று கொண்டிருந்தார். அவர் முன்பு சாம்பல், குவியல் குவியலாக! விஞ்ஞானி வேதனைப்படவில்லை; கண்ணீர் சிந்தவில்லை. சுற்றி நின்று கொண்டிருந்த நண்பர்களில் ஒருவர் விஞ்ஞானியிடம் கேட்டார்: "நாற்பது வருட உழைப்பு இப்படி ஒரே இரவில் வீணாகி விட்டதே! உங்களுக்கு வருத்தமாக இல்லையா?"

விஞ்ஞானி சொன்னார்: "எதற்கு வருத்தப்படவேண்டும்? ஆண்டவன் எல்லாவற்றையும் புதியதாகத் தொடங்க எனக்கு இன்னொரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறான். எங்கிருந்து தொடங்குவது என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" கேட்ட நண்பர் அசந்து போனார். அந்த விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன்!

மாணவர்களே! மூதாட்டியின் இழப்பை விட, எடிசனின் இழப்பை விட, தேர்வுகளில் நீங்கள் பெறும் தோல்விகள் பெரியனவா?

தேர்வுகளில் தோல்வி என்பது மிக சாதாரணமான விஷயம். ஒரு தோல்வி தான் வேதியியல் படித்துக் கொண்டிருந்த மாணவனான என்னை, ஆங்கில இலக்கியத்தை நோக்கித் தள்ளியது. இலக்கியம் படிக்காவிட்டால், இப்படியொரு கட்டுரைத் தொடரை என்னால் எழுத முடிந்திருக்குமா என்பது சந்தேகமே! தோல்விகள் உங்களுடன் கைகுலுக்க வரும்போது கைகளை இழுத்துக் கொள்ளாதீர்கள். கை கொடுத்து வரவேற்று உபசரியுங்கள். அதனுடன் உரையாடி, அது எங்கிருந்து வந்தது, ஏன் வந்தது, எப்படி வந்தது என்று தெரிந்து கொள்ளுங்கள். இப்படி விசாரிக்க ஆரம்பித்தாலே, வந்த விருந்தாளி சொல்லிக் கொள்ளாமலே ஓடிப் போவார்.

பின்வருபவற்றில் எவை உங்கள் தோல்விக்குக் காரணங்கள் என்று கண்டுபிடியுங்கள்:

1. 'சொல்ல' மறந்த கதைகள்?

2. 'கதை' ஏன் மறந்து போயிற்று! சரியாகப் படிக்காததால், படித்துப் நினைவில் நிற்காததால்...?

3. 'கதை' எழுத நேரம் போதவில்லையா? ஏன்?

- விடைகள் மெகா சீரியல்களாக மாறிப் போனதால்

- அடிக்கடி 'விடைத் தடங்கல்' ஏற்பட்டதால்

- தடங்கல்களுக்கு அளவுக்கு மீறி வருந்தியதால்

4. கேள்விகள் புரியவில்லையா?

5. குழப்பம்...?

6. அச்சம்...?

பல மாணவர்களைத் தோல்விகள் தொடர்ந்து தழுவிக் கொண்டேயிருக்




"தேர்தல் சமயத்துல நீங்க ஏன் வாய்ஸ் குடுக்கல?"

"என்னோட டப்பிங் ஆர்ட்டிஸ்ட் சுகமில்லாம இருக்கார்!"

– அம்பை தேவா

தேன்... தேன்... விரித்தேன்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு பாக்யராஜ் இயக்கும் 'பாரிஜாதம்' படத்தில் அவரது மகள் சரண்யா கதாநாயகி. கதாநாயகன் 'பாய்ஸ்' சித்தார்த். "'இந்தக் கதை என் மனசுலே உருவாகிக் கிட்டிருந்த சமயம் 'பாய்ஸ்' பார்த்தேன். உன்னோட வெகுளித் தனமும், ஃப்ரெஷ்னெஸ்ஸும் எனக்கு ரொம்பப் பிடிச் சுருந்துச்சு. நீதான் என் ஹீரோ என முடிவு பண்ணிட்டேன்' என்று பாக்யராஜ் முதுகைத் தட்டிக் கொடுத் தார். நான் சிறகு விரித்தேன். வானம் இடித்தது" என்றார் சித்தார்த் தலையைத் தடவிக் கொண்டே...



...ன்றன. அவர்கள் தங்களைச் சுய பரிசோதனை செய்து கொள்ளாததால். தவறு செய்து தடுக்கி விழுவது இயற்கை. ஆனால் விழுந்த பின்பு எழாதிருப்பதும், எழுந்த பின்பு, 'ஏன் விழுந்தோம்' என்று சிந்திக்காமல் இருப்பதும், மிகப் பெரிய குற்றம்.

மே 29, 1953. உங்களுக்கு நினைவிருக்கிறதா? அன்றுதான் டென்ஸிங்கும், ஹிலாரியும் எவரெஸ்டை எட்டிப் பிடித்தனர்.

ஹிலாரி தன் முதன் முயற்சியில் தோற்றுப் போனார். சொந்த நாடு திரும்பிய அவருக்கு, அவர் முயற்சியைப் பாராட்டி, ஒரு விழா நடந்தது. விழாவில் பலரும் ஹிலாரியின் முயற்சியைப் பாராட்டினார்கள். கடைசியில் ஏற்புரையாற்ற ஹிலாரி எழுந்தார்.

பார்வையாளர்கள் பக்கம் முதுகைத் திருப்பிக் கொண்டு நின்றார். விழாவை ஏற்பாடு செய்திருந்தவர்களுக்கும், விழாவைக் காண வந்திருந்தவர்களுக்கும் பெரும் அதிர்ச்சி! "என்ன இது? மனிதர் முகத்தைக் காட்டாமல் முதுகைக் காட்டுகிறாரே! என்னவாயிற்று இவருக்கு? முயற்சியில் தோற்றுப் போனதால் மூளை குழம்பி விட்டதா?'' என அவர்கள் அச்சம் கொண்டனர். ஆனால் ஹிலாரி இது எதையும் கண்டு கொள்ளவில்லை. அவர் கண்கள் மேடையின் பின் புறம், தனக்கெதிரே ஒட்டப்பட்டிருக்கும் எவரெஸ்ட் சிகரத்தின் பெரிய போஸ்டரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. சில நிமிடங்கள் சென்றதும் உரத்த குரலில் ஹிலாரி சொன்னார்: "எவரெஸ்ட்! அடுத்த முறை உன்னை நான் வெற்றி கொள்வேன்! ஏனெனில் உன்னால் வளர முடியாது... என்னால் முடியும்.'' பலத்த கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

மாணவர்களே, உங்களால் வளர முடியும்! ஏனென்றால், உங்களால் சிந்திக்க முடியும். சிந்தித்து, தோல்விக்கான காரணங்களைக் கண்டு பிடியுங்கள். அவற்றைக் களையெடுங்கள். புதிய உற்சாகத்துடன், தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். வானம் தொட்டு விடும் தூரம் தான் என்பதை உணர்வீர்கள்!

வாழ்த்துகள்!

படம்: யோகா

(முற்றும்)

இம்முறை தமிழகத்தின் எல்லாத் தொகுதிகளுமே, பரபரப்பில் பற்றி எரிந்தன. அவற்றில் அனைவரது கவனத்தையும் ஈர்த்த சில தொகுதிகளில், தி.மு.க. கூட்டணியின் அபார வெற்றிக்கு என்ன காரணம்? அந்தந்தப் பகுதி வாக்காளர்களின் குரல்களைக் கேளுங்கள்.

நாகர்கோவில்

"ஆடிக் காத்துலே அம்மியும் பறந்துடும்! ஆயிரம் நல்லது பண்ணியிருந்தாலும், பொன். ராதா கிருஷ்ணனை எதிர்த்துப் போட்டியிட்ட பெல்லார்மின், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர். நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதி மண்டைக்காடா மாறிடக் கூடாதுன்னு, கிறிஸ்தவ சிறுபான்மை மக்கள் அத்தனை பேரும், கண்ணை மூடிக்கிட்டு சி.பி.எம்.முக்குப் போட்டிருக்காங்க."

- ஜானி இருதயராஜ்

பெரியகுளம்

"பணபலம், ஜாதிபலம், அதிகார பலம்னு அத்தனை பலத்தையும் அ.தி.மு.க. பயன்படுத்துச்சு. இந்த பலமெல்லாம் கூட்டணி பலத்துக்கு முன்னாலே பலவீனமா மாறிப் போச்சு."

- ஜைனு சையத்

சிவகாசி

"வைகோவின் தியாகம். அவர் செய்த மக்கள் பணிகளுக்குப் பரிசாகவும், அமைச்சர் இன்பத் தமிழன் கோஷ்டி செய்த அராஜகத்துக்குப் பதிலடியாகவும், ரவிச் சந்திரனுக்கு வெற்றியை அள்ளிக் கொடுத்துட்டாங்க."

- கோபாலகிருஷ்ணன்

திருச்செந்தூர்

"வீரத் தளபதி வெங்கடேசப் பண்ணை

ஜெயிச்ச ஜோர்ல...

யாரை அநியாயமாக கட்டுக் கொன்னாங்க. அதுக்குப் பழிக்குப் பழி வாங்கணும்னு சமுதாய மக்கள் எப்பவோ முடிவு கட்டிட்டாங்க. அமைச்சர் அனிதா இராதா கிருஷ்ணனுக்குப் பாடம் கத்துக் கொடுத்துட்டாங்க."

- மு. செந்தில்குமா

சிவகங்கை

"ப. சிதம்பரம் ஒரு தேசியத் தலைவர். அவருக்குச் சமமாக ஒரு ஓ... பாணி வேட்பாளரை, அ.தி.மு.க. சார்பி... நிறுத்தினால் எடுபடுமா? இந்த முறை சிவகங்கைத் தொகுதி வளர்ச்சிக்கும் பாடுபடுவேன்னு வேற சொல்லிட்டார். அப்புறம் வெற்றிக்குக் கேட்கணுமா?"

- முருகு. பழனியப்பன்

தருமபுரி

"பு.தா. இளங்கோவன் மேலே ஏகப்பட்ட அதிருப்தி. மக்கள் கோபத்துக்கு முன்னாடி வாஜ்பாய், ஜக்குபாய் வாய்லெல்லாம் எடுபடலே"

- நீதிச் செல்வன்

கோவை

"மதவாத பி.ஜே.பி.க்கு மரண அடி கொடுக்கணும்னு மக்கள் முடிவு பண்ணிட்டாங்க. தொழிலாளர்கள் பலம் நிறைந்த தொகுதி வேற. இன்னொரு பக்கம் சென்வாட் வரி, கள் மாதிரி வேலை செய் இருக்கிறது."

- ஆர். நாகராஜன்



கோபி

"ஜெயலலிதாவுக்கு அப்பப்போ கு... பரா பதிலடி கொடுத்தவர் இளங்கோவன். இந்த ஆட்சிமேலே இருந்த வெறுப்பாலே









ாப்போதும் இரட்டை இலைக்கு வோட்டுப் போடுற அருந்ததியர் மக்கள் அத்தனைபேரும், இந்த முறை கைக்குப் போட்டதாலே இளங்கோவன் கை ஓங்கிப் போச்சு."

- கரு. தியாகு

செங்கல்பட்டு

"ஓய்வு ஒழிச்சல் இல்லாமல், ஓடி ஓடி வேலை செஞ்சுகிட்டே இருந்த ஒரே அமைச்சர் ஏ.கே.மூர்த்தி. இவருக்குக் கூட்டணி வோட்டு மட்டுமில்ல, கட்சி சாராத பொது மக்கள் வோட்டும் அதிகம். ரஜினி மன்றங்கள்கூட இவருக்கு ஆதரவா வேலை செஞ்சாங்க. இன்னும் அதிக வாக்கு வித்தியாசம் எதிர்பார்த்தோம்."

- மா. குணசேகரன்


மத்திய சென்னை

"சென்னை திமுகவோட கோட்டை. அது மறுபடியும் நிரூபணமாகி இருக்கு. முரசொலி மாறனின் வாரிசு, கலைஞர் பேரன் இதெல்லாம் ஒரு பக்கம் இருக்க, குடி தண்ணீர்க் கஷ்டத்துலே நொந்து போயிருந்த மக்கள், ஒரேயடியா உதயசூரியன் பட்டனை அழுத்திட்டாங்க."

- நா. கண்ணப்பன்

தொகுப்பு : ஜெ

சினிமாவுக்குப் போனா செரீனா?



"ஆஹா! வந்துட்டாங்க மறுபடியும்" என்று 'செரீனா ரசிகர்கள் மகிழ்ந்து போயிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் எந்த டென்னிஸ் போட்டியிலும் கலந்து கொள்ளாத செரீனா வில்லியம்ஸ், மீண்டும் களத்தில் இறங்கியிருக்கிறார்.

சென்ற ஆகஸ்ட் மாதத்தில் காலில் அடிபட்டுக் கொண்டதை அடுத்து, ஓர் அறுவை சிகிச்சை தேவைப்பட்டது. இதைத் தொடர்ந்து தாம் சிலகாலம் ஓய்வில் இருக்கப் போவதாக அறிவித்தார் செரீனா. செப்டெம்பர் மாதத்தில் அடுத்த இடி. வீனஸ் மற்றும் செரீனாவின் சகோதரி யெடுண்டே என்பவர், லாஸ் ஏஞ்ஜெலிஸ் நகரில் கொலையுண்டார். (ஐந்து சகோதரிகளில் கடைக்குட்டி செரீனா.) இதைத் தொடர்ந்து வில்லியம்ஸ் குடும்பம் சோகத்தில் ஆழ்ந்தது.

என்றாலும், செரீனா பல மாதங்களுக்கு டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்காததற்குக் காரணமே வேறு என்று கிசுகிசுத்துக் கொண்டிருந்தன பத்திரிகைகள். நடிகையாகும் ஆசையில் ஹாலிவுட் தயாரிப்பாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறா செரீனா என்றும், இனி அவர் ரா கெட்டைத் தொட மாட்டார் என்றும் கூறின.

செரீனா வெளிப்படையாகவே சென்ற வருடம் இதை ஓரளவு ஒப்புக் கொண்டார். "ஒரு வாய்ப்பு வந்தது. ஆனால் அதில் நான் டென்னிஸ் வீராங்கனையாகவே நடிக்க வேண்டுமென்றார்கள். நான் எதற்காக அப்படி 'நடிக்க' வேண்டும்? எனவே மாறுபட்ட வாய்ப்புதான் வேண்டுமென்று மறுத்து விட்டேன்" என்றார்.

என்றாலும் தொலைக்காட்சி தொடர் ஒன்றில் ('தி சிம்ப்ஸன்ஸ்') செரீனா, செரீனாவாகவே சில வருடங்களுக்கு முன் தோன்றியிருக்கிறார். தவிர 'மை ஒய்ப் அண்ட் கிட்ஸ்' என்ற தொடரிலும், கௌரவ வேடம் ஏற்றிருக்கிறார். வில்லியம் மாரிசன் கேஸ்டிங் ஏஜென்ஸி என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார். 'லா அண்ட் ஆர்டர்', 'தி டிவிஷன்' போன்ற தொலைக்காட்சித் தொடர்களில் நடிக்கவும் வருகிறார்.

"சினிமா நடிகை, டென்னிஸ் வீராங்கனை ஆகிய இரண்டு தொழில்களையுமே செய்ய எனக்கு ஆசைதான். ஆனால் அது நடைமுறையில் சாத்தியமில்லை. எப்போதுமே என் முன்னுரிமை டென்னிஸுக்குத்தான். எனவே ஆட்டத்தில் மட்டுமே இப்போதைக்கு கவனம் செலுத்தப் போகிறேன்" என்று தம்மைத் தெளிவாக்கியிருக்கிறார். ('அதாவது எந்த ஹாலிவுட் தயாரிப்பு நிறுவனமாவது பெரும் தொகையை அட்வான்ஸாக நீட்டும் வரையிலா?' என்று கிண்டலடிப்பவர்களுக்கும் குறைவில்லை).

- ஜி.எஸ்.எஸ்.

நீங்கள் கேட்டவை

—தராசு

.?!.?!.?!

● சம்பத், வேலாயுதம் பாளையம்

? 'மாற்றமும் வளைந்து கொடுக்கும் தன்மையும் தான் அரசியல்' என்ற ஜெயலலிதாவின் தத்துவத்தைப் படித்த போது உங்களுக்கு என்ன

ரஜினியின் எதிர்காலம்...?

தோன்றிற்று...?

! தத்துவத்தில் தவறு ஏதும் இல்லை; மாற்றம், வளைந்து கொடுக்கும் தன்மை இரண்டுமே தேவைதான். ஆனால், அவை எதற்காகச் செய்யப்படுகின்றன என்று பார்க்க வேண்டும். நல்ல முடிவுகளுக்காக, நாட்டு நலனுக்காக என்றால் வரவேற்கலாம்.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? நமது ஹாக்கி அணி தன் தலையில் தானே மண்ணை அள்ளிப்போட்டுக் கொள்கிறதே? தன்ராஜ் பிள்ளையை மீண்டும் சேர்க்கவில்லை பாருங்கள்...

! அணி தன் தலையில் மண்ணைப் போட்டுக் கொள்ளவில்லை. தேர்வாளர்கள் தான் அதன் தலையில் மண்ணை அள்ளிப் போடுகிறார்கள். ஒலிம்பிக்கில் ஆட பிள்ளைக்கு ஓய்வு தருகிறேன் என்று சப்பைக்கட்டு வேறு!

● கே.பிரகாஷ், கோவை-17

? இன்றைய கூட்டணி யுகத்தில் காங்கிரஸ் - இடதுசாரிகள் நிலையான ஆட்சி தர முடியுமா...?


! கொள்கை ரீதியாக முரண்பட்ட போதும், நாட்டின் நலனை கூட்டணிக் கட்சிகளும் கருதினால், நிச்சயமாகத் தர முடியும். கூட்டணியில் அனைவருக்கும் உகந்த குறைந்தபட்ச செயல்திட்டம் வகுத்து நிறைவேற்றினால் நாடு முன்னேறும்.

● ராஜி ராதா, திருச்சி - 14

? மழையை வேடிக்கை பார்த்தீர்களா? அல்லது நனைந்து அனுபவித்தீர்களா...?



● ஆக்கபூர்வ விளக்கம்!



● 'ஜக்கு'ஜால எதிர்காலம்!

! அது நமக்கு வேடிக்கை காட்டி விட்டுப் போய்விட்டதை நினைத்து வருந்தினேன்.



● ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? அக்ஷய த்ரிதியை அன்று அ.தி.மு.க. வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தது பற்றி...?

! என்னதான் நல்ல நாள் பார்த்துச் செயல்பட்டாலும் லக்ஷ்மி கடாக்ஷம் என்பது நியாய மான முறையில் சம்பாதிப்பவர் களுக்குத்தான் கிடைக்கும். அநி யாயத்தில் பணம் குவிப்பவர் களுக்கு அந்தச் செல்வமே பெரும் தொல்லை தரும்; நிம்மதி இழந்து வாழ்க்கை பாழாகும் என்றுதான் நமது புனித, புராதன நீதி நூல்கள் கூறுகின்றன.



* சர்வதேச கௌரவம்



* தேவையுள்ள தத்துவம்!

● கே.என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்

? காச நோய் ஒழிப்பின் முதல் உலகத் தூதராக ஏ.ஆர். ரஹ்மானை நியமித்துள்ளதே உலக சுகாதார நிறுவனம்..?

! புற்றுநோயிலிருந்து மீண்டு மறு வாழ்வு பெற்றோர் நலனுக் காக, ரஹ்மான் நடத்திய உலகப் பயண இசை நிகழ்ச்சிகளின் வெற்றியும், அவரது தொண் டுள்ளமும் இந்தக் கௌரவத் தைப் பெற்றுத் தந்துள்ளன.



* விஞ்ஞான அபாயம்



* சப்பைக்கட்டு காரணம்!

● எஸ்.சக்தி, விக்கிரமசிங்க புரம்

? கணவன் தேவையில்லை என்று விவாகரத்து செய்யும் பெண்கள் ஜீவனாம்சம் மட்டும் பெறுவது நியாயமா?

! ஜீவனாம்சம் என்பது விவா கரத்து அடிப்படையில் மட்டும் வழங்கப்படுவதில்லை. கணவன் - மனைவியின் பொருளாதார நிலை, குழந்தைகளின் பாது காப்பு, எதிர்காலம் முதலிய பல அம்சங்களை உள்ளடக்கிய முடிவு அது. விவாகரத்து எந்த அடிப்படையில் பெறப்பட்டது என்பதும் கருத்தில் கொள்ளப் படும்.

● த.பிளேட்டோ, மயிலாடு துறை

? கருத்துக் கணிப்பால் பங்கு மார்க்கெட் சரிவு; ஆயிரம் கோடி இழப்பு... தேவைதானா...?

! முன்னது இல்லையெனில் பின்னது இல்லை; இரண்டுமே தேவையற்றது.

● ஆர். மணிமேகலை, மருங்கப் பள்ளம் ★

? ஏவுகணைகளைத் தயாரிப்பது சரி தான் என்று கலாம் சொல்லியிருக் கிறாரே..? உமது கருத்து...?

! மரியாதையுடன் மாறுபடுகிறேன். ராக்கெட் தொழில்நுட்பம் ஆக்கபூர்வ மான காரியங்களுக்கு வளரலாம். ஏவு கணைகளுக்காக அல்ல.

▢ ரூ.100 பரிசு பெறுபவர் :
த.பிளேட்டோ,
22, தச்சத் தெரு, கூறைநாடு,
மயிலாடுதுறை - 609001.

★ ரூ. 50 பரிசு பெறும் இருவர் :
ஆர். மணிமேகலை,
த/பெ வி. இராமையன்,
மருங்காப்பள்ளம் - 614 802,
தஞ்சை மாவட்டம்.
ஈ.டி. தயாளன், 15/3, சுப்பராயன்,
மூன்றாவது தெரு விரிவு,
நம்மாழ்வார்பேட்டை, சென்னை-12.

● ஈ.டி.தயாளன், சென்னை ★

? தோல்வியே வெற்றியின் முதல்படி: முதல் கோணல் முற்றும் கோணல் - முரண்பாடாகத் தெரிகிறதே...?

! முதல் கோணல் முற்றும் கோணலாக முடிந்துவிடாமல், தக்க சமயத்தில் விழித் துக் கொண்டு திருத்தி அமைத்தால், தோல்வியே வெற்றியின் முதல்படி.

● எஸ். பாலச்சந்தர், திருவாரூர்

? பா.ம.க. ஆறு தொகுதிகளிலும் வென்றுவிட்டதே... இனி ரஜினியின் எதிர்காலம்...?

! ரஜினியின் எதிர்காலம் அரசியல் நில வரங்களால் நிர்ணயிக்கப்படுவதில்லை ஜக்குபாய்க்குக் கிடைக்கும் வரவேற்பில் அடங்கும்.

● பாரதி கண்ணன், திருச்சி

? சோனியாவை வெளிநாட்டவ என்று கூறும் ஜெயலலிதா தமிழ்நா டுக்காரரா...? கர்நாடகத்தி பிறந்தவர் தமிழ்நாட்டை ஆள்வதா

! பாரதி என்று பெயர் வைத்து கொண்டு இப்படியெல்லாம் கே கிறீரே! அடுத்தாற்போல் மாவட் ஆட்சியர் அந்த மாவட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டு என்பீர்கள் போலிருக்கிறதே!

● குவளை எழில், சென்னை -

? 'செகுலர்' என்பதற்கு, மத சார்பற்ற என்பதைவிட 'மதசமத்து மான' என்று பொருள் கொள் வதுதான் சரி, என்று நா. மகாலிங்க எழுதியிருக்கிறாரே?

! மிகச் சரியான கருத்து, ராஜா அடிக்கடி வற்புறுத்தி வந்த கருத்து. நம அரசியல் சாசனத்தை மதிக்கும் எல்லா கட்சிகளும் ஏற்றுக் கொண்டு, அதன்ட செயல்பட வேண்டிய கருத்து. எதிர்கா இந்தியாவின் பலமும் வளமும், இந் கருத்தில்தான் உள்ளடங்கியிருக்கிறது.

● இரா. சக்கரபாணி, மதுரை -

? 'இந்தியா ஒளிர்கிறது' என்று வில பரம் செய்த கட்சித் தலைவர்கள் க டணி தலைவர்களின் முகங்கள் போது ஒளிரவில்லையே..

! 'கம்மா வெளிச்சம் போடாதே'ன் ஜனங்க கோபமா சுவிட்சை அணைச் டாங்களே! மக்கள் முகங்கள் என்று ஒ கிறதோ, அன்றுதான் பாரதம் ஒளி என்று புரிய வைச்சுட்டாங்க!

● பதினொரு மணி வாக்கில் வணபவனிலிருந்து பாக்கெட் பாக் கட்டாக இனிப்புகள் வரவழைக்கப் ட்டு அறிவாலயத்துக்குள் வழங்கப்பட, தாண்டர்களின் விசிலும் 'கலைஞர் ாழ்க' கோஷமும் பெருகின.

● சன் டீ.வியின் லைவ் பேட்டிக்காக ந்திருந்த திருநாவுக்கரசர், அறிவால த்தில் கலைஞ ரச் சந்தித்துவிட்டு, வருடன் வளியே வர, ந்துட்டார்யா ம்மாளு' என்று தாண்டர்கள் கத்தி ர். "நான் பேட்டி காடுக்க வந்தேன்பா" ன்ற திருநாவுக்கரசரிடம் மு.க. தொண்டர்கள் ழ்ந்து கொண்டு கை லுக்க, எதற்கென்று ரியாமல் விழித்தார் அவர்.

"எதுக்கு இப்ப டீ.வி.!"

– மே 13 மின்னல் காட்சிகள்!







● சத்தியமூர்த்தி பனுக்கு காலையிலேயே ந்த ஜி.கே. வாசன், வியை கவனிப்பதிலேயே நியாக இருந்தார். பதினொரு ணிவாக்கில் ஏகப்பட்ட தொண்டர்கள் டிவிட, இரண்டு புரபஷனல் நடனப் பண்மணிகளை அழைத்து வந்து ருராக நடந்தது நடனம். இந்த ட்டத்தில் வயது வித்தியாசமில்லாமல் ர்ச்சட்டைகள் கலந்து கொண்டனர்!

● தாயகத்துக்கு ஒன்பது மணிக்கு ந்தார் வைகோ. மலர்ச்சியான செய்தியால் முகமலர்ந்து போனவர், மதிய சாப்பாட்டுக்குக் கூட வீட்டுக்குப் போகவில்லை. ஹோட்டலிலிருந்து வந்த சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு, தொண் டர்களின் உற்சாகத்தில் தம்மையும் ஈடுபடுத்திக் கொண்டார்.

● அ.தி.மு.க. அலுவலகத்தில் டீ.வியைப் பார்த்துக் கொண்டிருந்த தொண்டர்களின் முகம் தொங்கிப் போனது. "ஏன் இப்படி ஆச்சு?" என்று ஆளாளுக்குப் பேசிக் கொண்டிருக்க, சேகர்பாபு எம்.எல்.ஏ, "ஏன்யா, எதுக்கு இப்ப டீ.வி!" என்று சொல்லிவிட்டு, அதை உள்ளே கொண்டு போய் வைத்து விட்டார்.

– அப்பு

படங்கள்: ராஜன்

சூரியன் நிர்மலமான வானில் ஒளிவீசிக் கொண்டிருந்தான். ஒரு மனிதன் அதைப் பார்த்து "ஆகா! என்ன ஒளி!" என்று வியந்தான். "ஆம். ஒளி வீசும் எங்கள் எல்லோரையும் போல்!" என்றது ஒரு குரல்! ஒரு செடியின் மறைவில் ஒரு மின்மினிப் பூச்சி இருந்தது. "நீயா பேசினாய்?" என்று கேட்டான். "ஆம். நான் தான். நானும் சூரியனும் ஒளி படைத்தவர்கள் என்று சொன்னேன்" என்றது மின்மினி. "ஓ! நீயும் சூரியனும்! சபாஷ்!" என்று சிரித்தான் அந்த மனிதன். "ஆம். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், நான்!" என்று சொல்லியது மின்மினி!!

(ஆதாரம் . ஸ்ரீ அன்னை அமர கதைகள்- ஸ்ரீஅரவிந்த ஆசிரம வெளியீடு)



நெஞ்சில் நிலைத்த பேரமைதி...

உயிரைப் பறிக்கும் ஆயுதங்கள் வரிசையில் வாள், வேல், அம்பு, துப்பாக்கி, குண்டு போன்றவற்றோடு, 'தப்பான தந்தி' என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். கடலில் மூழ்கிய ருமேனியா என்ற கப்பல், அரவிந்தர் பயணம் செய்த கப்பல் அல்ல. பயணம் செய்வதாக இருந்த கப்பல். கடைசி நேரத்தில் அந்தக் கப்பலில் ஏறாமல் முடிவை மாற்றிக் கொண்டு, எஸ்.எஸ். கார்த்தேஜ் என்ற கப்பலில் அவர் பயணப்பட்டா அரவிந்தரின் பயண ஏற்பாடுகளை கவனித்துக் கொண்ட கிரிண்ட்லே டூரிஸ்ட் நிறுவனம் செய்திக் குழப்பத்தை ஏற்படுத்தி, அரவிந்தரின் தந்தைக் அவசர அவசரமாக தவறான இரண் தந்திகளை அனுப்பிவிட்டது.

அரவிந்தர் பரம சௌக்கியமாக 18

ப்ரவரி 6ம் தேதி, பம்பாய் துறைமுகத்தில் ால்வைத்த போது, அவர் இறந்துவிட்டாக நினைத்து அந்த அதிர்ச்சியில் வரது தந்தை காலமாகிவிட்டிருந்தார். இவ்வுலகில் அரவிந்தர் செய்ய வேண்டிய பணிகள் நிறைய இருந்ததால்; அவரை வேறு கப்பலுக்கு மாற்றிக் காப்பாற்றிய தெய்வ சக்தி, அரவிந்தரின் தந்தை செய்த பணிகள் போதுமெனக் கருதி, அவரை அழைத்துக் கொண்டது போலும்.

நேற்றிருப்பவர் இன்றில்லை என்பது தான் இந்த உலகின்





ரே பெருமை என்கிறாரே வள்ளுவர்! ாயும் மூப்பும் மரணமும் பற்றிய ண்ணங்களால் வா புத்தரை ானியாக்கின! ம் இருபத்தி

யோராம் வயதிலேயே தந்தையை இழந்தது, அரவிந்தரைச் சிந்தனையில் ஆழ்த்தியிருக்க வேண்டும். 'செத்துக் கிடக்கும் பிணந்தனின் மேல் இனிச் சாகும் பிணம் கிடந்து கத்தும் கணக்கென்ன காண்' என்று அவர் சிந்தித்திருக்க வேண்டும். 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வரமாட்டார்' என்பதை அவர் உள்மனம் உணர்ந்திருக்க வேண்டும். வாழ்வின் நிலையாமையைப் படித்தறிவதை விடவும், உணர்ந்தறியும் போது அதன் தாக்கம் அதிகமல்லவா!

ஒரு பெருமூச்சோடு தாயார் சுவர்ணலதா தேவியைச் சந்திக்க ரோகிணி என்ற கிராமத்திற்கு விரைந்தார் அரவிந்தர். அங்குதான் தம்பி பரீனுடன் அவர் வசித்து வந்தார். அரவிந்தரை ஏழு வயதுச் சிறுவனாகப் பார்த்தவர் அவர். இப்போது இருபத்தியொரு வயது வாலிபனாகப் பார்க்கிறார். சுவர்ணலதா தேவி ஏற்கெனவே மனநோயாளி. ஹிஸ்டீரியா அவரைப் படாதபாடு படுத்திக் கொண்டிருந்தது. இப்போது கணவரை இழந்த கடும் துயரம், அந்த வியாதியை மேலும் அதிகப்படுத்தியிருந்தது. முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக் கொண்டிருந்தார் அவர்.

"யார் இந்த வாலிபன்! பார்க்க லட்சணமாகவும் பவித்திரமாகவும் இருக்கிறான்! ஆனால் என் பிள்ளை என்கிறானே! இது என்னடியம்மா கூத்து! என் பிள்ளை அரவிந்த

திருப்பூர் கிருஷ்ணன்

னுக்கு ஏழு வயது தானே ஆகிறது! அவனை லண்டனில் விட்டுப் படிக்கச் செய்திருக்கிறார் என் கணவர்! அவர் எங்கு போனாரோ! அவரையும் கொஞ்ச நாளாய்க் காணோம்.

"ஏனப்பா! திரும்பத் திரும்ப உன்னை என் பிள்ளை என் பிள்ளை என்கிறாயே! பார்த்தால் நல்லவனாகத் தெரிகிறாய்! நீ என்ன சொன்னாலும் உலகம் முழுவதும் அதை நம்பும்போல் இருக்கிறது. உன் பார்வையும் தோற்றமும்! எனக்கும் நீ சொல்வதை நம்ப வேண்டும் என்று தான் ஆசை. ஆனால் என் பிள்ளை அதற்குள் எப்படி இவ்வளவு பெரியவன் ஆவான்! சரி. என் பிள்ளையின் கையில் ஒரு வெட்டுக் காயம் இருக்கும். உன் கையில் வெட்டுக் காயம் இருக்கிறதா, காட்டு பார்க்கலாம். அப்படியானால் நீ சொல்வதை நம்புகிறேன்." சடாரென்று தன் கையைத் தாயார் முன் நீட்டினார் அரவிந்தர். அதில் சிறு குழந்தையாக இருந்த போது பட்ட ஆழமான ஒரு வெட்டுக் காயம். உடைந்த கண்ணாடி பாட்டிலால் ஏற்பட்ட வடு. சுவர்ணலதா தேவியின் விழிகள் குளமாயின. கண்ணீரால் அந்தக் காயத்தைக் குளிப்பாட்டினார். மகனை வாரி அணைத்துக் கொண்டார். "அரவிந்தா அரவிந்தா!" என்று உருகினார். "மகனே! உன் அப்பா மேலே சென்றிருக்கிறார். அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வா!" என்று மகனை மாடிக்கு அனுப்ப முயற்சித்தார். அப்பா உண்மையிலேயே மேலே சென்றுவிட்டார் என்பதை அவருக்கு எப்படிப் புரியவைப்பது! இதெல்லாம் கொஞ்ச நேரம்தான்! பழையபடி நினைவுக் குழப்பங்கள் அவரை ஆட்கொண்டன. அரவிந்தர் தம் மகன் தான் என்பது அவருக்கு மறுபடி மறந்து போயிற்று.

தங்கை சரோஜினி, தம்பி பரீன், தாத்தா ராஜ நாராயணர், மாமா யோகேந்திரர் உள்படத் தம் உறவினர் எல்லோரையும் சந்தித்தார் அரவிந்தர். மனிதர்களுக்கிடையே இருக்கும் உறவு பற்றி மட்டுமல்லாமல், மனிதர்களுக்கும் தெய்வத்திற்கும் இடையே உள்ள உறவு பற்றியும் அவர் மனம் யோசிக்கத் தொடங்கியிருந்தது. கொஞ்ச காலத்துக்கு முன்னால் இங்கிலாந்தில் அவ்வப்போது ஏற்பட்ட நாத்திகச் சிந்தனைகள், மெல்ல மெல்ல

அருள்வாக்கு



பலவகை ஜனங்களி
பலவித அபிப்ராயங்களையு
அவர்களில் யார் வாயையு
அடைக்காமல் உள்ளது உள்
படி கேட்டுத் தெரிந்து கொ
ளத்தான் வேண்டும். பொது ஜ
அபிப்ராயத்தை ராமர் எப்ப

அவரை விட்டு விலகத் தொடங்கியிருந்தன.

அவர் இங்கிலாந்தில் வசித்த சுமார் பதினான்கு ஆண்டுகள். ராப
வனவாச காலம். ராமர் தம் நாட்டை
பிரிந்து வாழ்ந்தார். அரவிந்தர் தாய்நா
டைப் பிரிந்து வாழ்ந்தார். ராமர் தம் நா
திரும்பும் முன் ராவணனை வென்றா
அரவிந்தர் தாய்நாடு திரும்பிய பி
ஆங்கிலேயரை வெல்ல வேண்டியிருந்த

அவர் இங்கிலாந்தை விட்டுவில
இந்திய மண்ணில், பம்பாயிலுள்
அப்பலோ பந்தரில் கால் வைத்தது
விவரிக்க இயலாத பேரமைதி ஒன்
அவரில் மெல்ல இறங்கியது. அது நிரந்
சாந்தி தரும் ஒருவகையான ஆன்ப
அனுபவம். பல்லாண்டுக் காலம் சாதனை
நிகழ்த்திய பிறகு மட்டுமே அருள
படும் அனுபவம். ஆனால் எந்த தியா
சாதனையும் நிகழ்த்தும் முன்பாகவே, எ
ஆன்மிக முயற்சியும் செய்யும் முன்
கவே, அந்த அனுபவம் அவருக்கு வா
தது. தமக்குக் கிடைத்த அனுபவத்தி
அருமையை அவர் சடாரென ஒரு மி
னல் வெட்டாய் உணர்ந்து கொண்டா
மேலும் மேலும் ஆன்மிகச் சாதனை
செய்யத் தூண்டுதல் ஏற்பட வேண்டு
என்பதன் பொருட்டாகவே, அந்த அ
பவம் ருசிப்பதற்காக ஒரு துளி சித்தித்த

வெகு முக்கியமான விஷயமாகக் கேட்டறிந்து வரச் செய்தார். அதற்காக எப்படித் தன்னுடைய ப்ரிய பத்னியையே யாகம் செய்தாரென்பது நமக்குத் தெரிந்ததுதானே? இப்போதுள்ள ஜனநாயகவாதிகளில் யாராவது அப்படி ஜன அபிப்ராயத்துக்கு மதிப்புத் தருவார்களா என்று தெரியவில்லை. இதிலிருந்து அக்காலத்தில் ஜனங்களுக்கு ராஜா - ராணியைப் பற்றிக் கூட எவ்வளவு ஸ்வதந்த்ரமாக வாய்விட்டு அபிப்ராயம் சொல்ல உரிமை இருந்திருக்கிறது என்பதும் தெரிகிறது. அதுதான் உண்மை ஜனநாயகம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

ன்பதையும் புரிந்து கொண்டார். ார்க்கும் இடமெல்லாம் நீக்கமற ஒரு பாருள் வியாபித்திருப்பதையும், எல்லாப் பாருள்களின் உள்ளேயும் அந்தப் பாருளே ஊடுருவியிருப்பதையும் அவர் ணரத் தொடங்கினார்.

அரவிந்தர் இந்தியாவுக்குத் திரும்பிய 93ம் ஆண்டு, பாரத வரலாற்றிலேயே ரு முக்கியமான ஆண்டு. இந்தியா தந்திரம் பெறவும், பாரதத்தில் உறங்கிக் டந்த பழைய ஆன்மிக சக்தி மீண்டும் ழித்தெழவும், அரவிந்தர் உழைக்கத் தாடங்கியது அந்த ஆண்டில்தான். வேகானந்தர் என்ற இளஞ்சிங்கம் மலை நாடுகளுக்குப் போய், ஆன்மிக ர்ஜனை செய்ததும் இதே ஆண்டில் ான். மகாத்மா தென்னாப்பிரிக்காவுக்குச் சன்று, அங்குள்ள இந்தியர்களின் ரிமைக்காகப் போராடியதும் இதே ஆண்டில்தான்.

இந்தியாவுக்கு வந்த அரவிந்தர் 1893 ப்ரவரி 8 முதல் 1907 ஜூன் 17 வரை, ரோடா சமஸ்தானப் பணியில் இருந் ார். பதின்மூன்று ஆண்டுகள், ஐந்து மாதங் ள், பதினேழு நாட்கள் அந்தப் பணி. ருபத்தியொரு வயதில் பணியில் சேர்ந்த வர், முப்பத்தி ஐந்து வயதில் பணியி ருந்து விலகினார். முதலில் சர்வே சட்டில்மெண்ட் துறையில் பணி. பிறகு ரவின்யூ டிபார்ட்மெண்ட்டில் பணிமாற்றம். கடைசியில் பரோடா கல்லூரியில் பேராசிரியப் பணி. கொஞ்ச காலம் பிரெஞ்ச் போதித்தார். பிறகு ஆங்கிலப் பேராசிரியரானார். துணை முதல்வராக வும் பணியேற்றார்.

அவ்வப்போது பரோடா மகாராஜா தம் சொந்த வேலைகளுக்காகவும் அரவிந்தரை அரண்மனைக்கு அழைப்ப துண்டு. முக்கியக் கடிதங்கள், தஸ்தாவேஜுகள், உடன்படிக்கைகள் போன்றவற்றை அரவிந்தர் எழுதிக் கொடுப்ப துண்டு. அரவிந்தரின் அபாரமான ஆங்கிலப் புலமையின் மேல் மகாராஜாவுக்கு மதிப்பு மிகுதி. ஆனால் அரவிந்தர் தம் படிப்பு நேரத்தை விட்டுக் கொடுக்க ஒரு போதும் விரும்பியதில்லை. ஏராளமான இலக்கிய, ஆன்மிக நூல்களைப் படித்துக் குவித்துக் கொண்டிருந்தார் அவர். எனவே மகாராஜா கூப்பிட்ட குரலுக்கு ஓடிச் சென்று உதவி செய்ய அவரால் இயலவில்லை. ஆகையால் மகாராஜாவுக்கு வேலைகளில் உதவி செய்யும் ஏற்பாடு மெல்லக் குறைந்து, பின் நின்று போயிற்று.

அரவிந்தர் பரோடாவில் வசிக்கத் தொடங்கிய இரண்டாவது ஆண்டில் மிக விந்தையான அனுபவம் ஒன்று அவருக்கு ஏற்பட்டது. கடவுள் தமக்குள்ளே உறைகிறார் என்பதை, சர்வ நிச்சயமாய் அவர் உணர்ந்தது அப்போது தான். 'உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்' என்ற திருமூலர் வாக்கை நிதரிசனமாக அவர் கண்ட சம்பவம் அது. திருநின்றவூரில் மனக்கோயில் கட்டி வாழ்ந்த பூசலார் நாயனார் கதை கற்பனையல்ல, உண்மையே என்பதற்கு ஆதாரம் தந்த அற்புத நிகழ்ச்சி. தம் இதயமெனும் கர்ப்ப கிரகத்தில் குடிகொண்ட மூலவரே உற்சவ மூர்த்தியாக வெளியே புறப்பட்டுச் செல்ல முடியுமா? அப்படிச் செல்வதை ஒருவர் தமக்குத் தாமே பார்க்கத் தான் முடியுமா? முடிந்தது. ஒருநாள் பாய்ந்து பறந்து கொண்டிருந்த குதிரை வண்டியொன்றில் அவர் விரைந்து கொண்டிருந்தபோது... பேரபாயம் ஒன்று அவரை நெருங்கிக் கொண்டிருந்தபோது... ஆ! என்ன ஆச்சரியம்! அரவிந்தர் தெள்ளத் தெளிவாகக் கண்ட அந்த அபூர்வக் காட்சி...

(அமுதம் பெருகும்)



ஜனா

அப்பா, தனியார் நிறுவனத் தலைமைப் பிரதிநிதி. அண்ணன், உதவி போலீஸ் கமிஷனர், அம்மா, பிரபல பள்ளியின் நிர்வாகி. ஹீரோ அஜித் கடைசிப் பையன். நாம் பார்த்து வளர்ந்த பையன் என்ற பாசத்தோடு "டேய், ஜனா" என்றுதான் வீட்டில் எல்லோரும் கூப்பிடுகிறார்கள். ஆனால் அஜித்தின் இன்னொரு முகம் இதற்கு நேர் மாறானது. தம்மைச் சுற்றி நடக்கும் அநீதிகளுக்குக் காரணமான மும்பையின் திரைமறைவு மாஃபியாக்கள், கிரிமினல்களை கதிகலங்க வைக்கும் இளம் தாதாவாக இயங்குகிறார்.

கழுத்து டையைச் சரி செய்தபடி, தமது புதிய புராஜெக்டை, பிரமாதமாக விளக்கும் மார்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ் அஜித், அடுத்த காட்சியில் முரட்டு ஜீன்ஸ், டீஷர்ட்டுக்கு மாறி, கறுப்புக் கண்ணாடி அணிந்து, தோழர்கள் சகிதம் வேட்டைக்கு மோட்டார் சைக்கிளில் பறக்கும்போது, தியேட்டரில் விசில் பறக்கிறது.

ஜனா தமது மகன்தான் என்பது தெரியாமல், உதவி கோரி அஜித்தின் தர்பாருக்குள் அவரது தாயார் வருவதும், தெரிந்த பிறகு, மறு நாள் வீட்டில் ஜனா என்று வழக்கம்போல் பெயர் சொல்லிக் கூப்பிடத் தடுமாறுவதும் உணர்ச்சிகரமான காட்சிகள்.

கூர்மையான பார்வை, கம்பீரமா[ன] உடல்மொழி என்று, அஜித் புதிதாக[த்] தெரிகிறார். முக்கியமாக தமிழ் உச்சரி[ப்]பில் அவர் தேறி வருவதைப் பார்த்[து] நமக்கு ஆனந்தக் கண்ணீர் அரும்புகிற[து].

கண்டதும் காதல் வயப்படும் ம[...] மேகலை பாத்திரத்தில், கவர்ச்சியே[ா] ஆபாசமோ இல்லாமல், குண்டு கன்னங்களோடு சிரித்தே ரசிகர்களை[த்] தம் பக்கம் இழுக்கிறார் சினேக[ா]. ரகுவரன், ராதாரவி, மணிவண்ண[ன்], மனோரமா, மனோஜ், கே. ஜெயன் என்[று] பெரிய நட்சத்திரப் பட்டாளம் இருந்[தா]லும் அவர்களைத் தேவையான அ[ளவு] மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருக்[கும்] இயக்குனர், ஹீரோவை வாழ்த்தி பாடியபடி ஊர் மக்கள் பின் தொட[ரும்] சிந்து வெளிக் காலத்து பழைமைகளை[யு]ம் ஏனோ பிடித்துக் கொண்டிருக்கிறார்.

இரைச்சல்தான் இசை என்று முடி[வு] கட்டிவிட்டார் போலும் தினா. பின்ன[ணி] இசையிலும் காது கிழிகிறது.

உலக கார் பந்தயங்களில் ஃபார்மு[லா] த்ரீயை எட்டிப் பிடிக்க வேகம் காட்[டும்] அஜித்துக்கு, உள்ளூர் சினிமாவி[ல்] தொடர்ச்சியான தோல்விகள். தோல்வி[க]ளின் முடிவில் எதிர்ப்படும் வெற்றியை[ப்] போல, அஜித்துக்கு ஆறுதலான வெற்[றி]ப் படம் ஜனா.

- விஷுவல்தாச[ன்]

● ஆவரெஜ்

மே. 23-2004

மினி கல்கி

ஓவியர் மருது
டாக்டர் கே.ஸ்ரீதர்
டாக்டர் எஸ்.அஷோக்
டாக்டர் எல்.மகாதேவன்
சவேரா ஹோட்டல்ஸ் நீனா ரெட்டி
வழக்கறிஞர் கே.சாந்தி
டாக்டர் இரா.அன்புமணி
பேராசிரியர் கு.ஞானசம்பந்தம்
டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்



எல்லாமே எண்ணம்தான்!

வாழ்வியல் நிபுணர் ஜானகி ரவிச்சந்திரன்



'தொழிலதிபராக வேண்டும்' என்று விடாமுயற்சியுடன் உழைத்து, இன்று 'டெலி ஸ்க்ரீன்ஸ்' நிறுவனத்தின் நிதி நிர்வாக இயக்குநராக உயர்ந்திருக்கும் வாழ்வியல் நிபுணர் ஜானகி ரவிச்சந்திரன், எண்ணங்களின் வீச்சு பற்றி எழுதுகிறார்.



* ஜானகி ரவிச்சந்திரன்

ஒரு சாமியார். பப்ளிசிடி தேடாத, முன் ஜாமீன் தேவைப்படாத, நல்ல சாமியார். ஊருக்கு வெளியே உள்ள தமது ஆசிரமக் குடிலின் வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அந்த வழியே வந்த ஒரு பயணி, சாமியாரைப் பார்த்து பவ்யமாகக் கும்பிடு போட்டான்.

"வணக்கம் சாமி. என் பேரு கந்தன். பூக்காரப் பாளையத்துக்கு வியாபார விஷயமா போறேன். அங்க இருக்கிற ஜனங்க எல்லாம் எப்படிப்பட்டவங்கன்னு சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

"எங்கிருந்துப்பா வர்றே?" என்று திருப்பிக் கேட்டார் சாமியார்.

"நெல்லுக்காரனூர்லேயிருந்து வர்றேன் சாமி. ரொம்ப மோசமான ஊருங்க. ஒரு பய உத்தமனில்லே. ஆத்திர அவசரம்னாகூட உதவிக்கு வரமாட்டாங்க. வெட்டு, குத்துன்னா வெல்லப் பாயசம் மாதிரி. எப்படா அங்கேயிருந்து கிளம்புவோம்னு ஆயிடுச்சு" என்றான்.

"மன்னிச்சுக்கப்பா கந்தா... பூக்காரப் பாளையத்து ஜனங்களும், நீ பார்த்த நெல்லுக்காரனூர் ஜனங்க மாதிரியே இருக்கறதைத் தான் பார்ப்பே" என்றார் சாமியார். ஏமாற்றத்துடன் பயணத்தைத் தொடர்ந்தான் கந்தன்.

'கட்' பண்றோம். இப்ப இன்னொரு ஷாட்! செட்டிங் எதுவும் மாறலை. அதே ஆசிரம குடிசை. நம்ம சாமியார் உட்கார்ந்திருக்கார். ஒப்பன் பண்ணி ஜூம் செஞ்சா, இன்னொரு பயணி சாமியார்கிட்டே பேசிக்கிட்டிருக்கான். அவனும் ஊருக்குப்



புதுசு!

"கும்புடறேன் சாமி. என் பேரு சோலைமுத்து. நான் வியாபார விஷயமா பூக்காரப்பாளையம் போறேன். அங்க இருக்கிற ஜனங்க எல்லாம் எப்படி சாமி?" என்று கேட்டான்.

"நீ எங்கிருந்துப்பா வர்றே?" சாமியார் கேட்டார்.

"நெல்லுக்காரனூர்லேயிருந்து" என்றான் சோலைமுத்து.

"அந்த ஊர் எப்படி?"

"தங்கமான ஊருங்க. நான் அசலூர்க்காரன்தான். இருந்தாலும் என்ன ஒத்தாசைங்கறீங்க. அன்பா, நட்பா பழகுனாங்க. அமைதியான ஜனங்க. அந்த ஊரை விட்டு வரவே மனசில்லே!" என்று சொன்னான்.

"ரொம்ப சந்தோஷம் சோலை முத்து. பூக்காரப்பட்டி ஜனங்களும், நெல்லுக்காரனூர் ஜனங்க மாதிரியே இருக்கிறதைப் பார்க்கப் போறே!" என்றார் சாமியார்.

மிகுந்த உற்சாகத்துடன் புறப்பட்டுச் சென்றான் சோலைமுத்து.

சரி, நீதிப் பகுதிக்கு வருவோம். மற்றவர்களிடம் நாம் எதைக் காண விரும்புகிறோமோ, அதைக் காண்கிறோம், அந்தப் பண்பு அவர்களிடம் இருந்தாலும், இல்லாவிட்டாலும். அந்த அடிப்படை குணாதிசயத்துக்கு நம்முடைய எண்ணங்களே காரணம்.

மகாபாரதக் கதை உங்கள் எல்லோருக்கும் தெரிந்தது தான். துரியோதனன் கண்ணுக்கு நல்லவர்களே தென்படவில்லையாம். தருமனின் கண்ணுக்குத் தீயவர்களே தென்படவில்லையாம். இதன் அடிப்படை என்ன? மனப்பக்குவம்! அதன் விளைவாகத் தோன்றும் எண்ணங்கள். எண்ணங்கள்தான் செயல்களாகின்றன. செயல்கள் பழக்கங்களாகி, பழக்கங்கள் காரெக்டராகி, காரெக்டர் வாழ்க்கையாகி, வாழ்க்கை விதியாகி... இந்த சாப்டர் குளோஸ். விரிவாக அடுத்த பகுதியில்...



எண்ணமே வாழ்வு!

நீங்கள் யார்? ஆசிரியரா? ஓவியரா? ஏழையா? பணக்காரரா? குடிகாரரா? பக்திமானா? நீங்கள் யாராக இருந்தாலும், அது உங்களுக்கு உண்டான எண்ணங்களும், அதனால் ஏற்பட்ட செயல்களும் நிகழ்த்திய விளைவுகளே! சுருக்கமாகச்



சொன்னால், நீங்கள் என்ன நினைத்தீர்களோ, அதன் அச்சு அசல் வடிவம்தான் தற்போதைய வாழ்க்கை. இதுவரையில் நீங்கள் செய்த செயல்களின் தொகுப்புகளை ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை தெளிவாகும். நமது எண்ணங்களைப் பொறுத்தே, பண்புகள் அமைகின்றன. பண்புகளை வைத்தே எண்ணங்கள் அமைகின்றன.

மாங்கொட்டையிலிருந்து மாமரமா? மாமரத்திலிருந்து மாங்கொட்டையா? என்பது போலத்தான் இதுவும். எண்ணத்திலிருந்து பண்பு வந்ததா? பண்பிலிருந்து எண்ணம் வந்ததா? நிச்சயமாகக் கூற முடியாது. இரண்டும் ஒன்றை ஒன்று அடிப்படையாகக் கொண்டவை.

எனவே, எதிர்பார்க்கும் வெற்றியை எளிதில் அடைவதற்கு, நல்ல எண்ணங்களும், அதை அடிப்படையாகக் கொண்ட உயர்பண்பும் மிக அவசியம்.

எண்ணங்களின் விளைவுகள்

எண்ணங்களின் விளைவு இன்பமாகவும் இருக்கலாம்; துன்பமாகவும் இருக்கலாம். வெற்றியாகவும் இருக்கலாம். தோல்வியாகவும் இருக்கலாம். எண்ணங்களின் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை, உங்களுக்குத் தோன்றும் எண்ணங்களின் தன்மையையும், அதனால் மனத்தில் ஏற்படும் தாக்கங்களையும் வைத்தே உணர முடியும்.

ஒருவர் மிகப் பிரபல இதய நோய் நிபுணராகத் திகழ்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அது நேற்று அவர் நினைத்த எண்ணமல்ல. சிறு வயதிலிருந்தே மருத்துவராக வேண்டும் என்ற எண்ணத்துடன் முனைப்பாகப் படித்து, மருத்துவத் துறையில் கடுமையாக உழைத்து, இரவு பகல் பாராமல் சேவை செய்து... இப்படி அவரது எண்ணமும், அதன் தொடர்பான செயலும் ஒரே புள்ளியில் ஆக்கபூர்வமாக இயங்கியதுதான். இது நல்ல எண்ணத்தின், நல்ல செயலின், நல்ல விளைவு. இதனால் அவருக்கும் பெருமை, அவரால் பலருக்கும் பயன்!

கிரிக்கெட் விளையாடும்போது, ஏற்பட்ட சிறுதகராறில், நண்பனையே மட்டையால் தாக்கிக் கொன்ற, கல்லூரி மாணவன் பற்றியும் படிக்கிறோம். பதைக்கிறோம்.

அந்த இளைஞன் சிறு வயது முதலே நண்பனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கவில்லை. ஆனால் சம்பவம் நடந்த அன்று, உணர்ச்சிவசப்பட்ட நிலையில், எண்ணங்கள் எதிர்மறையாகத் தூண்டப்பட்டு



விட்டன.

தீய எண்ணத்தின் விளைவால் நிகழ்ந்த தீய செயலால், அந்த மாண வனுக்குத் தலை குனிவு. பெற்றோருக்கு வருத்தம். அவமானம். கொலையுண்ட இளைஞனின் குடும்பத்தாருக்கு தீராத சோகம்.

நல்ல எண்ணங்களை, படிப்படியாகத் தான் வளர்த்துக் கொள்ள முடியும். தேக்கு மரம் மாதிரி, பார்த்துப் பார்த்து வளர்க்க வேண்டும். ஆனால் தீய எண்ணங்களோ, பார்த்தீனியம் போன்றது. ஒரு சின்ன முளை போதும், புதர்க்காடாக மண்டி விடும்.

தீய எண்ணம் சிறு பொட்டாகத் தோன்றியதுமே, உடனே ஒரு பக்கெட் தண்ணீர் ஊற்றி அணைத்து விட வேண்டும். அதுவே, நல்ல எண்ணம் தோன்றினால், அதற்கும் ஒரு பக்கெட் தண்ணீர் ஊற்றி, விஜய் யூரியா உரம் போட்டு வளருங்கள்.





உடலும் மனசும்

நமது உடல் நம்முடைய மனத்தின் சேவகன். மனத்தின் கட்டுப்பாட்டில்தான் உடல் இயங்குகிறது. மனசு நன்றாக இருந்தால், உடம்பு நன்றாக இருக்கும். உடம்பு ஆரோக்கியமாக இருந்தால், மனசும் ஆரோக்கியமாக இருக்கும்.

அதனால்தான் மருத்துவர்கள் நீண்ட மருந்துச் சீட்டோடு, சின்ன அறிவுரையும் தருகிறார்கள். "உங்களுக்கு வந்திருக்கும் இந்த நோய்க்கு, மன அழுத்தம்தான் முக்கியக் காரணம். *Hurry, worry, curry* இல்லாத அமைதியான வாழ்க்கையை வாழப் பழகுங்கள்." இது காமன் பிரிஸ்கிரிப்ஷன்.

தவறான அல்லது வேண்டாத உத்தரவுகளை மனசு கொடுக்கிறபோது, சேவகனாகிய உடல் அதன்படி செயல்படுகிறது. அதனால் உண்டாகும் விளைவுகளுக்கு சேவகனா பொறுப்பு? தவறான உத்தரவு கொடுத்த எஜமானன் தானே பொறுப்பு? சேவகனின் செயல் பாட்டை செம்மைப் படுத்த, செம்மையான உத்தரவுகளை எஜமானன்தானே வழங்க வேண்டும்?

மனசு, செம்மையான உத்தரவுகளை மட்டுமே தருவதற்கு முறையான பயிற்சி தேவை. ஏற்கெனவே ஒரு மாதிரியான ரூட்டிலேயே பயணப் பட்டிருக்கும் மனசானது, ஆரம்பத்தில் தகராறு செய்யும். பழைய பயிற்சியைக் கை விடவும், புதிய பயிற்சியை ஏற்றுக் கொள்ளவும் மறுக்கும். ஆனால் அதையும் மீறி கடிவாளம் போட்டோ, சவுக்கைச் சொடுக்கியோ எண்ணங்களை நல்வழிப்படுத்துவதுதான் வாழ்க்கையின் சவாலே!

ஏற்றம் தரும் எண்ணங்கள்

ஒவ்வொருவருக்கும் மூன்று விதமான எண்ணச் சித்திரங்கள் உண்டு. ஒன்று, நம்மைப் பற்றி நாம் நினைப்பது; இரண்டாவது நம்மைப் பற்றி மற்றவர்கள் நினைப்பது; மூன்றாவது நம்மைப் பற்றி, பிறர் எண்ணம் கொண்டிருப்பதாக நாமே எண்ணிக் கொள்வது.

இந்த மூன்றுவித மான சித்திரங்





களும், ஒன்றாகச் சித்திரிக்கப்படும்போது, நம்முடைய எண்ணங்கள் நேர்க்கோட்டில் உருவானதாகவும். நேர்மையாகவும் இருக்கும்.

நம்முடைய எண்ணமும், நம்மிடம் பழகுபவர்களின் எண்ணமும், ஒரு அலை வரிசையில் இயங்க மிக எளிமையான டெக்னிக், சிநேகபூர்வமான உடல்மொழி பேசுவதே! முன்பின் தெரியாத புதியவரிடம் பழகும் முன், சின்ன புன்னகை, அன்பான கைகுலுக்கல் போன்றவை உதவும்.

"நான் அனைவருமே விலங்குகளின் சுபாவக் கூட்டாகப் படைக்கப்பட்டிருக்கிறோம்" என்கிறார் சார்லஸ் டார்வின். நரியின் சூழ்ச்சி, நாயின் குழைவு, சிங்கத்தின் கர்வம், யானையின் உறுதி, பசுவின் சிநேகம், குரங்கின் சேட்டை... இப்படி பற்பல மிருகங்களின் பண்புகள், சிற்சில சதவிகிதங்களில் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கின்றது.

நீங்கள் எந்த விலங்கின் சுபாவத்தைப் பிரதிபலிக்கிறீர்களோ, எதிராளியும் அதே விலங்கின் குணத்துடனேயே உங்களை அணுகுவார். நீங்கள் நரி போலத் தந்திரம் செய்தால், அவரும் அதைப் போலவே சூழ்ச்சி செய்வார். பசு போலப் பாசம் காட்டினால், எதிராளியும் அன்பு காட்டுவார். எந்த உறவும் உங்கள் எண்ணத்தின் பிரதிபலிப்பே என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்களுடைய எண்ணங்கள் எப்போதும் முன்னேற்றத் தளத்தில், ஆக்கபூர்வ அரங்கத்தில், மாறுபட்ட கோணத்தில் அமையும்படி இருந்தால், வெற்றி நிச்சயமாகும்.

பிரபல செருப்புக் கம்பெனி ஒன்று பின்தங்கிய கிராமம் ஒன்றுக்கு, தம்முடைய விற்பனைப் பிரதிநிதிகளில் இருவரை அனுப்பி வைத்தது. ஊரைச் சுற்றிப் பார்த்த முதலாமவன் உடனே தந்தி அடித்தான். "இந்த ஊரில் காலணி விற்பனை செய்வது மிகக் கடினம். இங்கு யாருமே செருப்பு அணிவதில்லை." அதே ஊரிலிருந்து இரண்டாவது விற்பனைப் பிரதிநிதியும் தந்தி கொடுத்தான்.

"இங்கு யாருமே செருப்பு அணியவில்லை.



எனவே.. இங்கே காலணி விற்பனை செய்வது மிக மிகச் சுலபம்...'' எப்போதுமே சாதகமான அணுகுமுறையுடன் பாஸிட்டிவ்வாக யோசிப்பது நல்லெண்ணங் களை வளர்க்கும். எல்லா விதத்திலும் ஏற்றம் தரும்.



எண்ணங்கள் தூய்மை பெற சில பயிற்சிகள்

★ முதல் பயிற்சி, போர்பந்தர் மகான் சொல்லிக் கொடுத்த 'மூன்று குரங்கு பொம்மை' தத்துவம்தான். தீயவற்றைப் பார்க்காதே, தீயவற்றைக் கேட்காதே, தீயவற்றைப் பேசாதே! 'எது தீயது?' என்றே தெரியவில்லை என்ற குழப்பம் நேருவது சகஜம்தான். உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கும், மன அமைதிக்கும், கைப்பணத்துக் கும், குடும்ப கௌரவத்துக்கும், எதெல்லாம் வேட்டு வைக்கிறதோ, அது எல்லாமே தீயவைதான்.

★ நம்பிக்கை கொள்வது இரண்டாவது கட்டம். இதற்கு, தேடுதல் என்ற பயிற்சி உதவும்.

உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன? அண்ணாநகரில் ஒரு வீடு, பிலானியில் ஒரு சீட்டு, அலுவலகத்தில் பதவி உயர்வு.. இது மாதிரியா? கோலிவுட் இயக்குநராவது, நாடறிந்த எழுத்தாளராவது, புகழ் பெற்ற அரசியல்வாதியாவது... இந்த ரேஞ்சா? உங்கள் கனவு என்ன? அதை நேர்மையாக அடைவது எப்படி? அப்படி அடைய நினைக்கும்போது, கோணல்மாணலாக கிராஸ் செய்யும் அற்பப் பிரச்னைகளை எப்படிச் சமாளிப்பது? இது போன்ற கேள்விகளை எழுப்பி, அதற்கான பதில்களைத் தேடிக் கொண்டே இருங்க.

மனத்தில் சரியான, ஏற்புடைய பதில் கிடைக்கும்வரை, தேடுதலையும் கேள்வியையும் விட்டுவிடாதீர்கள். உங்களது முயற்சிகளில் உதவிகரமாக வரக் கூடியவர்கள் என்று நீங்கள் நினைப்பவர் களுடன் உங்கள் ஒட்டுதல்களை அதிக மாக்கிக் கொள்ளுங்கள். ''இவர்கள்


மினி கல்கி



நமக்கு உதவுவார்கள்'' என்று பரிபூரணமாக நம்பி செயல்படுங்கள். அந்த நம்பிக்கை, உங்களுடைய காரியங்கள் கை கொடுக்கும்.

'குட்வில்' எனப்படும் நல்ல அபிப்ராயத்தைக் கொள் தயங்கக் கூடாது. யாரைப் பற்றியும், எதைப் பற்றியு 'எடுத்தேன், கவிழ்த்தேன்' போக்கு கூடாது. எல்லோரிடமு இனிமையான எண்ணங்கள் கொண்டே பழகுங்கள். உங்க செயல்பாட்டுக்குப் பிரச்னை தரக் கூடியவர்கள் என்று நீங்க சந்தேகப்படுபவர்களிடமும், நல்ல அபிப்ராயத்துடனேயே நடக்க வேண்டு அவர்களை உங்களுடைய உயர்வுகளுக்குத் தலையீடாகவே வெற்றிகளுக்கு தடைக் கற்களாகவோ நினைக்கக் கூடாது. ''அந்தத் தடை கற்களும் எனக்குப் படிக்கற்களாக மாறும்'' என்ற உணர்வுட செயல்படுங்கள். மறந்தும் அவர்களை பற்றித் தாழ்வாகவோ, பொறாமையாகவே எண்ணம் வளர்க்காதீர்கள். வாழ்க் யின் அஸ்திவாரத்தை பலப்படுத்து வேலையில் ஈடுபட்டிருக்கும்போ தலைமேல் பறக்கும் வெட்டுக் கிளிக பற்றிக் கவலை கொள்ளலாமா?



★ நேர்முகமாகச் சிந்திக்கத் தொடங்குங்க எந்தப் பிரச்னையையும் நேரடியாக அணுகுங்க கொக்கு தலையில் வெண்ணெய் வைக்கி வேலையே வேண்டாம். நேர்முகமாகச் சிந்திக் அமைதியான மனம் தேவை. மன அமைதியாக இருக்க, பழிவாங்கு போக்கு கூடாது. 'பழிக்குப்பழி 'சவால் மாமே' போன்ற விஷய கள், மெகா சீரியல்களுக்குத்தா வாயக்கு. எதிராளியைத் திணறடி கும் யுக்திகளில், நம்முடைய ஆக்கபூர்வமான ஆற்றல் அனை தும் கரைந்து போகும். அவற்றி நமக்கு இறுதி வெற்றி கிடைக்கு என்றும் சொல்ல முடியாது ஆனால் மன்னிக்க, மறக்க, ஒ விநாடி போதும். அதற்குண்டா

க்குவத்தை, நல்ல எண்ணங்கள் தந்துவிடும்.

★ 'நோக்கம் இருக்கா?' டெஸ்ட் மிக அவசியமானது. உங்கள் மனத்தில் தோன்றும் ஒவ்வொரு எண்ணத் துளிக்கும் நல்ல நோக்கம் இருக்க வேண்டும். நோக்கமும், அவசியமும் இல்லாத எண்ணங்கள், பாதை யில்லாத பயணத்தைப் போன்றது.

எண்ணங்களைக் கூர்மைப் படுத்த அவற்றை உங்களுடைய இலக்கின் மீதே தொடர்ந்து செலுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

அதைத்தான் டாக்டர் அப்துல் கலாம், 'கனவு காணுங்கள்' என்கிறார். நாம் உடனே தூங்கப் போய் விடுகிறோம்.

★ உங்கள் லட்சியம் நிறைவேறும் வரை, அந்த எண்ணத்தை விட்டு அங்குலமும் நகராதீர்கள். மனம் முழுக்க ஒரே எண்ணம், பேச்சிலும் மூச்சிலும் அதே நினைப்பு; 'என்ன செய்ய? ஏது செய்ய?' என்று தவிப்பு; வெற்றி கிடைத்ததும், அடுத்தது என்ன என்று பரபரப்பு; கிடைத்ததைத் தக்க வைத்துக் கொள்ள முனைப்பு, என தொகுதியைச் சுற்றி சுற்றி வரும் வேட்பாளனைப் போல, சுழன்று கொண்டே இருங்கள். வெற்றி நிச்சயம்.



எதிர்மறை எண்ணங்கள்

சமீபத்தில் தஞ்சாவூரில் நடந்த சம்பவம். டீவியில் கூட காட்டினார்கள். தான் காதலித்த பெண்ணுக்கு வேறொரு இடத்தில் திருமணம் என்றதும், மனமுடைந்து போனான் அந்த இளைஞன். இருநூறு அடிக்கும் உயரமுள்ள டீவி. டவரில் மடமட என்று ஏறி, தற்கொலை செய்துகொள்வதாக மிரட்டினான். அவனைக் காப்பாற்றும் முயற்சியில் இன்னொரு நபர் டவரில் ஏறிவிட, ரோஷம் தாங்காத இளைஞன் தலைக்குப்புற விழுந்து, ஏணியிலேயே மாட்டிக் கொண்டு, பிடிபட்டான். தர்ம அடி பட்டான்.

இந்தக் காதல் மன்னன், சாதாரண மன நிலையில் இருக்கும்போது, அந்த டீவி. கோபுரத்தின்மீது அத்தனை லாகவமாக ஏற முடியுமா?

அந்த உத்வேகத்தையும், விடாமுயற்சியையும், ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியிருந்தால், இமயமலை உச்சிக்கு ஏறி சாதனை படைத்

மினி கல்கி

திருக்க மாட்டானா? தேவையில்லாத, வீணான முயற்சியில் எண்ணங்களை ஈடுபடுத்தியதால், காதலியும் கிடைக்காமல் கம்பியும் எண்ணிக் கொண்டிருக்கிறான்.



எதிர்மறை எண்ணங்கள் அகல...

★ நலவாழ்வுக்கு எதிரானவற்றைப் பேசக் கூடாது நலவாழ்வுக்கு எதிரான சொற்களைக் கேட்கக் கூடாது. நலவாழ்வுக்கு எதிரான எதையும் பார்க்கக் கூடாது.



★ தீய அல்லது எதிர்மறையான எண்ணங்கள் தோன்றினால், உடனே அத்தகைய எண்ணங்களை மாற்றுவதற்கு உகந்த சூழ்நிலையையும், உறவுகளையும், நண்பர்களையும் தேடிச் செல்ல வேண்டும். எண்ணங்கள் தோன்ற ஆழ்மனத் தூண்டுதலோடு, பிற மனத் தூண்டுதலும், சூழ்நிலையும் பெரும்பங்கு வகிக்கின்றன. நீங்கள் தங்கி இருக்கும் அறை நண்பர்கள், இரவு பகல் தெரியாமல் சீட்டாடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். 'பதிமூணு இலை' பிடிக்கவே தெரியாத உங்களையும் மங்காத்தா ஆட வைத்து விடுவார்கள். காரணம் சூழ்நிலை, பிற மனத் தூண்டுதல்! முதல் வேலையாக, வேறு நல்ல அறையாகப் பார்த்து மாற்றிக் கொள்வது நல்லது.



★ சமுதாய ஏற்புடைய, சட்ட பூர்வமான நோக்கங்களை மட்டுமே எண்ணங்களாக வளப்படுத்திக் கொள்ளவும்

★ 'இலக்கு இதுதான்' என்று நிச்சயமானதும் அந்த லட்சியத்தை அடைய தேவையான அனைத்துத் திறமைகளையும் வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

★ "உன்னாலே முடியாது. வீணா நஷ்டப்பட


போரே. வேண்டாத வேலை" என்றெல்லாம் ஊக்கம் தலைக்கும் விதமாகப் பேசுபவர்களிடமிருந்து நூறு மீட்டர் தள்ளியே இருங்கள்.

★ செக்குமாட்டுச் சிந்தனையால், மனம் களைப்படையும். மனம் களைப்படைந்தால், புதிய யுக்தி தோன்றாது. *Think differently.* புரட்டிப் பார்த்து, ரூட் மாற்றி, மாற்றி யோசித்தால், விஷயம் கிளிக் ஆகிவிடும். கோணம் மாற்றினால், ஓணம் பண்டிகைதான்.

★ சிறந்த எண்ணங்கள் மனத்தில் தோன்றும்படி, சிந்தனைகளை ஒரு நிலைப்படுத்த வேண்டும். அதாவது, எல்லா எண்ணக் கதிர்களையும் உங்கள் லட்சியம் என்கிற ஒரே புள்ளியில் குவிக்க முடியும். சூரிய ஒளியில் ஒரு காகிதத்தை வைத்துப் பாருங்கள், ஒன்றும் ஆகாது. அதுவே ஒரு லென்ஸை வைத்து, கதிர்களைக் குவிக்கும்போது, காகிதம் பட்டென்று பற்றிக் கொள்கிறது.

★ எண்ணக் குவிப்பை ஒரு முகப்படுத்த, யோகா, தியானம், விளையாட்டு, கலைகளில் ஈடுபாடு போன்றவை உதவும்.

★ எண்ணங்கள் வளம் பெற மிகவும் உதவியாக இருப்பது, கடவுள் நம்பிக்கை. "நாள்தோறும் நாள்தோறும் எல்லாவிதத்திலும் மேலும் மேலும் முன்னேறி விடுகிறேன். அதற்கு உறுதுணையாகக் கடவுள் இருக்கிறார். எனக்கு நல்வழியை மட்டுமே காட்டுவார். எல்லா ஜீவன்களிலும் இறைத்தன்மையைக் காண்கிறேன். நான் யாருக்கும் பொல்லாங்கு செய்ய மாட்டேன். எனக்குப் பொல்லாங்கு செய்யவும் யாருமில்லை. என்னுடைய ஒவ்வொரு அசைவையும் கடவுள் கண்காணிக்கிறார். நான் அவரது சித்தத்துக்கு ஏற்ப நடப்பேன்" என்ற கோட்பாடு, ஆத்ம பலம் தந்து எண்ணங்களை ஏற்றம் பெற வைக்கும்.



பிரசித்தி பெற்ற ஜென் கதை

வழிப்போக்கன் ஒருவன் அடர்ந்த காட்டின் வழியே நடந்து கொண்டிருந்தான். தாகமும் களைப்பும் அவனைக் கொன்றன. ஒரு பெரிய மரத்தடியில் படுத்து இளைப்பாறினான். 'சிலு சிலு' என்ற காற்று அவனை அமைதிப்படுத்தியது.

"அடடா! இப்போது இந்த மரத்தில் இளநீர் காய்த்திருந்தால் எவ்வளவு ஜோராக இருக்கும்?" என்று நினைத்தான்.

மினி கல்கி



என்ன ஆச்சரியம்! மரம் முழுக்க செவ்விளநீர்க் குலைகள் தொங்கின.



'மடமட' என்று மரத்தில் ஏறி, இளநீர் வெட்டி, தாகம் தீரக் குடித்தான்.

"அட! அதிசய மரமா இருக்கே. நாக்குக்கு ருசியா உணவு கிடைச்சா எப்படியிருக்கும்?"னு நினைச்சான். நினைச்சு முடிக்கக் கூட இல்ல அதுக்குள்ளே, பெரிய வெள்ளித் தட்டுல, பத்து வகைப் பதார்த்தத்தோட அறுசுவை உணவு சுடச்சுடக் கிடைச்சது. அள்ளி அள்ளி ஆசையாகச சாப்பிட்டான். ஏப்பம் விட்டவன், அழகான மனைவி, பெரிய வீடு, நாலு கறவை மாடு, சாரட் வண்டி, ஜாதிக்குதிரை, பெட்டி நிறையப் பணம்னு மனசுக்குப் பிடிச்சதை எல்லாம் நினைச்சான்... விட்டலாச்சார்யா பட மாதிரி, அதுஅது அம்சமா வந்து நிக்குது. வழிப் போக்கனுக்கு குஷி தாங்கலை.

"அப்படிப் போடு... அப்படிப்போடு"னு 'கில்லி' விஜய் மாதிரி குதியாட்டம் போட ஆரம்பிச்சான். திடீர்னு அவனுக்கு ஒரு கவலை.

"ஐயோ கடவுளே! நட்ட நடுக் காட்டுலே இருக்கோமே! இந்த சுகத்தை எல்லாம் அனுபவிக்கிறதுக்குள்ளே காட்டுயானை வந்து மிதிச்சுட்டா, என் கதி என்ன?"னு நினைச்சுட்டானாம். பாவிப் பயல்!

அடுத்த விநாடியே, மதம் பிடிச்ச காட்டு யானை ஒண் ...

பாவம்! அந்த வழிப் போக்கனுக்குத் தெரியாது, அவன் பார்த்த மரம் சாதாரணக்காட்டு மரமில்லை, 'ட்ரீ ஆஃப் தாட்ஸ்' என்று!



தொகுப்பு : **அனுராதா சேகர்**

அட்டைப்படம் : **மருது**

கார்ட்டூன்ஸ் : **ஸ்யாம்**

படம் : **யோகா**



அவர் எங்கே?

அமரர் கல்கி

என்னை வளர்த்த தந்தை மந்திரமூர்த்தி சிறந்த கல்வி அறிவு பாய்ந்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் சமய சம்பந்தமான பல நூல்களை ஆராய்ந்து படித்து உணர்ந்தவர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர் இவர்களுடைய திருவாக்குகள் அடங்கிய பல ஆங்கில நூல்கள் வைத்திருந்தார். தமிழ்ப் பெரியோர்களிலே தாயுமான சுவாமிகளிடத்திலும், இராமலிங்க சுவாமிகளிடத்திலும் அவருக்கு பக்தி அதிகம். அவர்களுடைய பாடல்களை அடிக்கடி பாடுவார். முக்கியமாக,

"எல்லாம் உன் அடிமையே
எல்லாம் உன் உடைமையே
எல்லாம் உன்னுடைய செயலே!"

என்னும் வரிகளை அடிக்கடி அவர் பாடக் கேட்டிருக்கிறேன்.




இறைவன் வகுத்தபடியே இவ்வுலகிலே எல்லாக் காரியங்களும் நடக்கின்றனவென்றும், அவனன்றி ஓரணுவும் அசையாது என்றும் உறுதியாக நம்பினார். ஆதலின், கடவுளைப் பிரார்த்திப்பதிலேகூட, "எனக்கு இம்மாதிரி கருணை செய்; இந்தப் பாக்கியத்தைக் கொடு!" என்று கேட்பது அறியாமையென்று சொல்வார். நமக்கு எந்த விதத்தில் அருள்புரிய வேண்டும் என்பது, எல்லாம் அறிந்த ஆண்டவனுக்குத் தெரியாதா? நாம் சொல்லித் தான் அவருக்குத் தெரிய வேண்டுமா? கஷ்டமோ, சுகமோ, துன்பமோ, இன்பமோ எது வந்தாலும் கடவுளுடைய சித்தம் என்று நம்பி அனுபவிக்க வேண்டும். இந்த நம்பிக்கை ஒருவருக்கு இருக்குமானால், அதிர்ஷ்டம் வரும்போது அடக்கத்துடன் அனுபவிக்கலாம். துர்ப்பாக்கியம் நேரும்போது அதைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளும் சக்தி உண்டாகும். கடவுளைப் பிரார்த்திப்பது ஏதோ ஒரு லாபத்தை நாடி அல்ல. ஆலயத்துக்குப் போவது ஆண்டவனிடம் வரம் வேண்டுவதற்காக அல்ல. "ஈசனே! உன் சித்தம் எதுவோ அதுவே என் பாக்கியம்!" என்பதுதான் உண்மையான பிரார்த்தனை. இறைவனை எண்ணும்போது மனத்தில் உண்டாகும் அமைதியே பிரார்த்தனையின் பெரும் பயன்.

'அமரதாரா' (முதல் பாகம்) நாவலிலிருந்து

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 23.5.2004

கோகுலம்

ஜூன் 2004 ரூ.6/- மட்டுமே



இந்தியாவில் ஓர் அண்டார்டிகா!

- கவர் ஸ்டோரி

1000/- ரூபாய் பரிசுப் போட்டி

பல் துலக்கும் நாய்!

- நெட் பிட்ஸ்

முருங்கை மரப் பேய்!

- திக்...திக்... கதை

தையற்சிட்டு

- கட்டுரை

கோடை விடுமுறைப் போட்டி - II



லாரா - போஸ்டர்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG
(CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 *
Registered as a Newspaper in Srilanka

